விலை : 20.00 website : www.valampurii.lk Registered as a Newspaper in Srilanka
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/- மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆவணி 18 சனிக்கிழமை (03.09.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 259

# பான் கீ மூனின் கவனத்தை ஈர்க்க இரு இடங்களில் மக்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

இலங்கை மீது சர்வதேச விசாரணை கோரியும், வடக்கு கிழக்கில் தொடரும் சிங்கள, பௌத்தமயமாக்கலை நிறுத்த வலியுறுத்தியும் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் கவனத்தை ஈர்க்கும் வகையில் இரு இடங்களில் நேற்றையதினம் போராட்டம் இடம்பெற்றது.

யாழ்.பொது நூலகம் முன்பாகவும் யாழ்.மாவட்டச் செயலகம் முன்பாகவுமே இந்த போராட்டங்கள் நடைபெற்றுள்ளன. 23ஆம் பக்கம் பார்க்க....



# பாதிக்கப்பட்டோர் ஏற்கும் வகையிலேயே போர்க்குற்ற விசாரணை

## கண்டுகொள்ளாத பான் கீ மூன் ஏமாற்றமடைந்த பாதிக்கப்பட்டோர்!

(யாழ்ப்பாணம்)

ஐ.நா செயலாளர் பான் கீ மூன் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களை கண்டு கொள்ளாது சென்றமை மக்களை விசனமடையச் செய்துள்ளது.

யாழிற்கு நேற்று மதியம் 1.20 மணியளவில் வருகைத் தந்த அவர் யாழ். மாவட்ட செயலகத் திற்கு முன்பாக உள்ள வடமாகாண ஆளுநரின் வாசஸ்தலத்திற்கு விஜயம் மேற்கொண்டி 24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் தீர்வு கிடைக்காவிடின் நிரந்தர அமைதி ஏற்படாது!

### கூட்டமைப்பு மூனிடம் சுட்டிக்காட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்டோர் ஏற்கும் வகையிலேயே போர்க்குற்ற விசாரணை

## விக்னேஸ்வரனிடம் உறுதியளித்தார் ஐ.நா. செயலர்



(யாழ்ப்பாணம்)

இலங்கை மீதான போர்க் குற்ற விசாரணை பாதிக்கப் பட்ட மக்கள் ஏற்றுக்கொள் ளக்கூடிய வகையிலேயே அமையும். அதற்காக ஐ.நா. பாடுபடும் என ஐக்கிய நாடு கள் சபையின் பொதுச் செய லாளர் பான் கீ மூன் வடக்கு மாகாண முதலமைச்சரிடம் உறுதியளித்துள்ளார்.

04ஆம் பக்கம் பார்க்க....

## கண்டுகொள்ளாத பான் கீ மூன் ஏமாற்றமடைந்த பாதிக்கப்பட்டோர்!

(யாழ்ப்பாணம்)

ஐ.நா செயலாளர் பான் கீ மூன் யாழ்ப்பாணத்திற்கான விஜயத்தின் போது பாதிக்கப்பட்ட மக்களை கண்டு கொள்ளாது சென்றமை மக்களை விசனமடையச் செய்துள்ளது.

யாழிற்கு நேற்று மதியம் 1.20 மணியளவில் வருகைத் தந்த அவர் யாழ். மாவட்ட செயலகத் திற்கு முன்பாக உள்ள வடமாகாண ஆளு நரின் வாசஸ்தலத்திற்கு விஜயம் மேற்கொண்டி

24ஆம் பக்கம் பார்க்க....

## அரசியல் தீர்வு கிடைக்காவிடின் நிரந்தர அமைதி ஏற்படாது!

### கூட்டமைப்பு மூனிடம் சுட்டிக்காட்டு



24ஆம் பக்கம் பார்க்க....

## வடக்கு மாகாணத் தீர்மானம் விக்னேஸ்வரனால் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் கடத்தப்பட்டு காணா மல் போனவர்களுடைய விபரங்கள், இராணுவம் பிடித்து வைத்துள்ள காணிகள் தொடர்பான விபரங்கள் மற்றும் தமிழர்கள் மீது மேற்கொள் ளப்பட்டது இனப்படுகொலையே என்ற வடக்கு மாகாண சபையின் தீர்மானம் என்பன ஐக்கிய நாடுகள் சபையின்

23ஆம் பக்கம் பார்க்க....

## ஐ.நா சபையின் தவறே இறுதி யுத்த பேரவலம்

### ஒப்புக்கொண்டார் பான் கீ மூன்



(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற இறுதியுத்தத்தில் ஐக்கிய நாடு களின் தலையீடு போதுமானதாக இருந்திருக்கவில்லை.

ஐ.நா. பாரிய தவறுகளை இழைத்திருக்கிறது அது சிரத்தை யுடன் செயற்

23ஆம் பக்கம் பார்க்க....

## மூன்று மாத காலப் பகுதிக்குள் அகதி முகாம் வாழ்வுக்கு முடிவு

(கொழும்பு)

அடுத்துவரும் மூன்று மாத காலப்பகுதியில் வடக்கில். அகதி முகாம்களில் வாழும் மக்களுக்குத் தேவையான காணிகளைப் பெற் றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை கள் முழுமையாக நிறைவு செய் யப்படும் எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அளவை நடவடிக்கைகளில் ஏற்பட் டுள்ள தாமதங்கள் காரணமாக அந்த நடவடிக்கைகள் தாமதமடைந் திருந்தபோதும் சகல காணிகளை யும் அடையாளம் காணும் நடவடிக் கைகள் தற்போது நிறைவடைந் துள்ளதாகவும் இது தொடர்பாக முகாம் களில் உள்ள மக்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டிருப்பதாக வும் தெரிவித்தார்.

(விரிவான செய்தி 3ஆம் பக்கத்தில்)

### ஜனாதிபதி உறுதி



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐ.நா செயலர் பான் கீ மூன் சபாநாயகர் சந்திப்பு



இலங்கைக்கு வருகை தந்துள்ள ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன், பாராளுமன்றத்தின் சபாநாயகர் கருஜயசூரிய மற்றும் அரசியல் கட்சி தலைவர்கள் சிலரை நேற்றுக் காலை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பில் அவைத் தலைவர் லக்ஷமன் கிரியெல்ல, திலங்க சுமதி பால, நிமல் சிறிபால டி சில்வா, ரவூப் ஹக்கீம், டக்ளஸ் தேவானந்தா, ஈ.சரவணபவன் உள்ளிட்டவர்கள் பங்கேற்றுள்ளனர்.


வடமராட்சியில்....
மகளிருக்கான
புதிய பயிற்சி வகுப்புக்கள்
ஆரம்பம்

ஃபேஷியல், மேக்கப்,
கேக் ஐசிங், தையல்
தலைமுடி தொடர்பான பயிற்சிகள்
இன்னும் எமது வழமையான பயிற்சிகள்



05.09.2016
திங்கள் 10 மணி

அலுவலகத் தொடர்புகள்
0775259954
(9am - 5pm)

(சி-5627)

தூரிகை
மத்திய கல்லூரி வீதி, நெல்லியடி


## திருத்தம்
## மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு
## வடக்கு மாகாணம்

**வடக்கு மாகாணப் பாடசாலைகளில் நிலவும் இலங்கை ஆசிரியர் சேவையின் 3ம் வகுப்பு-1 (அ) தரப் பதவி வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016 (II)**

மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சை தொடர்பாக, 2016.08.04ம் திகதி வியாழக்கிழமை "தினக்குரல், உதயன், வலம்புரி" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரம் சார்பாக.

வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சைக்குரிய விளம்பரத்தின் பந்தி 04.5 ஆனது பின்வருமாறு திருத்தப்படுகிறது.

■ **23.09.2016ம் திகதியன்று விண்ணப்பதாரி 18 வயதிற்கு குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.**

மேலும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை தொடர்பான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

**வடக்கு மாகாணப் பொதுச் சேவையின் மாகாண உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் தரம் III பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை-2016**

மேற்படி ஆட்சேர்ப்புப் பரீட்சை தொடர்பாக, 2016.09.01ம் திகதி வியாழக்கிழமை "தினக்குரல், உதயன், வலம்புரி" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல் மற்றும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட விளம்பரம் சார்பாக.

வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சைக்குரிய விளம்பரத்தின் பந்தி 04.5 ஆனது பின்வருமாறு திருத்தப்படுகிறது.

■ **30.09.2016ம் திகதியன்று விண்ணப்பதாரி 21 வயதிற்கு குறையாதவராகவும், 40 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.**

மேலும் வடக்கு மாகாண இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட மேற்படி பரீட்சை தொடர்பான விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதனை இத்தால் அறியத்தருகின்றேன்.

ரூபினி வரதலிங்கம்
செயலாளர்,
மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்.

(சி-5628)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 15-07-1930 | மறைவு 04.08.2016



## கொத்தர் சின்னம்மா

04.08.2016 இல் எம்மை விட்டுப் பிரிந்த அன்னையின் இழப்பால் துயருற்றிருந்த வேளை எமக்கு பல வழிகளிலும் உதவி புரிந்தோர், ஆறுதல் கூறியோர், இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம். இன்று (03.09.2016) சனிக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

"அன்பகம்"
கைதடி மேற்கு, கைதடி.

இ.விதுரன்
(பேரன்)

(5802)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத்தள ஊடுருவல்களை தடுக்க புதிய சட்டம் விரைவில்

அதிகரித்துள்ள இணையத்தளங்கள் மீதான ஊடுருவல்கள் மற்றும் இணையம் மூலமான மிரட்டுதல்களை தடுப்பதற்கு புதிய சட்டம் அறிமுகப்படுத்தப்படவிருப்பதாக தொலைத்தொடர்புகள் மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கையாளும் குற்றவியல் சட்டம் மீளமைக்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இது தொடர்பான சட்டமொன்றைத் தயாரிக்கும் பணிகளில் இலங்கை கணனி அவசர தயார் நிலைக் குழு ஈடுபட்டிருப்பதாகவும் இவ்வாறு தயாரிக்கப்படும் திருத்த வரைபு நீதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும், அதன் பின்னர் அனுமதிக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இணையத்தளம் 17 வயது சிறுவன் ஒருவனால் சட்டவிரோதமான முறையில் ஊடுருவப்பட்டிருந்தமை குறித்து கேட்டபோதே அமைச்சர் இந்தத் தகவல்களைத் தெரிவித்தார். ஜனாதிபதியின் இணையத்தளம் உரிய முறையிலான பாதுகாப்பைக் கொண்டிருக்கவில்லை.

அடிப்படையான ஊடுருவல் முறைகளைக் கொண்டே இந்த இணையத்தளத்தை ஊடுருவ முடியும். அந்த சிறுவன் திறைமையானவன். அவர் சட்டம் தொடர்பில் தெரியாமல் இருப்பார். கடந்த அரசாங்கத்தின் காலத்தில் இவ்வாறான சம்பவம் இடம்பெற்றிருந்தால் என்ன நடந்திருக்கும் என யோசித்துப் பாருங்கள். (இ-10)




# மூன்று மாதங்களுக்குள் காணிகள் முழுமையாக திருப்பியளிக்கப்படும்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

(கொழும்பு)

**வடக்கில் படைகளின் வசமுள்ள பொதுமக்களின் காணிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் திருப்பியளிக்கப்படும் எனவும் நல்லிணக்க நடவடிக்கைகளை பாதிக்கும் வண்ணம் ஊடகங்கள் செயற்படக்கூடாது என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

ஊடகங்களின் பிரதிநிதிகளை நேற்று சந்தித்த அவர், இளைய சமூகத்துக்கு ஊடகங்கள் பிழையான அர்த்தங்களை வழங்கக்கூடாது என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

நல்லிணக்க நடவடிக்கைகள், வடக்கில் பொது மக்களின் காணிகள் மீண்டும் கையளிக்கப்படல், மீள்குடியேற்றம்,புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக ஐ.நா. செயலாளர் பான் கீ மூனிடம் விளக்கமளித்ததாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

வடக்கில் காணி உரிமையாளர்களிடம் அவர்களின் காணிகள் இன்னும் மூன்று மாதங்களுக்குள் முழுமையாக திருப்பியளிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு எம்.பிக்களும் வடக்கின் முதலமைச்சரும் வேறுபட்ட நிலைப்பாடுகளை கொண்டிருப்பது குறித்து வினவப்பட்ட போது அதற்கு பதிலளித்த ஜனாதிபதி, வேறுபட்ட கருத்துக்களை கொண்ட வடக்கு, தெற்கில் உள்ளவர்களை ஒரு மையத்துக்கு கொண்டு வரும் நடைமுறை அரசியல் சுயமாகவே வெற்றியளிக்கும் என்று ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.(இ-10)

## எனக்கு கால அவகாசம் வேண்டும்; மூனிடம் ஜனாதிபதி வேண்டுகோள்



இலங்கையில் பூரண அமைதியை நிலைநாட்ட ஐ.நா.பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் கால அவகாசம் கேட்டுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நீண்டகால போராட்டத்தில் இருந்து தற்போது தான் வெளியில் வந்துள்ளோம். அதிலிருந்து முழுமையாக விடுபட சிறிது கால அவகாசம் வழங்க வேண்டும் என ஐ.நா.செயலாளரிடம் கோரியதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

டிஜிட்டல் மற்றும் அச்சு ஊடக தலைமை அதிகாரிகளிடம் ஜனாதிபதி உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று இதனை தெரிவித்துள்ளார். (இ-10)

## கலாநிதி ஜெபநேசனுக்கு சாகித்தியரத்னா விருது



இலங்கையில் இலக்கியத்துறையில் வழங்கப்படும் அதியுயர் விருதான சாகித்தியரத்னா விருது தென்னிந்தியத் திருச்சபையின் முன்னாள் பேராயர் கலாநிதி சு. ஜெபநேசன் அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

வருடந்தோறும் சிங்கள மொழிமூலப் படைப்பாளி ஒருவருக்கும் தமிழ் மொழி மூலப் படைப்பாளி ஒருவருக்கும் ஆங்கில மொழி மூலப் படைப்பாளி ஒருவருக்கும் இவ்விருது வழங்கப்படுவது வழமையாகும்.

எதிர்வரும் 08 ஆம் திகதி (08.09.2016) வியாழக்கிழமை பிற்பகல் 2.45 மணிக்கு கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெறும் வைபவத்தில் இவ்விருது வழங்கப்படவுள்ளது. (இ-10)

## அவன்கார்ட் நிறுவனத்தால் அரசுக்கு அதிக வருமானம்

கடல் பாதுகாப்பு நடவடிக்கைகளில் இலங்கை கடற்படையினரை விட அதிகளவான வருமானத்தை அவன்கார்ட் நிறுவனம் அரசாங்கத்திற்கு உழைத்து கொடுத்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

மிதக்கும் ஆயுத களஞ்சியம் ஊடாக ஆயிரத்து 140 கோடி ரூபாவை முறைகேடாக சம்பாதித்ததாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உட்பட 8 பேருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கே சகல ஊடகங்களிலும் பிரதான தலைப்புச் செய்தியாக மாறியுள்ளது.

இந்த ஊடகங்களுக்கு தலைப்பு எப்படி திடீரென வந்தது? உண்மையில் அவன்கார்ட் நிறுவனம் மூலம் என்ன நடந்தது என்பதை நாட்டுக்கு முன்வைப்பது கடமை.

விசேடமாக கோத்தபாய ராஜபக்ஷ நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யும் சம்பவம் நடந்துள்ளது.

2006ஆம் ஆண்டில் இருந்து தென்னாபிரிக்கா மற்றும் இலங்கைக்கு இடையிலான கடல் பரப்பில் சோமாலிய கடற்கொள்ளையர்கள் எப்படி உருவாகினர் என்பதும். அதற்கு தீர்வாக வர்த்தக கப்பல்கள் கடல் பாதுகாப்பை பெற்றுக் கொண்ட விதமும் முழு நாடும் அறியும்.

கடற்கொள்ளையர்களிடம் இருந்து வர்த்தக கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கவே அவன்கார்ட் என்ற தனியார் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

கோத்தபாயராஜபக்ஷ மீதான வழக்கு நீண்டகால நோக்கத்தை கொண்டது. 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் தனக்கு அச்சுறுத்தலாக இருப்பார் என நினைத்து. அவரை மோசடி வழக்கில் சிக்க வைத்து அழிக்க முயற்சித்துள்ளனர்.

கோத்தபாய மீது அரசாங்கத்திற்கு அதிசயமான பயம் உள்ளது. இந்த பயம் நியாயமானது. அவர் தனக்கு கொடுக்கப்பட்ட பொறுப்பை ஆச்சரியப்படும் வகையில் நிறைவேற்றினார் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-10)

# கல்விக் கொள்கைகளை அரசே வகுக்க வேண்டும்

## லக்ஸ்மன் கிரியெல்ல வலியுறுத்து



கல்விக் கொள்கைகளை அரசாங்கமே வகுக்க வேண்டும்மெனவும். மாணவர்கள் வகுக்க இடமளிக்க முடியாது எனவும் உயர்கல்வி அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தேவையான சகல வசதிகளையும் அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளதாகவும். புலமைப்பரிசில் தொகைகளையும் உயர்த்தியுள்ளதாகவும், தெரிவித்த அவர், 2018ஆம் ஆண்டளவில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு போதியளவு விடுதி வசதிகளை செய்து கொடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் தனியார் பல்கலைக்கழகமொன்றை நடத்த அனுமதி வழங்கியுள்ளதாகவும். அதனை மூடி விடுமாறு ஐந்து ஆண்டுகளின் பின்னர் போராட்டம் நடத்தப்படுவதாகவும் தெரிவித்துள்ள அவர், மாலம்பே பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட போது எவரும் அதனை எதிர்க்கவில்லை என சுட்டிக் காட்டியுள்ளார். கடந்த அரசாங்கம் இந்த தனியார் பல்கலைக்கழகத்தினை அறிமுகம் செய்திருந்த போதிலும், அதில் 500 முதல் 600 வரையிலான மாணவர்கள் கல்வி கற்பதனால் அதனை இந்த அரசாங்கத்தினால் மூடிவிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதிக்கப்பட்டோர் ...

யாழ் பொது நூலகத்தில் நேற்று பிற்பகல் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் வடக்கு அமைச்சர் களுக்கிடையே சந்திப்பொன்று நடைபெற்றது.

இந்த சந்திப்பின் போதே மூன் மேற்கண்ட வாறு உறுதியளித்துள்ளார். இச் சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில்.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்க வேண் டும் எனவும் சென்றமுறை வரும்போது கோரியிருந்தேன். அதனை நீக்குவதாக கூறியிருந்தார்கள்.

ஆனால் தற்போதுவரை அது நீக்கப்பட வில்லை என்பதனை சுட்டிக்காட்டியிருந்தார். அதனை வைத்திருப்பது பிழை எனவும் சுட்டிக்காட்டி பயங்கரவாத தடைச் சட்டம் நீக் கப்படும் போது இந்த சட்டத்தின் கீழ் யார் ? யார் ? கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார் களோ அவர்களை விடுவிக்க வேண்டும் என அரசிடம் கோரியதாக கூறியுள்ளார்.

போர் குற்ற விசார ணை பாதிக்கப்பட்ட மக்கள்ஏற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலேயே அமையும். அப்போது தான் அது நம்பகர மாக அமையும். இது தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளில் இம் மாதம் 21-ம் திகதி உலக நாடுகளால் வழங்கப்படும் நிதி தொடர்பில் கூட்டம் ஒன்று நடைபெற போகின்றது என்றும் அந்த கூட்ட த்திற்கு வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர இணைத்தலைமை ஏற்கவுள்ளார் எனவும் கூறியிருந்தார்.

வடக்கு மக்களின் தேவைகள் சம்பந்தமான கணிப்பு தொடர்ந்து நடைபெறும் எனவும் சுட்டிக்காட்டினார். மிதிவெடி அகற்றல். மீள் குடியேற்றப்படும் மக்களுக்கு உதவிகள், போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி. தனியார்துறை முதலீடு. சுற்றுலாத்துறை, இராணுவ கட்டமைப்பு தொடர்பில் மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் கோரினேன். இவற்றை கவனத்தில் எடுப்பதாக கூறியி ருந்தார் என முதலமைச்சர் தெரிவித்தார்.(4)

# மரண அறிவித்தல்

## கதிர்காமு செல்வவிநாயகம்



*1-ம் கட்டை புலோலி மேற்கு, பருத்தித்துறையை பிறப்பிட மாகவும் மக்கள் வங்கியின் Regional Manager-ம் F.A.OVII அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவரான கதிர்காமு செல்வவிநாயகம் 01.09.2016 இல் லண்டனில் காலமானார்.*

*சிதேவிப்பிள்ளை தம்பதியரின் அன்புப் புதல்வனும் இலக்குமிதேவியின் பாசமிகு கணவரும் காலஞ் சென்ற முத்து மற்றும் தெய்வானைப்பிள்ளை, தங்கம், காலஞ் சென்ற Dr. இரத்தினசபாபதி ஆகியோரின் சகோதரரும் குருபரன், அரவிந்தன் (அவுஸ்திரேலியா), வைரேஸ்வர் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் தேவகி, தனுஜா (அவுஸ்திரேலியா), ஆரணி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சக்திவேல், சாரங்கா, கபிலன், கௌதமி,ஜனனி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறி விக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்*

தகவல் :
குடும்பத்தினர்

0044 2089150048 Vyreshwer
077 2285624 Arun

(வி-5631)

# கண்ணீர் அஞ்சலி

திருமதி
**லூயிஸ் மேரி புஸ்பராணி ஸ்ரெனிஸ்லோஸ்**



மெது பாடசாலையின் முன்னாள் அதிபரும்
நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளருமான
ஏப். ஜெக்ஸ் அன்ரன் அவர்களின் அன்பு மாமி
திருமதி லூயிஸ் மேரி புஸ்பராணி ஸ்ரெனிஸ்லோஸ்
கடந்த 31.08.2016 அன்று கனடாவில் காலமான
செய்தி கேட்டு பெருந்துயர் அடைகிறோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும் அவரது
குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு
கொள்வதோடு அன்னாரது ஆன்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்

# இலங்கையும் ஐ.நாவும் இணைந்து தீர்மானிக்கும்

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்ற ங்கள் தொடர்பாக விசாரணை நடைமுறை குறித்து. இலங்கை அரசும் ஐ.நா. மன்றமும இணைந்து முடிவெடுக்கும் என்று ஐ.நா செய லாளர் நாயகம் பான் கி மூன் தெரிவித்தார்.

தனது மூன்று நாள் இலங்கைப் பயணத்தின் முடிவில் நேற்று இரவு கொழு ம்பில் செய்தி யாளர் களிடம் பேசிய மூன் இக் கருத்தைத் தெரி வித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு தான் மேற்கொண்ட பயணம் குறித்துப் பேசிய அவர், கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்பு தான் விஜயம செய்த போது இருந்த நிலைக்கும் தற்போது ள்ள நிலைக்கும் பெரு த்த மாற்றம் இருப்ப தாகவும், பல முன் னேற்றங்கள் ஏற்பட்டி ருப்பதாகவும் தெரிவித் தார்.

தற்போது. பல் வேறு முன்னேற்றங் களைப் பார்க்கிறேன் என்று தெரிவித்தார்.

# மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம்

## 04.09.2016





சுவேதாரண்யம்பதி, பொன்னம்பலம், பூலோக கைலாயம் என்ற பல்வேறு சிறப்புக்களால் போற்றி வழிபட்டு வரும் மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் துர்முகி வருடம் ஆவணித்திங்கள் 19ஆம் நாள் நாளை (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை அத்த நட்சத்திரமும் கன்னிலக்கினமும் சேர்ந்த சுபயோக சுபதினத்தில் காலை 7.04 முதல் காலை 8.58 மணிக்கு இடையில் சித்திவிநாயகப்பெருமானுக்கும் புதிதாக அமைக்கப்பட்ட பஞ்ச தள இராஜ கோபுரத்திற்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெறும்.

**எண்ணெய்க்காப்பு சாத்துதல் :- 03.09.2016 இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை**

பக்த கோடிகள் அனைவரும் கலந்து கொண்டு எல்லாம் வல்ல சித்திவிநாயகப்பெருமானை தரிசித்து அவன் பேரருளை பெறும்வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

சுபம்

இங்ஙனம் :- பொ.வி.திருநாவுக்கரசு
இரத்தினசபாபதி யோகநாதன் (இந்திரன்)
ஆலய தர்மகர்த்தாக்கள்

திருவெண்காடு மண்டைதீவு, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு நீதவான்கள் தொடர்பில் மகிந்த உறுதிமொழி வழங்கவில்லை

## முன்னாள் அமைச்சர் ரோஹித தெரிவிப்பு

(கொழும்பு)

**வெளிநாட்டு நீதவான்கள் தொடர்பில் மகிந்த அரசாங்கம் உறுதிமொழிகளை வழங்கவில்லை என முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார்.**



2009ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த வேளை கூட்டாக வெளியிடப்பட்ட அறிக்கையில் சர்வதேச அல்ல கலப்பு நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைமை குறித்து இணக்கப்பாடுகள் எதுவும் வெளியிடப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கப் படையினர் குற்றவாளிகளாக பார்க்கப்பட வேண்டியவர்கள் அல்லர் எனவும் அவர்கள் மீட்பர்களாக பார்க்கப்பட வேண்டியவர்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

2009ம் ஆண்டு பான் கீ மூன் இலங்கை விஜயம் செய்திருந்த போது வன்னி கிழக்கு பகுதிக்கு செல்ல முடியவில்லை.

யுத்த நிறைவின் பின்னர் ஆட்சி செய்த அரசாங்கங்கள் யுத்த வலயத்தை மாற்றிய மைத்தமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதன் மூலம் புரிந்து கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் எந்தவொரு நாட்டிலும் பயங்கரவாதம் முற்று முழுதாக தோற்கடிக்கப்படவில்லை எனவும் பான் கீ மூனின் பதவிக் காலத்தில் இலங்கையில் அவ்வாறான ஓர் சாதனை நிலைநாட்டப்பட்டமை அவருக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கும் என போகொல்லாகம தெரிவித்துள்ளார். (இ-10)

## வாயில் ஒட்டிய பிளாஸ்டரை கழற்றிய போது சுலைமானின் நாக்கு தொங்கியது

வர்த்தகர் முஹம்மட் சகீப் சுலைமானின் காதுப் பகுதியில் இரும்புக் கம்பியால் தாக்கி, கைகளையும் கால்களையும் கட்டிவிட்டு, வாயில் பிளாஸ்டர் ஒன்றையும் ஒட்டியுள்ள கடத்தல்காரர்கள், அவரை மாவனெல்ல பகுதிக்கு அழைத்துச் சென்று, கப்பம் கேட்பதற்காக சொத்து விபரங்களை அறிந்து கொள்ள, வாயிலிருந்த பிளாஸ்டரைக் கழற்றிய போது, அவருடைய நாக்கு தொங்கியுள்ளது. அதனையடுத்தே அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்ற விடயத்தை, கடத்தல்காரர்கள் அறிந்துகொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு, பம்பலப்பிட்டியைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகரான சுலைமான், பம்பலப்பிட்டி - கொத்தலாவல ஒழுங்கையிலுள்ள அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து, கடந்த ஓகஸ்ட் மாதம் 21ஆம் திகதியன்று கடத்தப்பட்டிருந்தார். அவரது சடலம், மாவனெல்ல, ஹெம்மாத்தகம, ருக்குலுகம பிரதேசத்திலிருந்து கடந்த 24ஆம் திகதி கண்டுபிடிக்கப்பட்டது.

இவரது படுகொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், கொழும்பு ஆட்டுப்பட்டித்தெருவிலுள்ள மீன் விற்பனை நிலையமொன்றைச் சேர்ந்த நபரொருவரையும், சேதவத்தையைச் சேர்ந்த ஒருவரையும் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவினர், நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்தனர். வர்த்தகர் கடத்தப்பட்ட இடத்திலுள்ள சீ.சீ.டிவி கமராக்களில் பதிவாகியுள்ள வீடியோ ஆதார ங்களைக் கொண்டே, 22 மற்றும் 23 வயதுடைய மேற்படி சந்தேகநபர்களை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர். மேற்படி படுகொலையில், அறுவர் தொடர்பு



பட்டிருக்கலாம் என்றும் தெரிவிக்கும் பொலிஸார், பொல்லு அல்லது இரும்பொன்றி னால், சுலைமானின் காதுப்பகுதியில் பலமாகத் தாக்கியதை அடுத்து, அவரது கைகளும் கால்களும் கட்டப்பட்டு, வாயில் பிளாஸ்டரும் ஒட்டப்பட்டிருந்ததாகக் கூறினர்.

வாடகை வாகனமொன்றில், மாவனெல்லைக்கு கொண்டு செல்லப்பட்டு, வர்த்தகரின் வாயிலிருந்த பிளாஸ்டரைக் கழற்றிவிட்டு, அவரது தந்தையிடம் 5 கோடி ரூபாயை கப்பமாகக் கோருவதற்காக சொத்து விபரங்களைக் கேட்க, கடத்தல்கார்கள் முற்பட்டுள்ள போதிலும், ஏற்கனவே அவர் உயிரிழந்துவிட்டார் என்று தெரியவந்துள்ளதாக கூறப்படுகின்றது. அத்துடன், வர்த்தகரை கொண்டு சென்ற வாகனத்தை, கொலையுடன் தொடர்புடைய மேலும் சிலர், ஆட்டோ உள்ளிட்ட சில வாகனங்கள் மூலம், இறம்புக்கனை வரை பின்தொடர்ந்துள்ளனர் என்றும் பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேலும், மாவனெல்ல பகுதியில் வைத்து, வர்த்தகரின் தொலைபேசி, தீயிட்டு கொளுத்தப்பட்டுள்ளதென்றும் கண்டுபிடித்துள்ள இரகசிய பொலிஸாரின் விசேட விசாரணைக் குழுவொன்று, மேலும் பல சாட்சியங்களைத் திரட்டுவதற்காக, ஹெம்மாத்தகம பிரதேசத்துக்கு விரைந்துள்ளது. இதேவேளை, மேற்படி வர்த்தகரைக் கொலை செய்வது தொடர்பில், மிகவும் துல்லியமான முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருந்ததாக, இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## ஆவணிப்பெருவிழா

கீழ்கருணையம்பதி ஸ்ரீமதி வாலாம்பிகா சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர சுவாமி கோவில் ஆவணிப் பெருவிழா நாளை மறுதினம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. இவ் வாலயப் பரிபாலன சபைத் தலைவர் எந்திரி வி.சே. சிவப்பிரகாசம் தலைமையில் இடம் பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் சி. அகிலதாஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் க. தர்மலிங்கம், மன்னார் மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் வே. விஸ்வலிங்கம், புராண விற்பன்னர் கலாபூஷணம் சிதம்பர பசுபதி, வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலாளர் ஏ. வினோராஜ், கரவெட்டி பிரதேச செயலக கணக்காளர் சி. சிவரஞ்சன், நெல்லியடி வணிகர் கழக செயலாளர் இ.சுரேரஞ்சன், கரவெட்டி பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி அலுவலர் ந. ஸ்ரீதர், பருத்தித்துறை பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி அலுவலர்பண்டிதர் பொன் சுகந்தன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3-60)

## பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா

சண்டிலிப்பாய் கல்வளை பிள்ளையார் ஆலய பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டு விழா நாளை 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.4 மணி தொடக்கம் 10.58 வரை நடை பெறும்.(இ-3)

## மஹாகும்பாபிஷேகம்

நெல்லியடி -செம்பியன் பற்று திருவருள் மிகு மாவடிப் பிள்ளையார் ஆலயப் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமைகாலை 7.04மணிமுதல்நடைபெறவுள்ளது.இன்றுசனிக்கிழமைகாலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாற்றுதல் இடம்பெறும். (இ-3)

## இராசி பலன்

03.09.2016
(ஆவணி 18, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
துதியை பிற்பகல் 4.52மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.12 மணிவரை
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை
நல்லூர்க்கந்தன் வைரவர்
உற்சவம் மாலை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் அவிட்டம், சதயம் | | |
| | | | சூரி புத ராகு |
| | சனி செவ் | | குரு சந் சுக் |

**மீனம்:** உறவினர் வழியில் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு.

**மேடம்:** தேகநலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**இடபம்:** பிள்ளைகளின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள், மன மகிழ்ச்சியோடு செயற்படும் நாள், கனவுகள் நனவாக கந்தனை வழிபடவேண்டிய நாள்.

**மிதுனம்:** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், யோசிக்காமல் செய்த காரியங்களில்கூட வெற்றி கிடைக்கும், வாகன யோகத்தால் வளம் காணும் நாள்.

**கும்பம்:** நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காணவேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கடகம்:** கூட்டு முயற்சிகள் கைகூடும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் உங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்வர், பயணங்களால் பலண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்:** வழிபாட்டில் கவனம் செலுத்துவீர்கள், கைவிட்டுப் போனதாகக் கருதிய பொருளொன்று மீண்டும் கிடைக்கலாம், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்:** புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**தனுசு:** பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்ப ஒற்றுமை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் புகழ்கூடும்.

**துலாம்:** நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்கவேண்டிய நாள், பணப்புழக்கம் அதிகமானாலும் அடுத்தடுத்த செலவுகளால் திணறுவீர்கள், பயணங்கள் இடம் பெறலாம்.

**கன்னி:** விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கிச் சாப்பிடுவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர் விலகுவர், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வன்முறையை விரும்பவில்லை வெறுக்கின்றோம்

# மக்களின் அனுமதியின்றி தீர்வைப் பெறமாட்டோம்

## எதிர்க்கட்சித்தலைவர் சம்பந்தன் உறுதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

**எமது மக்களை ஒருபோதும் கைவிடமாட்டோம். மக்களின் அனுமதியின்றி எந்தவொரு அரசியல் தீர்வையும் பெறவும் மாட்டோம் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், வன்முறையை விரும்பவில்லை, வெறுப்பதாகத் தெரிவித்தார்.**



இலங்கை நாடாளுமன்றத்தில் 1960 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரையில்தொடர்ந்து 23 ஆண்டுகள் உடுவில் மானிப்பாய் தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 31 ஆம் ஆண்டு நினைவுதினம் நேற்றுவெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் யாழ்.தாவடியில் அமைந்துள் அன்னாரின் நினைவுத்தூபிக்கு அருகாமையில் நடைபெற்றது. இதில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமஷ்டி அடிப்படையில் தீர்வுமுழுமையாக அமையாது விட்டாலும் கூட கணிசமான அளவு தீர்வினை நாம் கேட்டோம்.

அதைக்கூட வழங்குவதற்கு அன்றைய ஆட்சியாளர்கள் தயாராகயில்லை; மறுத்தனர். அந்தக் காரணத்தின் நிமித்தம் அரசியல் சாசன சபையிலிருந்து வெளியேறி அதற்கு பிறகு அவர்களுடைய கருமங்களில் நாங்கள் பங்கேற்கவில்லை.

1972 ஆம் ஆண்டு அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்ட பின்னர் முழுநாட்டிற்கும் ஒரு அரசியல் சாசனம் நிறைவேற்றப்பட்டதாக அன்றைய பிரதமர் அம்மையார் சிறிமாவோ பண்டார நாயக்க கூறினார்.

தமிழ் மக்கள் இந்த அரசியல்சாசனத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை தந்தை செல்வா கூறி, இதை உறுதிப்படுத்துவதற்காக எனது பாராளுமன்றப் பதவியை இராஜினாமா செய்து மீளப் போட்டியிடத் தயார். உங்களுடைய கொள்கையின் அடிப்படையில் நீங்களும் போட்டியிடலாம் என்று கூறினார்.

இறுதியில் பாராளுமன்றத்தேர்தல்நடைபெற்றது. தமிழ் மக்கள் தந்தை செல்வாவின் கொள்கைகளை அமோகமாக ஏற்று அந்த அரசியல் சாசனத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதனை மிகவும் உறுதியாகத் தெளிவாக வெளிப்படுத்தினர்.

அந்தக் கருமங்களில் அண்ணன்தர்மலிங்கம் பாரிய பங்களிப்பை ஆற்றியிருந்தார்.

1972, 1978 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனங்களில் தமிழ் மக்களின் பங்களிப்புக்கள் இருக்கவில்லை.

இன்றைக்கு78ஆம்ஆண்டு அரசியல் சாசனம் நீக்கப்பட வேண்டும். அதற்கு பதிலாக புதிய அரசியல் சாசனம் உருவாக்கப்பட வேண்டும் என்று இந்த நாட்டில் வாழ்கின்ற சகல மக்களும் விரும்புகின்றனர்.

அதனடிப்படையில்தான் பாராளுமன்றத்தில் இருக்கின்ற வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவான உறுப்பினர்கள் அரசியல் சாசன சபையில் பங்கேற்றிருக்கின்றோம்.

இது ஒரு முக்கியமான காலகட்டம். ஒருமித்த ஒரு நாட்டிற்குள் எந்தவிதபிளவும் ஏற்படாமல் எந்தவிதமான குந்தகமும் ஏற்படாமல் ஒரு அரசியல் தீர்வை நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்பதை பகிரங்கமாகக் கூறியிருக்கின்றோம்.

அதனடிப்படையில்தான் தந்தை செல்வா அரசியல் கொள்கைகளை வகுத்தார்.

எமது அரசியல் பாதையில் காலத்துக்கு காலம் ஏற்பட்ட மாற்றங்களை புரிந்து கொள்ள வேண்டும்.

முதன்முறையாக 13 ஆவது அரசியல் சாசனத்தின் கீழ் மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன. மாகாண சபைகளுக்கு சட்டத்தை உருவாக்கும் அதிகாரங்கள் வழங்கப்பட்டன. 13 ஆவது அரசியல் சாசனம் எமது பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வாக அமையவில்லை. ஆனாலும் முதன்முறையாக மாகாண சபைகளூடாக ஒரு புதிய பாதையை ஆரம்பித்தோம்.

அதை நாங்கள் மறக்க முடியாது இவை எல்லாவற்றையும் வைத்துத்தான் நாங்கள் நாடு பிளவுபடாமல் ஒரு அரசியல் தீர்வைப் பெற எதிர்பார்த்துள்ளோம்.

எமது மக்களின் இறைமையின் அடிப்படையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு என்னென்ன அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவோ அந்த அதிகாரங்களை முழுமையாக எவ்விதமான குறையும் இல்லாமல் வேறு எவருடைய தலையீடும் இல்லாமல் தனித்துவமான முறையில் எமது மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் அந்த அதிகாரங்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில் வல்லமை எமக்கிருக்க வேண்டும். அதைத்தான் நாங்கள் கேட்கின்றோம். அதைத்தான் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

காணி, கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், கடற்றொழில், கைத்தொழில். கலாசாரம் மொழி இவ்விதமான சமாச்சாரங்களை எமது பிராந்தியத்தில் இறைமை பகிர்ந்தளிக்கப்பட்டு அதிகாரத்தை முழுமையாக பகிர்ந்தளிக்க வேண்டும் என்று கேட்கின்றோம்.

இதை இந்நாட்டுத் தலைவர்கள் ஏற்றுள்ளார்கள். எனவே அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்படும் போது அவற்றை பயன்படுத்தக்கூடிய நிறைவேற்று அதிகாரபலத்துடன் நாம்இருக்கவேண்டும்.

நான் சர்ச்சைக்குரிய கருத்துக்களை பயன்படுத்த விரும்பவில்லை. ஆனால் அதனுடைய அர்த்தம் உள்ளடக்கப்பட வேண்டும். அதனுடைய விளக்கங்கள், அதனுடைய பெறுபேறுகள், அதனுடைய பெறுமதிகள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக இருக்கின்றோம்.

முக்கிய தலைவர்கள் தற்போது எங்களுடன் இல்லை. பாரிய பொறுப்பை நாங்கள் சுமந்துகொண்டிருக்கின்றோம்.

நிதானமாகவும் மிகவும் பக்குவமாகவும் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம். வன்முறையைமீண்டும்விரும்பவில்லை. வன்முறையை வெறுக்கின்றோம். இந்த நாட்டில் கௌரவமான மக்களாக சுயமரியாதையுடன் நாங்கள் சரித்திர ரீதியாக வாழ்ந்து வந்த பிரதேசங்களில் வாழ விரும்புகின்றோம்.

எமது மக்களை நாங்கள் ஒரு போதும் கைவிட மாட்டோம். எமது மக்களின் அனுமதியின்றி எந்தவொரு அரசியல் தீர்வையும் பெறமாட்டோம். எமது மக்களுக்கு பாதகமாக இருக்கக்கூடிய எந்தத்தீர்வையும் ஏற்க மாட்டோம். நிரந்தரத்தீர்வு ஏற்பட வேண்டும். என்றும் இல்லாதளவிற்கு சர்வதேசம் தற்போது எமக்காக இணைந்துள்ளது.

இலங்கைக்கு எதிராக ஐநாவில் பல தீர்மானங்கள் தொடர்ச்சியாக நிறைவேற்றப்பட்டுஅழுத்தம்கொடுக்கப்பட்டது.

எனவேஎமது மக்கள்பொறுப்பாக நடக்க வேண்டும். பொறுமையாக நடக்க வேண்டும். கொள்கையில் உறுதியாக இருக்க வேண்டும். எமது உரிமையைப் பெறுவதற்கு அமைதியாக, பணிவாக நிதானமாக செயற்பட வேண்டும்.

நாங்கள் தனி ஈழம் கேட்கவில்லை. எமது பிறப்புரிமையைக் கேட்கின்றோம். அதை யாரும் மறுக்க முடியாது. அதைத்தர வேண்டிய காலம் வந்துவிட்டது.

நாங்கள் பக்குவமாக, நிதானமாக நாட்டினுடைய தேசிய பிரச்சினைக்கு எமது மக்கள் சம உரிமையுடன், கௌரவத்துடன், சுயமரியாதையுடன் தங்களுடைய இறைமையின் அடிப்படையில் வாழ்வதற்கு ஒரு அரசியல் தீர்வைப்பெற நாங்கள் எப்பொழுதும் பாடுபட வேண்டும். அதற்காக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வடமாகாண மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பில் கடற்றொழில் அமைப்புக்களுடன் கலந்துரையாடல்



ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள மீன்பிடித்துறை அபிவிருத்தி தொடர்பாகக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுடன் நேற்று வெள்ளிக்கிழமை கலந்துரையாடல் நடைபெற்றது.

யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு கூட்டுறவுத்துறை அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி, திட்ட முகாமையாளர் நா.புகேந்திரன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் திட்ட முகாமைத்துவ நிபுணர் நிஷாந்தி மஞ்சுளா சமரசிங்க, திட்டவளவாளர் கௌரி பழனியப்பன் ஆகியோர் கலந்துகொண்டு முன்னெடுக்கப்படவுள்ள மீன்பிடித்துறை அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக விளக்கம் அளித்தனர்.

வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படவுள்ள நிலைபேறான மீன்பிடி அபிவிருத்தித் திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 65 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளது. இத்திட்டத்தில் துறைமுகங்கள் அபிவிருத்தி, நங்கூரம் இடும் இடங்களும் கரைசேரும் இடங்களும் அமைத்தல், நண்டு, இறால், கடல்அட்டை வளர்ப்பை ஊக்கப்படுத்தும் கடல் நீரியல்வள அபிவிருத்தி, சந்தைவாய்ப்புகளை ஏற்படுத்தல், பெண்களுக்கு நுண்கடன்களை வழங்குதல் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், கரையோர வளங்களைப் பாதுகாத்தல் போன்றவை உள்ளடக்கப்படவுள்ளன.

இத்திட்டம் தொடர்பாகக் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அபிப்பிராயங்கள் மற்றும் தேவைகள் இக்கலந்துரையாடலின் போது கேட்டறியப்பட்டுள்ளன.

மேலும், நான்கு மாவட்டங்களையும் சேர்ந்த கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனங்களும் தமது கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களை அழைத்து அவர்களின் தேவைகளைக் கேட்டறிந்து கூட்டுறவு அமைச்சிடம் விரைவில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும், கூட்டுறவு அமைச்சு இத்திட்டத்தை முன்னெடுக்கும் மீள்குடியேற்ற அமைச்சிடம் இவற்றைத் தொகுத்துக் கையளிப்பது எனவும் கலந்துரையாடலின் இறுதியில் முடிவாகியுள்ளது.

வடக்கின் கரையோரப் பகுதிகள் மற்றும் கடல் நீரேரிகளை அண்டிய 249 கிராம சேவையாளர் பகுதிகளில் இருந்தும் அடையாளம் காணப்படும் மீன்பிடி அபிவிருத்தி தொடர்பான தேவைகளில் இருந்து முன்னுரிமை அடிப்படையில் தேவைகள் அடையாளம் காணப்பட்டு 2017 தை மாதம் திட்டவரைவு இறுதி செய்யப்பட்டு அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலி கடற்கரையின் அழகில் மயங்கிய ஐ.நா.செயலாளர் மனைவியுடன் செல்பி



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் மூன்று நாட்கள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு இலங்கை வந்துள்ளார்.இந்நிலையில் அவர் நேற்று முன்தினம் காலிக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இளைஞர்களுக்கு இடையில் நல்லிண க்கத்தை ஏற்படுத்துவதற்கான வேலைத் திட்டத்தில் கலந்து கொள்வதற்காகவே அவர் காலிக்கு சென்றிருந்தார்.இந்த பயணத்தின் போது செயலாளர் தனது மனைவியுடன் காலியின் அழகு தெரியும் வரையில் செல்பி எடுத்துள்ளார். (இ-10)

**மோட்டார் சைக்கிள் தேவை**

நல்ல நிலையிலுள்ள பாவித்த TVS Scooty pept மோட்டார் சைக்கிள் ஒன்று தேவை.

தொடர்புகளுக்கு-075 503 2515

(5781)

## UDUVIL GIRLS' COLLEGE ANNOUNCEMENT REGARDING OPENING OF THIRD TERM - 2016

All students and staff are hereby informed that the school will commence third term session on Thursday, 8th September 2016 with the assembly at 8.00 a.m.

The staff members are requested to be present at the JDCSI Cathedral, Vaddukoddai on Wednesday, 7th September 2016 at 8.00 a.m. for staff retreat.

Please note the change of dates of these two

Manager
Uduvil Girls'college

(C-5601)

இவர்களுக்கு மணமகள் தேவை — கல்யாண மாலை — இவர்களுக்கு மணமகன் தேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 10.75
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: B/6237

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 06
உயரம்: 6'
தகைமை/தொழில்:CIMA, BSc/ தனியார் தொழில்
தொ.இ: B/6241

பிறப்பு: 1970 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: 27
உயரம்: 183cm
தகைமை/தொழில்:B.COM, HNDA, HNDIT/ கணக்காய்வாளர்
தொ.இ: B/6243

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 41செவ் 7 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:HNDA/சுவிஸ் PR
தொ.இ: B/6243

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா: 10 சூரிசெவ் 9 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/6287

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 62 செவ் 1 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:பொறியியலாளர்
தொ.இ: G/6288

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா: 5
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும
தொ.இ: G/6289

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 34 செவ் 7 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:HNDA, B.COM
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/1433

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

# நயினை மான்மியம்-மகா காவியம் நூல் வெளியீட்டு விழா 10ஆம் திகதி

நயினை வரகவி நாகமணிப் புலவர் இயற்றிய நயினை மான் மியம் மகா காவியம் எனும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 10ஆம் திகதி சனிக்கிழமை பி.ப. 2மணியளவில் நல்லூர் நடராசா பரமேஸ்வரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வேலணைக் கோட்ட மேனாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாபூஷணம் குமாரவேலு சரவணபவானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அரசாங்க அதிபர் நாகலிங்கம் க.வேதநாயகன்,சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன்,பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்,யாழ்.போதனா வைத்தியசாலைப் பதில் பணிப்பாளர் டாக்டர் எஸ்.ஸ்ரீபவானந்தராசா,கல்விக் காருண்யன்,ஈ.எஸ்.பி.நாகர த்தினம்,சற்சங்க ஸ்தாபகர் சிவதர்ம வள்ளல் சண்முகம் சிவஞானம், யாழ்.பல்கலைக்கழக கைதடி சித்த மருத்துவத்துறை மேனாள் வருகை தரு விரிவுரையாளர் டாக்டர் கே.ரி.எஸ்.சபாநாதன், யாழ்.பல் கலைக்கழக கைதடி சித்த மருத்துவத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர் எஸ்.சிவசண்முகராஜா,கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் வே.ஞானகாந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை மானிப்பாய் கிராம உப அலுவலகம் ஆனைக்கோட்டை ஆதன பெயர் மாற்ற அறிவித்தல்

வட்டாரம்:- 06
ஆதன இல.31 (புதிய பதிவு)
வீதி:-முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை,
கிராமசேவையாளர் பிரிவு:-J/132 ஆனைக்கோட்டை

வட்டாரம் 06, முருகமூர்த்தி கோவில் ஒழுங்கை, ஆதன இல. 31(புதிய இலக்கம்) இல் அமை ந்துள்ள (உறுதிப்படி வட மாகாணம் யாழ்பபாணம் வலிகாமம் தென்மேற்கு பகுதி மானிப் பாய் கோவிற்பற்று ஆனைக்கோட்டை இறை "வக்குத்துறையில் வயலும் துறையில் வளவும் வடக்குயாவிலும்'' என்னும் பெயருள்ள நெற்ப்பரப்பு 01 குளி 6 கொண்ட இவ்வாதனம் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு, சேர்ச் லேன் ஆனைக் கோட்டை யைச் சேர்ந்த பழனிவேல் கைம்பெண் பரஞ்சோதி ஆகிய இவர்களால் சுதுமலை தெற்கு சாவற்காட்டைச் சேர்ந்த கணேசமூர்த்தி பெண் தர்சிக்கா என்பவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் திருமதி அபர்ணா ஜனார்த்தன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 190 ஆம் இலக்க 2014.11.05 ம் திகதிய நன்கொடை உறுதி மூலம் தமக்கு சொந்தம் என தெரி யப்படுத்தி எமது மானிப்பாய்க் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதன பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு. S. சுப்பிரமணியம் அவர்களால் வரையப்பட்ட 2657 ஆம் இலக்க 2014.10.23ம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது "வக்குத்து றையில் வயலும் துறையில் வளவும் வடக்குயாவிலும்'' துண்டு 01 நெற்பரப்பு 01 குளி 6 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவி ப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பத்திரிகை பிரசுர திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது கணேசமூர்த்தி விஜயகுமார் பெண் தர்சிக்கா என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

(5799) செயலாளர்,வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய்.

# கேள்வி அறிவித்தல்
# மாவட்ட செயலகம், கிளிநொச்சி

சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதார உதவி செயற்றிட்டம்

சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வு மீள்குடியேற்ற மற்றும் இந்துமத விவகார அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் வாழ்வாதார உதவி செயற்றிட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் பின்வரும் பொருட்களுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விபரம் | அண்ணளவான எண்ணிக்கை | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|---|---|
| KN/EB/DO3/P.Pl/01 | நீர் இறைக்கும் இயந்திரம் | 117 | 500/- |
| | மின்சார மோட்டர் | 153 | |
| | நீர் விநியோகக் குழாய் (Algathine pipe) | 41,140 அடி | |
| | Plumping pipe | 9,900 அடி | |
| | தூவல் நீர்ப்பாசன தொகுதி | 75 | |
| | மண்வெட்டி | 240 | |
| | மருந்து தெளிகருவி | 219 | |
| | Water Tank | 124 | |
| KN/EB/DO3/P.Pl/02 | மீன்பிடி வள்ளம், வலைகள் மற்றும் உபகரணங்கள் | 24 வள்ளம் | 500/- |
| KN/EB/DO3/P.Pl/03 | தையல் இயந்திரம் | 128 | 500/- |
| KN/EB/DO3/P.Pl/04 | கோழிக்குஞ்சு பொரிக்கவைக்கும் கருவி (Incubator) | 2 | 500/- |
| | கோழிக்குஞ்சு தீவனத்தட்டுக்கள் | 650 | |
| | தண்ணீர்க் கான்கள் | 650 | |
| KN/EB/DO3/P.Pl/05 | துவிச்சக்கரவண்டி | 13 | 500/- |
| KN/EB/DO3/P.Pl/06 | சீமெந்து | 1335 bag | 500/- |
| | Concrete Post | 2328 | |
| KN/EB/DO3/P.Pl/07 | Derefrigerator | 2 | 500/- |

1.பொருத்தமான மற்றும் ஆர்வமுள்ள வழங்குநர்கள் இதற்கான கேள்வி ஆவணங்களை 05.09.2016ஆம் திகதியிலிருந்து 19.09.2016ஆம் திகதிவரை முற்பகல் 9.30 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை அலுவலக நாட்களில் கிளிநொச்சி மாவட்ட செயலக நிர்வாகக்கிளையில் மீளளிக்கப்படாத தொகையாக குறிப்பிடப்பட்ட தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ள முடியும். (மேலதிக தகவல்களுக்கு தொ.இல. 021 228 5663, தொலை நகல் இல. 021 228 3966)

2.விண்ணப்பங்கள் யாவும் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி எனும் விலாசத்திற்கு 20.09.2016 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பிவைத்தல் வேண்டும். நேரடியாக ஒப்படைப்பவர்கள் நிர்வாகக்கிளையில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப்பெட்டியில் இடுதல் வேண்டும். கேள்விதாரர்கள் கேள்வியின் இலக்கத்தை தபாலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும் என்பதோடு பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

3.தெரிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் கிளிநொச்சி மாவட்டத்திற்குள் மாவட்ட செயலாளரினால் குறிப்பிடப்படும் இடத்தில் பொருட்களை விநியோகிக்க வேண்டும்.

(சி/5610)

சுந்தரம் அருமைநாயகம்
அரசாங்க அதிபர் / மாவட்ட செயலாளர்.
கிளிநொச்சி மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மாமன்றம் நடத்தும்

# 'தமிழ்மாருதம்' நிகழ்வுகள் வவுவில் இன்று ஆரம்பம்



(வவுனியா)

தமிழ்மாமன்றம் நடத்தும் தமிழ்மாருதம் - 2016 நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெறவுள்ளன.

இதில் முதல் நாள் நிகழ்வுகள் சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வவுனியா பொது சன நூலக சரஸ்வதி சிலையிலிருந்து ஊர்வலமாக ஆரம்பமாகி வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தை வந்தடையும்.

இந் நிகழ்வில் தமிழ் மன்றத்தின் தலைவர் வைத்தியர் சி.கிருபானந்தகுமாரனினால் தலைமையுரையும் வவுனியா நகர சபை செயலாளர் த.தர்மேந்திராவினால் தொடக்க வுரையும் நிகழ்த்தப்படும்.

அதனைத் தொடர்ந்து நயினை ப.சிவமைந்தன் குழுவினரின் இசை அரங்கும் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய மாணவி அ.கவிநயாவின் இசையும் அசைவும் நடைபெறும்.

அதன் பின்னர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் தலைமையில் குற்றவாளிக் கூண்டில் குருநாதர்கள் எனும் தலைப்பில் வழக்காடுமன்றம் நடைபெறும்.

இதன் வாதிகளாக பேராசிரியர் தி.வேல்நம்பி, இ.நிக்ஷலனும் பிரதிவாதிகளாக செஞ்சொற்செல்வர் இரா.செல்வவடிவேல், சி.துஷாரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் நிகழ்வுகள் 4 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை, மாலை என இரு அமர்வுகளாக வவுனியா நகர சபைக் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

காலை அமர்வு நிகழ்வுகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இந் நிகழ்வின் தொடக்க வுரையை யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் கலாநிதி த.மங்களேஸ்வரன் நிகழ்த்துவார்.

இதில் சிதம்பரேஸ்வரம் நடனாலய மாணவர்களின் தமிழ மூச்சு எனும் பொருளில் நாட்டிய அளிக்கை, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களின் நாட்டார் பாடல் என்பன இடம்பெற்று மலர் வெளியீடும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறும்.

அதைத் தொடர்ந்து, தமிழாசிரியர்களான ஐ.கதிர்காமசேகரன், என்.கே.கஜரூபன் தலைமையில் சிந்தையாலும் செய்கையாலும் ஸரிதில் ஸமக்கவரும் எதிர் நிலைப்பாத்திரம் எனும் பொருளில் சுழலும் சொற்போர் நடைபெறும்.

மாலை அமர்வுகள் பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாகும்.

புலம்பெயர் எழுத்தாளர் வவுனியூர் இரா.உதயணனின் தொடக்கவுரையை அடுத்து பரத நர்த்தனாலயா மாணவிகளின் கலச நடனமும் கலை நிலாக்கலையகத்தினால் மறந்து போன சுவடுகள் எனும் நாடகம் என்பன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் ச.முகுந்தன் தலைமையில் குறுகத்தறித்தலில் நெஞ்சில் தெறித்தவை எனும் தலைப்பில் கவியரங்கம் இடம் பெறும்.

இதில் கேடும் பெருக்கமும் இல்லல்ல எனும் தொனிப் பொருளில் வே.முல்லைத்தீபன், யாகாவராயினும் நாகாக்க எனும் தொனிப்பொருளில் ஜெகோபிநந் செல்லாமை உண்டேல் எனக்குறை எனும் தொனிப்பொருளில் ஞானமாதங்கி செல்வராசா, செய்யத்தக்க செய்யாமையானுங் கெடும் எனும் தொனிப்பொருளில் இரா. இராஜேஸ்வரன், நாணாமை நாடாமை நாரின்மை பேதை தொழில் எனும் தொனிப் பொருளில் ச.கஜன், அல்லற் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் எனும் தொனிப் பொருளில் த.மோகனரங்கன், ஊழி பெயரினும் தாம் பெயரார் எனும் தொனிப்பொருளில் செ.மதுரகன் ஆகியோர் கவியரங்கத்தை நிகழ்த்துவார்கள்.

இதனைத் தொடர்ந்து இறுதி நிகழ்வாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வருகை விரிவுரையாளர் கலாநிதி செ.சேதுராஜா தலைமையில் என்றைக்கும் மக்கள் மனங்களில் நிறைந்திருக்கும் தன்னிகரற்ற தலைவன் எனும் தலைப்பில் பட்டிமன்றமும் நடைபெறும்.

புத்தக மலிவு விலைக் கண்காட்சியும் ஓவியக் கண்காட்சியும் மேற்படி இரு தினங்களிலும் நடைபெறும். (2)




## அருவியாற்றுப் பாலத்திற்கு அருகாமையில் வெள்ளத்தடுப்பு மணல் சட்டவிரோதமாக அகழ்வு

### குடியிருப்புக்கள் நீரில் மூழ்கும் அபாயம்



(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள நானாட்டன் மற்றும் முசலி பிரதேசங்களை பிரிக்கும் அருவியாற்று பாலத்திற்கு அருகில் உள்ள வெள்ளத் தடுப்பு மணலை சட்ட விரோத மான முறையில் உள்ளூர் அரசியல்வாதிகளின் ஆதரவுடன் சில நபர்கள் அகழ்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

அருவியாற்று பகுதியினை அண்டியதாக பல குடியிருப்புகள் கடந்த வருடம் பெய்த கடும் மழையினை தொடர்ந்து ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்ததில் பல வீடுகள், சொத்துக்கள் என்பன நீரில் மூழ்கின.

இந் நிலையில் இவ்வாறான சட்டவிரோத மண் அகழ்வினால் நானாட்டான் மற்றும் முசலி பிரதேசங்களில் உள்ள குடியிருப்புகள் எதிர்காலத்தில் நீரில் மூழ்கும் அபாயம் இருப்பதாகவும் அப்பகுதி மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

பாலத்தை பாதுகாக்க அருகில் கடற்படை முகாம் அமைக்கப்பட்டுள்ள போதும், அதில் பாதுகாப்பு கடமையில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள், குழுவினர்கள் இப்படியான சட்டவிரோத மண் அகழ்வை தடுக்காதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இதேபோன்று நானாட்டான் மற்றும் முசலி பகுதிகளில் சட்டவிரோதமான மண் அகழ்வுகள் தொடராக இடம் பெற்றுக்கொண்டு இருக்கின்ற போதிலும் இதனை தடுக்க உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தவில்லை எனவும் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (2-9)

### 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான

# காலபோக நெற்செய்கைக் கூட்டங்கள் தொடர்பிலான கால அட்டவணை

### ஒலுமடு கமநலசேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் அறிவிப்பு

(மல்லாவி)

**ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கமக்கார அமைப்புக்களுக்கான வருடாந்த பொதுக் கூட்டம், நிர்வாகத்தெரிவு சிறிய குளங்களின் கீழான 2016 -2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கை கூட்டங்கள் என்பன நடைபெறவுள்ள கால அட்டவணையை ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் அறிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், இதற்கமைய கூட்டங்கள் நடைபெறும் திகதிகள் வருமாறு,

இந்துபுரம் கமக்கார அமைப்பிற்கு எதிர்வரும் 5 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு இந்துபுரம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாங்குளம் கமக்கார அமைப்பிற்கு காலை 9 மணிக்கு மாங்குளம் கிராம அலுவலகத்தில் நடைபெறும்.

அன்றையதினம் முற்பகல் 11.30 மணிக்கு மாங்குளம் வடக்கு கமக்கார அமைப்பிற்கு மாங்குளம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

மணவாளன் பட்டமுறிப்பு கமக்கார அமைப்பிற்கு எதிர்வரும் 8 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஒலுமடு கமநல சேவை மண்டபத்தில் நடைபெறும்.

அம்பகாமம் கமக்கார அமைப்பிற்கு எதிர்வரும் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அம்பகாமம் பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

திருமுறிகண்டி கமக்கார அமைப்பிற்கு எதிர்வரும் 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு திருமுறிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெறும்.

எனவே விவசாயிகள் தமது பகுதிக்கான கூட்டங்கள் நடைபெறுகின்ற போது தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நடைபெறுகின்ற கூட்டங்களின் போது விவசாயிகளுக்கான அபிவிருத்தித் திட்டங்கள், உதவித் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

### வடக்கு மாகாணத்திலுள்ள

## ஆட்டோ உரிமையாளர் சங்கங்களை விரைவில் சந்திக்கவுள்ளார் அமைச்சர்

(பனிக்கன்குளம்)

வடக்கு மாகாணத்தில் ஐந்து மாவட்டங்களிலும் ஆட்டோ உரிமையாளர் சங்கங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் 29 ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கான போக்குவரத்து நியதிச்சட்டம் ஆளுநரால் ஒப்பமிடப்பட்டதோடு வடக்கு மாகாணத்தில் போக்குவரத்து தொடர்பான அனைத்து அதிகாரங்களும் போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆட்டோச் சேவையை பல உரிமையாளர்களும் சங்கங்களும் சிறப்பாக செய்து வருகின்ற வேளையில் சிலரின் அசமந்தப்போக்கால் சில முறைப்பாடுகளும் பொது மக்களிடமிருந்து கிடைக்கப் பெறுகின்றன.

குறிப்பாக சில ஆட்டோ உரிமையாளர் சங்கங்கள் பதிவுசெய்யப்படாமலும், முறையான தரிப்பிட வசதி இல்லாமலும் நிர்வாகத் தெரிவு புதிப்பிக்கப்படாமலும் சிலவற்றில் நிர்வாக சிக்கல் மற்றும் மோசடிகள் இடம் பெற்றுள்ளதனையும் மேலும் சில ஆட்டோ பதிவு செய்யப்பட்டு உரிமம் பெறப்படாமல் சேவையில் ஈடுபாடுவதாகவும் அறிய முடிகின்றது.

இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கும் மேலும் சில ஒழுங்கு விதிகளை அமுல்படுத்துவதற்கும் அமைச்சர் இக் கலந்துரையாடலை மாவட்ட ரீதியாக ஒழுங்கு செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் எடுக்கப்படவுள்ளதாகவும் இதன்மூலம் பயணிகளும் ஆட்டோ உரிமையாளர்களும் பலன்பெற முடியும்.

மேலும் அந்தந்த மாவட்டங்களில் கலந்துரையாடல் நடைபெறும் திகதி, இடம் என்பன பத்திரிகைகள், ஏனைய ஊடகங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட சங்கங்கள் ஊடாகவும் அறிவிக்கப்படும் எனவும் இதில் அனைத்து ஆட்டோ உரிமையாளர்களும் கட்டாயம் கலந்துகொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொள்கின்றார். (2-281)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் மயில்வாகனம் தியாகராசாவின் 2016 ஆம் ஆண்டிற்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வவுனியா மாவட்டத்தில் உள்ள தோணிக்கல், கூமாங்குளம், நெளுக்குளம், இராசேந்திரங்குளம், பாலமோட்டை கோயில் புளியங்குளம் போன்ற கிராமங்களில் உள்ள மிகவும் வறிய குடும்பங்களுக்கு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் வைத்து அண்மையில் கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச தென்னை தினத்தை முன்னிட்டு தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பிராந்திய முகாமையாளர் மற்றும் மாவட்ட செயலர் தலைமையில் தென்னங்கன்றுகள் நாட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட புளியங்குளம் வடக்கு புதூர் எனும் இடத்தில் அமைந்துள்ள எஸ்.சிவகுமார் என்பவரது காணியில் நடைபெற்றபோது.

# கொள்ளை சம்பவங்களுடன் தொடர்புடையதாக சந்தேகத்தின் பேரில் ஏழு பேர் கைதாகினார்கள்

## கைக்குண்டு, துப்பாக்கிகளுடன் பணம், நகைகள் மீட்பு




வவுனியா, கிளிநொச்சி ஆகிய பிரதேசங்களில் இடம் பெற்ற பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புபட்டதாக சந்தேகிக்கப்படும் 7 பேரை கைது செய்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் அவர்களிடமிருந்து ஆயுதங்கள், திருடப்பட்ட பொருட்கள் என்பன மீட்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் பொலிஸார் தெரிவிக்கையில்.வவுனியா. வேப்பங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் புகுந்து அங்கிருந்த ஒருவரை காயப்படுத்திவிட்டு




35 பவுண் நகைகள் கடந்த மாதம் 13 ஆம் திகதி கொள்ளையடிக்கப்பட்டமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டையடுத்து பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர். உதவிபொலிஸ் அத்தியட்சகர். வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் வவுனியா பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி சமிந்த செனரத் தலைமையிலான விசேட பொலிஸ் குழுவினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது திருட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட வவுனியா. பட்டானிச்சூர் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் மேற்கொண்ட விசாரணைகளில் கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் உட்பட வவுனியாவின் பூந்தோட்டம். பட்டக்காடு. பட்டானிச்சூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த . ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் இவர்களுக்கு உடந்தையாக திருடப்பட்ட நகைகளை விற்பனை செய்ய உதவிய ஒருவரும். வவுனியா நகைக்கடை உரிமையாளர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படுபவர்கள் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்தமையும் இவர்கள் கிளிநொச்சி. மகாறம்பைக்குளம். கனகராயன்குளம். வேப்பங்குளம் ஆகிய பகுதிகளில் கொள்ளைகளில் ஈடுபட்டிருந்தமையும் முதற்கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இவர்களிடம் இருந்து 28 பவுண் தங்க நகை. இரண்டு கைக்குண்டுகள். உள்ளூர் துப்பாக்கி. வாள். இரண்டு கத்திகள். தொலைக்காட்சிப்பெட்டி. தளபாட வேலைகளுக்கு பயன்படுத்தும் 8 இலத்திரனியில் பொருட்கள். இரு நவீனரக மோட்டார் சைக்கிள்கள். போலிக் கைத்துப்பாக்கி. பெண்களின் ஆடைகள். எரிவாயு சிலிண்டர் உட்பட பல பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் ஒரு இலட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து 550 ரூபாய் பணமும் மீட்கப்பட்டுள்ளது.

இவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (2-250)

# "எமது நிலம் எமக்கு வேண்டும்"

## பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாக தொடர்ந்தது



(மல்லாவி)

பரவிப்பாஞ்சானில் இராணுவ வசமுள்ள காணிகளை யும் இரண்டு வாரத்தில் பெற்றுத்தருவதாக எதிர்க் கட்சித் தலைவர் வழங்கிய உறுதிமொழி நிறைவேறாத நிலையில் பரவிப்பாஞ்சான் மக்களின் போராட்டம் நேற்று மூன்றாவது நாளாகவும் தொடர்ந்தது.

கடந்த 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்ட கவனயீர்ப்பு போராட்டத்தில் பெண்கள், வயோதிபர் என பல்வேறு தரப்பினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 31 ஆம் திகதி புதன்கிழமை 15 நாட்கள் முடிவடைந்த நிலையில் பரவிப்பாஞ்சானில் சுமார் மூன்றரை ஏக்கர் காணிகள் மட்டுமே விடுவிக்கப்பட்டமையினால் மீண்டும் தங்களுடைய கவனயீர்ப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றும் தொடர்ந்தது.இரவு வேளையில் மின்சாரமின்றியும் தீப்பந்தங்களை ஏற்றி ஒளிரவிட்டிருந்தனர். 15 குடும்பங்களுக்கு சொந்தமான இன்னும் பத்து ஏக்கர் காணிகளை விடுவிக்க வேண்டும் எனவும் அக்காணிகள் விடுவிக்கும்வரை தமது போராட்டம் தொடருமெனவும் தெரிவித்துள்ளார். (2-15-312)

# கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்ட பக்கோ கைப்பற்று

## ஐயங்கன்குளத்தில் சம்பவம்; சாரதி கைது!

(மல்லாவி)

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயப் பிரிவின் கீழுள்ள மல்லாவி பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட ஐயங்கன் குளம் கிராமத்தில் அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த பக்கோ இயந்திரமொன்று கைப்பற்றப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்காகவும் அதன் பின்னரான நீதிமன்ற நடவடிக்கைகளுக்குமாக மல்லாவி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது.

முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் கீழ் முல்லைத்தீவு மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி உப பொலிஸ் பரிசோதகர் கருணாரத்தினம் ஜெசிந்தன் தலைமையிலான பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே சட்டவிரோதமான முறையில் கிரவல் மண் அகழ்வில் ஈடுபட்டிருந்த பக்கோ இயந்திரம் கைப்பற்றப்பட்டதுடன் அதன் சாரதி கைதுசெய்யப்பட்டார். (2-15)

# பரவிப்பாஞ்சான் காணி உரிமையாளர்கள் ஐவருக்கு நேற்று காணிகள் கையளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பரவிப்பாஞ்சான் கிராமத்தில் இராணுவத்தின் வசமுள்ள காணிகளில் நாலரை ஏக்கர் மற்றும் மூன்றரை ஏக்கர் காணிகள் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகத்திடம் இராணுவத்தினர் ஒப்படைத்துள்ள நிலையில் அவற்றில் காணி உரிமையாளர் ஐவருக்கு நேற்றைய தினம் காணிகள் வழங்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொண்டு காணி உரிமையாளர்களுக்கு சட்டரீதியாக காணிகளை கையளித்தார்.

கடந்த மாதத்தில் இரண்டு கட்டமாக நாலரை ஏக்கர் மற்றும் மூன்றரை ஏக்கர் என இராணுவத்தினரால் காணிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் குறித்த பகுதியில் 15 இற்கும் மேற்பட்ட காணி உரிமையாளர்கள் உரிமை கோரியிருந்தனர்.

இதனை அடுத்து காணிகளின் எல்லை நிர்ணயங்கள். உரிமங்கள் ஆராயப்பட்டு நேற்றையதினம் ஐந்து பேருக்கு காணி அனுமதிகள் வழங்கப்பட்டன.

அத்துடன் அப்பகுதியில் வசித்த மற்றையவர்களின் உரிமம் மற்றும் எல்லை நிர்ணயங்கள் ஆராயப்பட்டு கொண்டிருப்பதனால் அவர்களுக்கும் மிகவிரைவில் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்நிகழ்வில் ஊடகவியலாளர்களுக்கு செய்தி சேகரிப்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பொதுமக்களுக்கு சேவையாற்றி அவர்களின் நெஞ்சங்களில் நீங்கா இடத்தைப் பெற்ற விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் 31 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வு நேற்றைய தினம் தாவடியில் அமைந்துள்ள அவரது நினைவுத்தூபிக்கு அருகாமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன், தமிழரசு கட்சித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, அமரர் வி.தர்மலிங்கத்தின் புதல்வரும் புளொட் அமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன், வட மாகாண எதிர்க்கட்சி தலைவர் தவராசா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான பா.கஜதீபன், எஸ். சிவநேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினர். மலரஞ்சலியை தொடர்ந்து நினைவுரைகளும் இடம்பெற்றன.

(படங்கள்:- பொ.சோபிகா, உ.சாளின்)

# தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதிகோரி பான் கீ மூன் வருகையை முன்னிட்டு யாழில் பெரும் போராட்டம்






ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் நேற்றைய தினம் யாழ்.பொது நூலகத்திற்கு விஜயம் செய்திருந்த வேளை தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட கொடூரங்களுக்கு நீதி கோரியும், இலங்கை மீது சர்வதேச விசாரணை கோரியும் மாபெரும் போராட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்து கொண்டிருந்ததோடு, தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: உ.சாளின்)



யாழ் மாவட்டத்திலுள்ள பனம் கைப்பணி உற்பத்தியாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வுகள் நேற்றைய தினம் சோமசுந்தரம் வீதியில் உள்ள வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடைபெற்றது. பனை அபிவிருத்தி சபை தலைவர் வைத்தியர் இ.சிவசங்கர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் பனம் கைப்பணி உற்பத்தியை மேற்கொள்ளும் 105 பெண்களுக்கு தலா12 ஆயிரம் பெறுமதியுள்ள உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்நிர்மாணம்,மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வட கடல் நிறுவன தலைவர் பரமேஸ்வரன், வட மாகாண பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களின் சமாச தலைவர் கணேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(படங்கள்:- பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழலுக்கிசைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 86

# வாழ்வாதாரம், உட்கட்டுமானம், தொழிற்றுறை என்பன ஒன்றாக கட்டியெழுப்ப வேண்டும்!

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

வடபகுதிவாழ் மக்களின் வாழ்வாதாரத்தை உயிர்ப்புடன் முன்னேற்றுவதற்கான வழியை உருவாக்கும் அதே வேளையில் உட்கட்டுமாணத்தை மேலும் விரிவாக்குவதற்கும் வலுவுள்ளதாக்குவதற்கும் வழிசெய்தல் வேண்டும். இதற்கான திட்டங்கள் பல தீட்டப்பட்டு நடைமுறைக்கு வந்திருந்தாலும் எதிர்பார்த்த பலனை முழுமையாக இன்னமும் தரவில்லை என்பதனை பலரினது கருத்துக்களிலிருந்தும் அறிந்து கொள்ளலாம்.

இங்கே திட்டமிடல்கள் பாரியளவில் தீட்டப்பட்டு பிரதேச மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் அவற்றினால் மக்களின் எதிர்பார்ப்புக்கள் நிறைவேற்றப்படவில்லை. தொழிற்றுறைக்கான முன்னெடுப்புக்கள் போதாது என்பது பொதுவான குற்றச்சாட்டு. இதைப்பற்றி கடந்த வருடத்தில் குறிப்பிட்டிருந்தும் இற்றைவரை இதற்கான முன்னெடுப் புக்கள் திருப்திதரவில்லை என்பதாக இருக்கின்றது. இது யாரையும் குறை கண்டு பிடிப்பதற்காக அல்ல. மாறாக அனைவரும் இதில் இன்னும் முழுமையாக இயங்க வேண் டும் என்பதனையே வலியுறுத்துகின்றது.

வடமாகாணத்தைப் பொறுத்தவரை யாழ்ப்பாண மாவட்டம் தவிர்ந்து பார்த்தால் ஏனைய நான்கு மாவட்டங்களிலும் அதிகமான மக்கள் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக, இன்னமும் ஏங்கிக்கொண்டிருக்கின்றார்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் வதியும் மக்கள் இறுதிக்கட்ட போரின்போது அதிகமாக பாதிக்கப்பட்டவர்களாவர். அவர்களது வாழ்வாதாரத்தை விரைந்து முன்னேற்றுவது அவசியமாகும். தேவையானளவு உணவு கிடைப்பதில்லை என்பதற்கு மேலாக அந்த உணவு நிறையுணவாக இருக்கவேண்டும் என்னும் கூற்றும் வலிந்துரைக்கப்படுகின்றது. சத்துணவு குறைவு என்பது எமது மக்களை பலவீனப்படுத்தும். இன்னும் பலமற்றவர்களாக ஆக்கிவிடுவதுடன் அதிகரித்துவரும் நோய்களுக்கு எதிர்ப்பு சக்தியற்றவர்களாக ஆக்கிவிடுகின்றது. இந்த விடயத்தில் நாம் அனைத்து துறையினையும் முடுக்கி விட்டு மக்களது சத்துணவுக்கான வழிவகைகளை அவசியம் இனங்கண்டு நிறைவுசெய்யவேண்டும். எமது உணவு எங்களூர் உணவு. அதுவும் சத்துணவு. அதற்கு மேலும் சுகாதாரமான உணவு அனைவருக்கும் கிடைக்கச்செய்ய வேண்டும்.

மகளிர் சங்கங்களின் அனுசரணையுடன் அவர்களின் தயாரிப்பில் உருவாகும் அம்மாச்சி உணவகம் நல்லதொரு முன்னுதாரணம். மகளிர் அமைப்புக்களுக்கான வேலை வாய்ப்பு என்பதற்கப்பால் எங்களூர் உணவை உடனுக்குடன் சுடச்சுட பெற்றுக்கொள்ளும் நல்லதொரு விடயமாகவும் இதனை உண்டுகளித்தவர்கள் கூறக் கேட்டதை இங்கே பதிவு செய்கின்றேன். இது போன்றதொரு முன்னுதாரணங்கள் இன்னும் நிறையவேண்டும். இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பினை தரும் நல்லசெயல்களை இத்தருணத்தில் ஊக்குவிக்கலாம்.

கிராமத்து எழுச்சி இங்கே திருப்பத்துக்கான முதலாக முன்வைக்கப்படுகின்றது. கிராமங்களின் வளர்ச்சியினை முன்னகர்த்துவதற்கான கட்டமைப்புக்கள் இன்னும் உயிர்ப்புபெற வழிவகைகளைசெய்தல் நன்று. கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறுவதனைதடுத்து நிறுத்துவதற்கான வேலைத் திட்டங்களை விரைந்து நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கிராமங்களை எழுச்சி பெறும் தொழில்நுட்ப கிராமங்களாக இன்னும் தொழிற்றுறைக்கான இடங் களாக ஆக்குதல் இதற்கான சிறந்த வழிமுறையாகும். தொழில்நுட்ப வளங்களை கிராமந்தோறும் உள்வாங்கி அவற்றை முழுமையாக பயன்படுத்தி உற்பத்தி பெருக்கத்திற்கு கிராமங்களின் முழுமையான பங்களிப்பை பெற்றுக்கொள்ள முடியும். கிராமங்களின் முன்னேற்றத்தினால் தான் நாட்டின் சுபீட்சம் கிடைக்க முடியும். கிராமத்து வளங்களை, இனங்கண்டு அங்குள்ள படித்த இளைஞர்கள், யுவதிகள் மற்றும் வயதானவர்களின் உதவியுடன் திட்டமிடலாளர்களின் ஆலோசனையுடன் தொழில்நுட்ப வல்லுநர்களின் வலுவூட்டலுடன் கிராமத்தின் தொழில்நுட்ப வளர்ச்சியினை தொழிற்றுறையுடன் இணைத்து இனங்கண்டு திட்டமிடப்படல் வேண்டும். தொழில்நுட்ப தேர்களை கிராமத்து வீதிகளில் வடமிழுத்து கிராமத்தின் மண்ணின் மணம்,குணம் மற்றும் நிறம் மாறாமல் வலுவுள்ள அலகுகளாக மாற்றம் செய்ய வேண்டும். மாற்றமொன்றை எதிர்பார்த்த மக்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த மாற்றம் கிடைக்க வேண்டும். இதுவும் நம்மால் முடியும். அதற்காக நாம் கடுமையாக முயற்சி செய்ய வேண்டும்.

வடபுலத்து வளங்களின் விபரங்கள் முழுமையாக திரட்டப்படல் வேண்டும். இதற்காக அந்தந்த துறைசார் திணைக்களங்களின் உதவியுடன் முழு விபரங்களையும் இலத்திரனியல் வரைபடமாக மாற்றி அதில் ஆய்வுகளை நடத்தி வடபுலத்து வளங்களின், உயிரினங்களின், உயிர் பல்வகைத் தன்மையை தரவுகளாக பெறவழி செய்தல் வேண்டும். பல்கலைக்கழக ஆய்வுகளில் இதற்கான முன்னுரிமைப் படுத்தலை ஏற்படுத்திக் கொள்ளலாம். அடிப்படை தரவுகளின்றி அதில் அபிவிருத்தியை ஏற்படுத்தி விடமுடியாது. இதனுடன் கிராமங்களிலுள்ள மக்களின் வாழ்க்கைத்தரஉயர்விலும் கரிசனை செலுத்த வேண்டியது அவசியமாகும். கல்வி, விளையாட்டு,வேலைவாய்ப்பு, சுத்தமான, சுகாதாரமான மற்றும் ஊட்டச்சத்தான உணவுமற்றும் நீர் என்பவை கிடைக்க வழிசெய்தல் வேண்டும்.

கல்விவாய்ப்பு அனைவருக்கும் கிடைக்க அனைத்து வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். கல்வியில் பல்கலைக்கழக கல்விக்கான வசதி வாய்ப்புக்களை இன்னும் நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலுள்ள மனிதவள முகாமைத்துவ மையம், புறநிலைக்கற்கைகள் அலகு, வெளிவாரிபட்டப்படிப்பு என்பனவற்றினை மேலும் விரிவாக்கி விருத்தி செய்து அதிக மாணவர்களை உள்வாங்கி கல்வியினை அனைவருக்கும் வழங்க ஆவன செய்ய வேண்டும். கல்வியில் பட்டப்பின் படிப்பிற்கான கற்கைநெறிகளைபுதிதாக தேவை கருதி ஆரம்பிக்கவும் உயர்பட்டப்படிப்புக்கள் பீடமும் முனைகின்றது. மக்களின் கருத்தறிந்து, சமூகத்தின் தேவையறிந்து புதிதாக கற்கைநெறிகளை ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருக்கின்றது என்பதனை அறியத் தருகின்றோம். தேவை என்ன என்பதனை எமக்கு அறியத்தாருங்கள். அதற்கான வழிகள் இங்கே திறக்கப்படும்.

வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்கான முயற்சிகள் கிராமங்களினூடாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். தற்போதுள்ள நடைமுறைகளின்

குறைகளை யறிந்து இந்த முயற்சியில் இன்னும் ஆர்வம் காட்டுவது பொருத்தமானதாக இருக்கும். விவசாய, கால்நடை மற்றும் மீன்பிடி ஆகிய வளங்களை முழுமையாக பயன்படுத்த நாம் தொழில்நுட்பத்தை உள்வாங்க வேண்டும். மனித வளம் எமக்குகிடைத்தற்கரிய சொத்து. அதனை முழுமையாக பயன்படுத்த வேண்டும். உங்கள் கருத்துக்களை, ஆலோசனைகளை எமக்கு தாருங்கள். தேவை கருதியவற்றை, சமூகம் விரும்பியவற்றை நிச்சயமாக நிறைவேற்ற அனைவரும் பாடுபட வேண்டும்.



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

உட்கட்டுமானம் தொழிற்றுறை விருத்திக்குஅவசியம் தேவையானதாகும். எந்தவொரு நிலையிலும் இதனது அவசியத்தையும் தேவையையும் நாம் உணர வேண்டிவரும் என்பதனை குறிப்பெடுத்துக் கொள்ளுங்கள். போக்குவரத்து, சுகாதாரம், மின்சாரம், இன்னும் ஏனை துறைகளின் விருத்தி முக்கியமானது. தனியார் தொழிற்றுறை விருத்தி நடந்தாலொழிய எமது இளைய சமூகத்திற்கான வேலைவாய்ப்பென்பது கேள்விக்குறியே தான். இதற்கு நாம் அரச இயந்திரத்தை முழுமையாக நம்பியிருக்காது தனியார் தொழிற்சாலைகளின் மற்றும் தொழிற்றுறைகளின் விருத்திக்கு அத்திவாரமிட வேண்டும்.

தனியார் முயற்சிகளுக்கு ஊக்கம் தரும் விடயங்களில் கரிசனை செலுத்துவது நல்லது.

எங்களின் வளத்தினை அழியவிடாது அதே நேரத்தில் அதனைவினைத்திறனாக பயன்படுத்தி சந்தையில் புதிய பொருட்களை உருவாக்க வேண்டும். இதற்குத்தான் கேள்விஅதிகமாக இருக்கும். சுதேச உணவுகளை உற்பத்தி செய்யும் உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு முதன்மை கொடுக்கலாம். அதிலும் நீரிழிவு நோயாளர்கள், இருதய நோயாளர்களுக்கான தனித்துவமான, சுகாதாரமான உணவுகளை உற்பத்தி செய்யலாம். சிறுவர்களுக்கான உணவு வகைகள், முதியவர்களுக்கான உணவு என்பவற்றிற்கும் முன்னுரிமையளிக்கலாம்.

புதிய உற்பத்திகளுக்கு களமமைத்து கொடுக்கவேண்டும். புதியன புகுதலும் என்பது இங்கே மிகவும் பொருத்தமானதாகும். புதிய உலகம் சமைப்பதில் இவ்வளவும் இங்கே உள்ளார்ந்து இருக்கின்றது என்பதனை நாம் நிச்சயம் புரிந்து கொள்ளவேண்டும்.

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 103

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியை பதவி விலகக்கோரி

# 10 இலட்சம் மக்கள்

# வீதியில் திரண்டு போர்.

(கராகஸ்)

**வெனிசுவெலாவில் ஜனாதிபதியை பதவி விலகக்கோரி 10 இலட்சம் மக்கள் வீதிகளில் திரண்டு மாபெரும் போராட்டம் நடத்தினர்.**



தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான வெனிசுவெலாவில் ஜனாதிபதியாக நிகோலஸ் மதுரோ பதவிவகிக்கிறார். சர்வதேச அளவில் எண்ணெய் விலை சரிந்துவிட்டதால் அங்கு பொருளாதார சீர்கேடு ஏற்பட்டது.

வேலையில்லா திண்டாட்டம். விலைவாசி உயர்வு போன்றவை ஏற்பட்டுள்ளன. பசி. பட்டினியால் அவதிப்படும் மக்கள் ஜனாதிபதி மதுரோ பதவி விலகிவிட்டு புதிய ஜனாதிபதியை தேர்ந்தெடுக்க தேர்தல் நடத்த வேண்டும் என வலியுறுத்தி வருகின்றனர்.

அதற்காக நெல்சன் ரிவாஸ் என்பவர் தலைமையில் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். ஆனால் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோ கண்டுகொள்ளவில்லை.

இந்த நிலையில் நேற்று முன்தினம் தலைநகர் கராகஸ் நகருக்கு திரண்டு சென்று முற்றுகை போராட்டம் நடத்த பொதுமக்களுக்கு ரிவாஸ் அழைப்பு விடுத்தார். அதை ஏற்று சுமார் 10 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டனர். சுமார் 10 கி.மீற்றர் தூரம் அலை கடலென ஆர்ப்பரித்து வந்தனர்.

கராகஸ் நகரின் வீதிகளில் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தினர். போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் வெள்ளை நிறத்தில் உடை அணிந்து இருந்தனர். மதுரோ வெளியே தேர்தல் நடத்த வேண்டும் என்ற கோரிக்கை அட்டைகளை ஏந்தி வந்தனர். பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

இதற்கிடையே ஜனாதிபதி மதுரோவின் ஆதரவாளர்கள் கராகஸ் நகரில் பேரணி நடத்தினார்கள். புரட்சி மூலம் ஆட்சி கவிழ்க்க சதி நடப்பதாகவும். அதை தடுக்க தாங்கள் திரண்டு இருப்பதாகவும் தெரிவித்தனர். இப்பேரணியில் ஜனாதிபதி நிகோலஸ் மதுரோவும்கலந்துகொண்டார்.

எதிர்ப்பாளர்கள் நடத்த இருந்த புரட்சி முறியடிக்கப்பட்டதாகவும். பலரது பலிகள் தடுத்து நிறுத்தப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-10)

## உலகில் சுமார் 250 கோடி பேருக்கு ஷிகா வைரஸ் தாக்குதல் வாய்ப்பு

### விஞ்ஞானிகள் தகவல்

உலகம் முழுவதும் சுமார் 250 கோடி பேர் ஷிகா வைரஸ் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய சூழ்நிலை உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் ஷிகா வைரஸ் பாதிப்பு ஏற்படும் பகுதிகளில் வசிப்பதாக அவர்கள் கூறுகின்றனர். தி லேன் செட் இன்ஃபெக்ஷியஸ் டிசீசஸ்"என்ற மருத்துவ இதழில் வெளியான புதிய ஆய்வில். பெரும்பான்மையான மக்கள். ஷிகா வைரஸை தடுக்கவோ. கண்டுபிடிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ முடியாத சூழலில் வசிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




குறிப்பாக இந்தியா. பாகிஸ்தான் மற்றும் நைஜீரியா உள்ளிட்ட நாடுகளில் உள்ள மக்கள் அதிக அளவு இந்த வைரஸால் தாக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளதாக ஆய்வு தெரிவிக்கிறது. ஷிகா வைரஸ். கர்ப்பத்தில் இருக்கும் சிசுக்களுக்கு மூளைப் பாதிப்பை ஏற்படுத்துவதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (இ-10)

## உலகின் வயதான கிளி 83 வயதில் இறந்தது



கூண்டில் வைக்கப்பட்ட மிக வயதான பறவை இனவகையாக கருதப்படும் கொக்காட்டு கிளி ஒன்று 83 வயதில் இறந்துள்ளது. அமெரிக்காவின் சிக்காகோ மிருகக்காட்சிச்சாலையில் பெரிதும் அறியப்பட்டு வந்த இந்த கிளியின் உடல் நிலை மோசமானதை அடுத்து இறந்துவிட்டதாக மிருகக்காட்சிசாலை அதிகாரிகள் கடந்த திங்களன்று அறிவித்துள்ளனர்.

வெள்ளை மற்றும் இளஞ்சிவப்பு நிறம் கொண்ட இந்த கிளி பிரூக்பீல்ட் மிருகக்காட்சிச்சாலை திறக்கப்பட்டபோது கொண்டுவரப்பட்டு கடைசி வரை இங்கு இருந்தது. கொக்காட்டு கிளி 1934ஆம் ஆண்டு ஒரு வயது இருக்கும் போது அவுஸ்திரேலியாவில் இருந்து இந்த மிருகக் காட்சிச்சாலைக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இந்த கிளியும் வயது முதிர்ச்சியால் மனிதர்கள் சந்திப்பது போன்ற உடல் உபாதைகளை சந்தித்து வந்ததாக மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பாக ஒஸ்ரியோ புரோசிஸ். கீல்வாதம் மற்றும் கண்புரை நோய் போன்ற பாதிப்புகளுக்கு இந்த கிளி முகம்கொடுத்து வந்துள்ளது. (இ-10)

## நியூசிலாந்தில் நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை

நியூசிலாந்தில் கிழக்கு கடற்கரை பகுதியில் வடக்கு தீவில் உள்ள ஹிஸ்போர்னி என்ற இடத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 4.37 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இதனால் வீடுகள் மற்றும் கட்டடங்கள் குலுங்கின.

இங்கு 7.1 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் பதிவாகியுள்ளது. ஹிஸ்போர்னியில் இருந்து 167 கி.மீ. தூரத்தில் கடலுக்கு அடியில் நிலநடுக்கம் உருவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் காரணமாக பலத்த சேதங்கள் எதுவும் இல்லை. ஆனால் சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கடலலை வழக்கத்துக்கு மாறாக 20 செ.மீ. உயரத்துக்கு அலைகள் எழும்பின. எனவே நியூசிலாந்தின் வடக்கு கடற்கரையில் உள்ள வடக்கு தீவு மற்றும் அப்பர் சவுத் தீவு ஆகிய பகுதிகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. நியூசிலாந்து பூகம்ப அபாய எச்சரிக்கை பகுதியில் உள்ளது. எனவே. இங்கு கடற்கரை பகுதியில் வாழும் மக்களுக்கு பூகம்ப எச்சரிக்கை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் நீதிமன்றத்திற்குள் தற்கொலைப்படைத் தாக்குதல்!

## 12 பேர் உயிரிழப்பு; 52 பேர் படுகாயம்!

(இஸ்லாமாபாத்)

**பாகிஸ்தானில் மார்டன் நகரில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நேற்று நடந்த தற்கொலைப் படை வெடிகுண்டு தாக்குதலில் 12 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 52 பேர் படுகாயமடைந்துள்ளனர்.**





பாகிஸ்தானில் உள்ள மார்டன் நகரில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்தில் தற்கொலைப்படை தீவிரவாதி ஒருவன் வெடிகுண்டு தாக்குதல் நடத்தியுள்ளான்.

நீதிமன்றத்திற்கு மக்களோடு மக்களாக வந்த அவன், முதலில் கையெறி குண்டுகளை வீசி தாக்குதல் நடத்திய பின்பு, தான் அணிந்திருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளான்.

இந்த தாக்குதலில் நீதிமன்றில் இருந்த சட்டத்தரணிகள், பொலிஸார் மற்றும் பொது மக்கள் உட்பட 12 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும், 52 பேர் படுகாயமடைந்துள்ளதாகவும் அங்கு மீட்பு பணியில் ஈடுபட்டிருக்கும் தலைமை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். நீதிமன்றத்தில் நடந்த தற்கொலைப் படை தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. (இ-10)

# ஜுமைரா கடற்கரை குடியிருப்பு அருகே கடலில் மிதக்கும் தண்ணீர் பூங்கா





(டுபாய்)

டுபாய் ஜுமைரா கடற்கரை குடியிருப்பு அருகே கடலில் 'மிதக்கும் தண்ணீர் பூங்கா' திறக்கப்பட்டுள்ளது.

டுபாய் சுற்றுலாவிற்கு கூடுதல் சிறப்பம்சம் சேர்க்கும் வகையில் டுபாய் சுற்றுலாத்துறை மற்றும் அமீரகத்தில் இயங்கி வரும் சுற்றுலா தனியார் நிறுவனம் ஆகியவை இணைந்து டுபாய் சுற்றுலா சின்னத்தின் வடிவில் தண்ணீரில் மிதக்கும் பூங்காவை உருவாக்கியுள்ளது.

டுபாய் நகரில் முக்கிய வர்த்தகம் மற்றும் சுற்றுலாவிற்கு சிறப்பு வாய்ந்த பகுதியான ஜுமைரா கடற்கரை குடியிருப்பு அருகே அமைந்து உள்ள இந்த பூங்கா நேற்று முன்தினம் திறக்கப்பட்டது.

இந்த மிதக்கும் தண்ணீர் பூங்காவானது 208 அடி நீள, 108 அடி அகல பரப்பளவில் கடல் நீரில் அமைக்கப்பட்டுள்ளது.

இதில் தண்ணீரில் மிதப்பதற்காக செயற்கை இழைகள் மூலம் உருவாக்கப்பட்ட கடினமான பிளாஸ்டிக்கில் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் விளிம்புகள் அலுமினியம் போன்ற இலேசான உலோகங்களால் இணைக்கப்பட்டுள்ளன.

இந்த பூங்காவிற்கு கடற்கரையில் இருந்து செல்ல சிறு படகுகள் பயன்படுத்தப் படுகின்றன. இந்த படகுகள் மூலம் மிதக்கும் தண்ணீர் பூங்காவினுள் பார்வையாளர்கள் செல்லலாம்.

அந்த மிதக்கும் தண்ணீர் பூங்காவில் தண்ணீர் விளையாட்டுக்கள் டுபாய் சுற்றுலா சின்னத்தின் வடிவத்தில் (ஆங்கிலத்தில் டுபாய் என்று எழுதப்பட்ட எழுத்துக்கள்) உள்ள தளங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதனை விமானம் மூலம் பார்க்கும் போது டுபாய் என்ற ஆங்கில வார்த்தை கடலில் மிதப்பது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தும்.

இங்கு பல்வேறு நீர் சறுக்கு விளையாட்டுகள் இடம்பெற்றுள்ளன. இந்த மிதக்கும் தண்ணீர் பூங்காவில் ஒரே சமயத்தில் 500 பேர் கலந்து கொள்ளலாம்.

இதற்கான நுழைவுச் சீட்டு கடற்கரையில் உள்ள அலுவலகத்தில் வழங்கப்படுகிறது. காலை 7 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அனைவரும் பார்வையிட்டு நீர் சறுக்கு விளையாட்டுகளில் பங்குபெற அனுமதிக்கப்படுகிறார்கள்.

இந்த பூங்காவில் பொது மக்கள், குழந்தைகளுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க கண்காணிப்பு பணியாளர்கள் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள். பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு பணிகளை டுபாய் சுற்றுலாத்துறை கவனித்து வருகிறது. (இ-10)

# ஜாக்கி சானுக்கு ஒஸ்கார் விருது



(லொஸ் ஏஞ்செல்ஸ்)

திரைப்படத்தில் வாழ்நாள் சாதனைக்காக சீன திரைப்பட நடிகர் ஜாக்கி சானுக்கு ஒஸ்கார் விருது வழங்கப்படுகிறது.

ஹொங்கொங்கில் பிறந்த 62 வயதாகும் ஜாக்கிசான் சீன திரைப்படங்களில் நடித்து அசாத்தியமான சண்டைக் காட்சிகளின் மூலம் தனது திறமையை வெளிப்படுத்தியவர்.

அதன் மூலம் ஹொலிவுட் திரைப்படங்களில் காலடி வைத்து ரஷ்ஹவர், கராத்தே கிட் போன்ற திரைப் படங்களில் நடித்து புகழ் பெற்றவர்.

30 திரைப்படங்களை இயக்கியுள்ள ஜாக்கிசானுக்கு திரைத்துறையில் அவரது பங்களிப்பை பாராட்டி ஒஸ்கார் விருது வழங்குவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவிப்பை "THE ACADEMY OF MOTION PICTURE ARTS AND SCIENCE" அமைப்பு அறிவித்துள்ளது. எதிர்வரும் நவம்பர் மாதம் லொஸ் ஏஞ் செல்ஸ் நகரில் ஜாக்கிச் சானுக்கு ஒஸ்கார் விருது வழங்கப்படுகிறது. (இ-10)

# சோதனையின் போது வெடித்த ரொக்கெட்

(கேப் கார்னிவெல்)

புளோரிடாவில் கேப் கெனாவரல் விமானப் படை நிலையம் உள்ளது. இங்கிருந்து ரொக்கெட்டுகள் செலுத்தப்படுவது வழக்கம்.

ஸ்பேஸ்எக்ஸ் (SpaceX) நிறுவனத்திற்கு சொந்தமான பால்கோன் 9 (Falcon 9) என்ற ரொக்கெட் இன்று சனிக்கிழமை கெனாவரலில் இருந்து செலுத்தப்படுகிறது. இந்த ரொக்கெட் அமோஸ் 6 என்ற செயற்கைக்கோளை சுமந்து செல்ல இருக்கிறது.

எனவே எந்த தடங்களும் இல்லாமல் சரியாக பறப்பதற்காக பல்வேறு சோதனைகள் செய்யப்பட்டு வருகின்றன. அதன்படி ரொக்கெட்டை நிலைநிறுத்தி அதன் இயந்திரத்தை செயற்படுத்தி பார்த்தனர்.

அப்போது திடீரென பயங்கர வெடிச்சத்தம் கேட்டது. அத்துடன் அந்த பகுதி புகை மண்டலமாக மாறியது. இதனால் அருகில் உள்ளவர்கள் அச்சம் அடைந்தனர். பல கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள கட்டடங்கள் கூட இந்த அதிர்வால் குலுங்கின. சில நிமிடங்களாக வெடித்துக் கொண்டே இருந்ததாக கூறப்படுகிறது.

இது குறித்து நாசா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், "வியாழக்கிழமை காலையில் ஆளில்லாத ரொக்கெட்டை பரிசோதிக்கும்போது இந்த விபத்து ஏற்பட்டது.

ரொக்கெட் ஏவப்படுவதற்கும் முன் இது போன்ற பரிசோதனைகள் வழக்கமாக நடைபெறுவது தான்" என்று தெரிவித்துள்ளது. இருந்தாலும் விபத்திற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-10)

# ரூ.1150 கோடி நட்டஈடு டிரம்ப் மனைவி வழக்கு

விபச்சார அழகி என அவதூறு செய்தி வெளியிட்டதாக ரூ.1150 கோடி நட்டஈடு கேட்டு பத்திரிகை மீது டிரம்ப் மனைவி வழக்கு தொடர்ந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் போட்டியிடும் டொனால்ட் டிரம்பின் மனைவி மெலானியா (47). இவர் முன்னாள் மொடல் அழகி.

இவர் குறித்து லண்டனில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டது. அதில் நியூயோர்க்கில் ஒரு தனியார் நிறுவனத்தில் பகுதி நேர பாதுகாவலராக பணிபுரிந்த மெலானியா தனது கணவர் டிரம்பை சந்தித்தார். தற்போது அவர் வெள்ளை மாளிகையை குறி வைத்துள்ளார்.

டொனால்டு டிரம்பை திருமணம் செய்யும் முன்பு நியூயோர்க்கில் மொடல் அழகி ஆக இருந்தார். அப்போது விபச்சார தொழில் செய்து வந்தார் என செய்தி வெளியிட்டது. இதனால் அதிர்ச்சி அடைந்த மெலானியா டிரம்ப் அந்த பத்திரிகை மீது நீதிமன்றில் வழக்கு தொடர்ந்துள்ளார். (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவன் கார்ட் திட்டத்திற்கு அரசே அனுமதி வழங்கியது

## மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

அரசாங்கத்திற்கு டொலர்களில் வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அவன் கார்ட் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கியது தமது அரசாங்கமே என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கோடிக்கணக்கில் வருமானத்தை நாட்டுக்கு இழக்கச் செய்த முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனுக்கு எதிராக விசாரணைகள் இல்லை. எனினும். யுத்தத்தை நிறைவு செய்த பின்னர் இராணுவத்தினரை இணைத்துக் கொண்டு நாட்டுக்கு சேவை செய்த கோத்தபாய ராஜபக்ஷ மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் நல்லாட்சி அரசாங்கம் ராஜபக்ஷக்களுக்கு திட்டாமல் உரையாற்றிய நாட்களே இல்லை என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். மலேசியாவிலிருந்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தொலைபேசியூடாக அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (இ-10)

# கூட்டு எதிர்க்கட்சியினர் வந்தாலும் வராவிட்டாலும் ஆண்டு விழா நடைபெறும்



கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் பங்கேற்றாலும் இல்லாவிட்டாலும் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆண்டு நிறைவு நிகழ்வு நடைபெறும் என மீன்பிடித்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மீன்பிடித்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில். சுதந்திரக் கட்சியின் 65ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் பாரியளவு மக்கள் பங்களிப்புடன் நடைபெறும்.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் பங்களிப்புடன் நிகழ்வுகளை நடத்த நாம் திட்டமிட்டிருந்தோம்.

அந்த நிலைமை தொடர்ந்தும் காணப்படுகின்றது.

கூட்டு எதிர்க்கட்சியின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிகழ்வில் பங்கேற்பதில்லை எனவும். தனியான கட்சி அமைப்பதாகவும் கூறி வருகின்றனர்.

இதனால் மக்கள் மத்தியில் சுதந்திரக் கட்சி பிளவடைந்து விடும் என்ற பீதி ஏற்பட்டுள்ளது.

மக்களின் இந்த பீதியை களையும் நோக்கில் குருநாகலில் நடைபெறும் இந் நிகழ்வில் பாரியளவில் மக்கள் கூட்டமொன்றை திரட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# கோர விபத்தில் நால்வர் பலி; 7 பேர் வைத்தியசாலையில்




(கொழும்பு)


தம்புள்ளை கலேவேலயடி கல்பொத பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நால்வர் பலியானதுடன் 7 பேர் படுகாயங்களுடன் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பேருந்தும் வானொன்றும் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களில் சிறு குழந்தையொன்றும் அடங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் விபத்துடன் தொடர்புடைய பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-10)

# நிலக்கண்ணிவெடிகளை அகற்ற ஜப்பான் நிதி உதவி வழங்கும்



நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்கு ஜப்பான் நிதி உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

நல்லிணக்கத்துடன் அபிவிருத்தி நோக்கிப் பயணிக்கும் இலங்கையை நிலக்கண்ணி வெடிகளற்ற நாடாக மாற்றியமைக்கும் நோக்கில் இந்த உதவி வழங்கப்பட உள்ளது.

நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு ஜப்பான் 884 இலட்சம் ரூபாவினை வழங்க இணங்கியுள்ளது. வடக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலக் கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இந்த உதவி வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பிலான உடன்படிக்கை இலங்கைக்கான ஜப்பான் தூதரகத்தில் நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கொனிச்சி சுகனுமாவும், ஹலோ ட்ரஸ்ட் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர் எட்வர்ட் ரொபர்ட் சய்பிரட் ஆகியோரும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

நிலக் கண்ணிவெடி அகற்றும் மனிதாபிமான நடவடிக்கையின் ஓர் அங்கமாக இவ்வாறு உதவிகளை ஜப்பான் வழங்கவுள்ளது. (இ-10)

## இன்று ஒரு தகவல்

### ஆண்- பெண் நட்புத் தவறானதா?

வெளிநாடுகளில் – ஏன் பிற மாநிலங்களில் இருக்கும் சூழ்நிலை வேறு. தமிழகத்தில் இருக்கும் சூழ்நிலை வேறு.

ஓர் ஆணும் பெண்ணும் பேசினாலேயே அதற்குப் புது அர்த்தம் கற்பிக்கிறவர்கள் இங்கு அதிகம்.

தமிழ்ப் பண்பாடு ஆணையும் பெண்ணையும் ரொம்பவே விலகி இருக்க வேண்டும் என்று மறைமுகமாக வற்புறுத்துகிறது. நடுத்தர வயதைக் கடந்துவிட்ட ஓர் அம்மாள் பக்கத்தில் இளைஞன் ஒருவன் உட்கார முடியாது. பஸ்ஸில் கலாட்டா ஆகிவிடும்.

சிற்றூர்களில்– கிராமங்களில் இந்தக் கொடுமைகள் மிக அதிகம். ஒருவரை ஒருவர் பார்த்தாலும் சிரித்தாலும் போதும். கயிறு திரித்துக் கதை கட்டிவிடுவார்கள்.

ஆக ஓர் ஆணும் பெண்ணும் எந்தவிதமான மனவிகற்பமும் இல்லாமல் பழகினால் கூட , சுற்றுப்புறச் சூழ்நிலைக்கு மதிப்புத் தந்து விழிப்பாக இருக்க வேண்டும்.

எந்தச் சூழ்நிலையில் பழக நேர்கிறதோ அந்தச் சூழ்நிலையோடு நட்பை வைத்துக் கொள்ள வேண்டும். கல்லூரியில் கூடப் படிக்கும் பையனா– பேச்சுவார்த்தைகளைக் கல்லூரியோடு வைத்துக் கொள்ள வேண்டும்.

அலுவலகத்தில் அடுத்த சீட் பெண்ணா? அலுவலகத்தோடு நட்பை முடித்துக் கொள்ள வேண்டும். வழியில், தெருவில் பார்க்க நேர்ந்தால் மிக இலேசான புன்னகை போதும். அந்த எச்சரிக்கைப் புன்னகைக்குப் பின்னர் விளக்கம் கொடுத்துக் கொள்ளலாம்.

கல்லூரி, அலுவலகம் என்றால் கூட எல்லை மீறிப் பேசி சிரித்துப் பழகக் கூடாது. சுற்றியிருப்பவர்கள் சும்மாயிருக்கமாட்டார்கள். தெரிந்தவர்களை விடுங்கள்; மூன்றாம் மனிதர் பார்த்தால் கூட மனத்தால் இருவரையும் முடிச்சுப் போட்டுப் பார்ப்பார். இதற்கு இடம் கொடுப்பானேன்.

உடலால் ,உள்ளத்தால் கண்ணியமான இடைவெளி காப்பாற்றப்பட வேண்டும். நட்பு என்ற புனிதச் சொல்லுடன் கள்ள என்ற விஷச் சொல் இணைய இடந்தரக் கூடாது.

முடிந்தவரை சிஸ்டர் என்றும் பிரதர் என்றும் பிறர் காதுபட ஒருவரையொருவர் அழைக்கலாம். நல்லது: உண்மைகளைக் கூடச் சில சமயம் தம்பட்டம் போடச் சொல்லி உலகம் எதிர்பார்க்கிறது என்ன செய்வது?

தோழரின் அல்லது தோழியின் குடும்பத்துடன் பழக நேர்ந்தால் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கே அதிக முக்கியத்துவம் தர வேண்டும். அதாவது, உடன் பயின்ற தோழிக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று வைத்துக் கொண்டால் அவள் கணவருடன் தான் அதிகமாகப் பழக வேண்டும். தன் தோழியுடனான நட்பு நிலைத்திருக்க வேண்டுமானால் இதுவே வழி, தலைகீழாக நடந்து கொண்டால் தோழியின் கணவனே தூய நட்புக்கும் எதிரியாகிவிடுவான்.

பிறர் முன்னிலையிலும் , தனிமையிலும் சரி பேசும் போது வார்த்தைகளை தராசில் இட்டுப் பிறகே பேச வேண்டும். தவறான கற்பனைகளுக்கு இடந்தரக் கூடாது.

எங்களுடைய நட்பு தூய நட்பு. யார் என்ன பேசினாலும் எங்களுக்குக் கவலையில்லை: எங்கள் மனச்சாட்சிக்கு உண்மை தெரியும்: யாரைக் கண்டும் நாங்கள் அஞ்ச வேண்டியதில்லை என்று வறட்டுத்தனமாக பேசிக் கொண்டிராமல்–

சூழ்நிலைக்கு அதிக முக்கியத்துவம் தந்து பழக வேண்டும். இல்லாவிட்டால்–

அப் பெண்ணை பிறர் அநாவசியமாக விமர்சனம் செய்யும் மோசமான சூழ்நிலை உருவாகும்.


**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# க.பொ.த.(சா/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## கொழும்பு இந்துக் கல்லூரி — தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும்-I,II


1. பின்வருவனவற்றுள் தகவல் அல்லாதது எது?
   1) காலநிலை அறிக்கை 2) நேர அட்டவணை
   3) விலைப்பட்டியல் 4) தரவுகள் ஏதுமற்ற வரைபு
2. பின்வருவனவற்றுள் தகவல் ஒன்றின் பண்பு அல்லாதது எது?
   1) சரியானது 2) அளவு
   3) பொருத்தமானது 4) காலத்துக்கு ஏற்ற தன்மை
3. கணனியின் பிரதான தொழிற்பாடு எது?
   1) இணையப் பாவனை 2) கணித செயற்பாடுகளை மேற்கொள்ளல்
   3) தகவல்களை சேமித்தல் 4) தரவுகளை தகவல்களாக மாற்றுதல்
4. திரான்சிஸ்டர் (taransister) உபயோகிக்கப்பட்டது.................
   1) 1ம் தலைமுறை 2) 2ம் தலைமுறை
   3) 3ம் தலைமுறை 4) 4ம் தலைமுறை
5. பின்வரும் கணனி பாகங்களை கருத்திற்கொள்க.
   A. சாவிப் பலகை B. வருடி (Scanner)
   C. அச்சிடும் பொறி (Printer) D. ஒலிபெருக்கி (Speaker)
   மேலுள்ளவற்றுள் உள்ளீட்டு சாதனங்கள் எவை?
   1) A உம் B உம் 2) A உம் C உம்
   3) C உம் D உம் 4) எல்லாம்
6. பின்வரும் வன்பொருட்களுள் துணைத்தேக்க சாதனங்கள் எவை?
   A. தற்போக்கு பெறுவழி நினைவகம் (RAM)
   B. பளிச்சீட்டு சாதனம் (Flash Drive)
   C. வன் வட்டு (Hard Disk)
   D. பதுக்கு நினைவகம் (Cache memory)
   1) C மட்டும் 2) A மட்டும்
   3) B உம் C உம் 4) B, C மற்றும் D
7. பின்வருவனவற்றுள் மைய முறைவழியாக்க அலகுக்குள் உள்ளடங்குபவை எவை.
   A- கட்டுப்பாட்டு அலகு B- உள்ளீட்டு சாதனங்கள்
   C- வெளியீட்டு சாதனங்கள் D- எண்கணித தர்க்க அலகு
   1) A மட்டும் 2) B உம் C உம்
   3) A, B மற்றும் C 4) A உம் D உம்
8. $1001101_2$ துவித எண்ணின் பதின்ம எண் பெறுமானம்.
   1) 71 2) 77 3) 79 4) 83
9. $AC_{16}$ இன் சமவலுப் பெறுமானம்.
   1) $172_{10}$ 2) $10101100_2$
   3) $152_{10}$ and $1010001_2$ 4) $172_{10}$ and $10101100_2$
10. மிகக் குறைந்த பெறுமானம் உடையது எது?
    1) $45_{10}$ 2) $11000_2$ 3) $37_8$ 4) $1A_{16}$
11. "A" என்பதன் ASCII பெறுமானம் 1000001 எனின் BAD இன் பெறுமானம் யாது?
    1) 1000010 1000001 1000001 2) 1000001 1000100 1000100
    3) 1000010 1000001 1000100 4) 1000010 1000001 1010000
12. 1 MB இல் உள்ளடங்குவது
    1) $2^6$ Kilobytes 2) $2^{20}$ Bytes
    3) $10^6$ Bytes 4) $2^{20}$ Bits
13. பின்வரும் தர்க்கப்படலையின் பெயர் யாது?



    1) AND 2) XOR
    3) NOR 4) NAND
14. A, B ஆகியன உள்ளீடுகளாகவும் C வருவிளைவாகவும் உள்ள தரப்பட்ட தர்க்கப் படலையை கருதுக.
    வருவிளைவு C=1 ஆக இருக்கும் போது உள்ளீடுகள் தொடர்பாகப் பின்வருவனவற்றில் எது சரியானது?





    1) A எப்போதும் 0 ஆக இருத்தல் வேண்டும்.
    2) A எப்போதும் 1 ஆக இருத்தல் வேண்டும்.
    3) B எப்போதும் 0 ஆக இருத்தல் வேண்டும்.
    4) B எப்போதும் 1 ஆக இருத்தல் வேண்டும்.
15. பின்வரும் தர்க்க கோவையில் A+A க்கு சமவலுவானது.
    1) 1 2) 0 3) A 4) $\overline{A}$
16. கீழே உருவில் காட்டப்படும் இடத்தியல் வலையமைப்பு (Network Topology) எது?



    1) பஸ் (Bus)
    2) நட்சத்திரம் (Star)
    3) வளையம் (Ring)
    4) மரம் (Tree)
17. கீழே உருவில் காட்டப்படுவது
    1) சமாந்தரக் குதை (parallel Port) 2) USB குதை
    3) PS/2 குதை 4) தெரிவிப்பி குதை (VGA)
18. அலுவலகங்களில் கணனிகள் வலையமைப்பு (Network) செய்யப்படுவதனால் பின்வரும் எந்த பிரச்சினைகள் தீர்க்கப்படும்?
    A- கோவைகளை பரிமாற்றம் செய்வதில் உள்ள கடினம்.
    B- தரவுகள் களவாடப்படல்
    C- தொடர்பாடலுக்கு அதிக பணம் செலவிடப்படல்
    1) A உம் C உம் 2) A உம் B உம்
    3) B உம் C உம் 4) எல்லாம் A, B, C
19. பின்வருவனவற்றுள் பிரயோக மென்பொருள் (Application Software) எது?
    1) Windows xp 2) Linux
    3) Ubuntu 4) MS-Word
20. கணனி நச்சுப்பொருள் (Computer virus) தொடர்பாக சரியான கூற்று எது?
    1) இது ஒரு கணனி மொழியாகும்.
    2) இது மனிதனுக்குள்ளும் பரவக்கூடியது.
    3) Trojan ஒரு கணனி மொழியாகும்.
    4) நச்சுப் பொருள் காப்பு (Anti-virus) எப்போதும் நச்சுப் பொருட்களில் இருந்து பாதுகாக்கும்.
21. Windows பணிசெயல் முறைமையில் அழிக்கப்படும் கோவைகள் தற்காலிகமாக சேமிக்கப்படும் இடம்.
    1) Recycle Bin 2) My Computer
    3) My Documents 4) Task Bar
22. சொல்முறை வழிப்படுத்தலில் பின்வரும் எந்தக் குறியீடு ஆவணத்தின் வலது, இடது ஆகிய இரு ஓரங்களில் (Margins) எழுத்துக்களை நேர்ப்படுத்துவதைக் காட்டுவது.




23. ஒரு சொல்முறை வழிப்படுத்தல் (Word Processing) மென்பொருளில் உள்ள ஓர் ஆவணத்திற்குப் பிரயோகிக்கப்படும் படிமுறைகளைச் செயல்நீக்கப் (Undo) பயன்படும் படவுரு (Icon) எது?




24. விரிதாள் ஒன்றில் மிகச்சிறிய பெறுமானத்தை காண்பதற்கு பின்வரும் எந்த சூத்திரத்தை நுழைக்க வேண்டும்.
    1) =max() 2) =min() 3) =lower() 4) =floor()
25. கீழே காட்டப்படும் விரிதாளில் A4 கலத்தில் மொத்த கூட்டுத்தொகையை காண்பதற்கு நுழைக்க வேண்டிய சூத்திரம்
    A - =SUM(A1:A3)
    B - =A1 SUM A2 SUM A3
    C - =A1 + A2 + A3
    D - =SUM(A1,A2,A3)
    1) A உம்
    2) A உம் B உம்
    3) A உம் C உம்
    4) A உம் D உம்

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | 10 | | |
| 2 | 20 | | |
| 3 | 30 | | |
| 4 | | | |
| 5 | | | |

26. கீழே காட்டப்படும் விரிதாளில் B7 கலத்தில் மொத்த கூட்டுத்தொகையை காண்பதற்கு =SUM(B2:B6) எனும் சூத்திரம் நுழைக்கப்பட்டுள்ளது. B2, B3, B4 கலங்களின் தரவு வகைகள் யாது?
    1) Numbers, Labels, left aligned labels
    2) Numbers, Labels, left aligned Numbers
    3) Numbers, left aligned Numbers and labels
    4) Numbers, left aligned Numbers, left aligned labels


| | A | B | C |
|---|---|---|---|
| 1 | Name | Points Collected | |
| 2 | Kenujan | 45 | |
| 3 | Lavanujan | 50 | |
| 4 | Enoch | '78 | |
| 5 | Joel | 15 | |
| 6 | Rubesh | 25 | |
| 7 | Total | 135 | |

27. மின் நிகழ்த்துகை (MS Powerpoint) இல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் பகுதியை எவ்வாறு அழைக்கப்படும்?
    1) Sheet 2) Slide 3) Page 4) cell
28. தரவுத்தளமொன்றில் (Database) தனிப்பட்ட புலமானது (Unique Field) எவ்வாறு அழைக்கப்படும்?
    1) பிரதான புலம் (Key Field)
    2) இரண்டாம் நிலை புலம் (Secondary field)
    3) அந்நிய சாவி (Forign key)
    4) Candidate key

16 ஆம் பக்கம் பார்க்க...

## கணிதம் தொடர்ச்சி...

09. தரப்பட்டுள்ள உருவில் $B\hat{A}P = C\hat{A}P$ ஆகும். B யில் வட்டத்திற்கு வரையப்பட்டுள்ள ஒரு தொடலி நீட்டப்பட்ட கோடு AP ஐ Q இற் சந்திக்கின்றது BQ=QC ஆகும்.





1. $Q\hat{B}P = a$ எனின். $B\hat{A}C$ யின் பருமனை a இன் சார்பில் எழுதுக.
2. $B\hat{C}Q = B\hat{A}Q$ எனக் காட்டுக.
3. ABQC ஒரு வட்ட நாற்பக்கலெனக் காட்டுக.
4. BPD ஓர் இருசமபக்க முக்கோணியெனக் காட்டுக.

10. ஒரு முக்கோணி ABC இல் AB, AC ஆகிய பக்கங்களின் நடுப்புள்ளிகள் முறையே P, Q ஆகும். நீட்டப்பட்ட கோடு BQ உம் A இனூடாக PQ இற்குச் சமாந்தரமாக வரையப்பட்டுள்ள கோடும் R இற் சந்திக்கின்றன. மேற்குறித்த தகவல்களை உள்ளடக்கிய ஓர் அமைப்பை வரைந்து காட்டி. பரப்பளவு ABCR=8 பரப்பளவு APQ என நிறுவுக.

11. 10.5cm ஆரையுள்ள ஒரு செவ்வட்ட உருளைத் திண்ம உலோக குற்றியின் உயரம் 20cm ஆகும். அவ்வுருளையை உருக்கி 25 சம திண்ம உலோகக் கோளங்களைச் செய்யும் போது $230cm^3$ உலோகம் எஞ்சியிருக்கின்றது.
i. $\pi = 22/7$ எனக் கொண்டு உருளை வடிவ உலோகக் குற்றியின் கனவளவைக் கணிக்க.
ii. செய்யப்படும் ஓர் உலோகக் கோளத்தின் கனவளவு யாது?
iii. செய்யப்படும் ஒரு கோளத்தின் ஆரை r எனின். $\pi = 3.14$ எனக் கருதி மடக்கை அட்டவணைகளைப் பயன்படுத்தி $r^3$ இன் பெறுமானத்தைக் கிட்டிய முழு எண்ணிற்குப் பெறுக.
iv. மேலே $r^3$ இற்குப் பெற்ற பெறுமானத்தைக் கொண்டு கோளத்தின் ஆரையைக் கணிக்க.

12. ஒரு வங்கியில் கணக்கை வைத்திருக்கும் 250 நபர்களின் தொழில்கள் பற்றிய தகவல்கள் பின்வரும் வெண்வரிப்படத்தில் தரப்பட்டுள்ளன.




தனியார் துறையின் தொழில்களில் 73 நபர்களும் அரசாங்கத் தொழில்களில் 120 நபர்களும் சுய தொழில்களில் 63 நபர்களும் ஈடுபட்டிருப்பின்
i. அரசாங்கத் தொழில்களில் மாத்திரம் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாது?
ii. ஒரு சுய தொழிலில் மாத்திரம் ஈடுபட்டுள்ளவர்களுக்காகக் குறைந்த வட்டிக்குக் கடனை வழங்குவதற்கு வங்கி தீர்மானித்துள்ளது. அதற்காக விண்ணப்பிக்கத்தக்கவர்களின் எண்ணிக்கை யாது?
iii. வெண் வரிப்படத்தில் நிழற்றப்பட்டுள்ள பிரதேசத்தினால் வகைகுறிக்கப்படும் தொழில் பற்றி சொற்களில் விபரிக்க. அதனை A, B, C ஆகியன சார்பாகத் தொடைக் குறிப்பீட்டிலும் எழுதுக.
iv. இவ் வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்களிடையே மேற்குறித்த மூன்று வகைகளிலும் எந்தத் தொழிலிலும் ஈடுபடாதவர்களின் எண்ணிக்கையை கண்டு அது தனியார் தொழிலுடன் ஒரு சுய தொழிலிலும் ஈடுபடுபவர்களின் எண்ணிக்கையின் இரு மடங்கெனக் காட்டுக.
v. தனியார் துறையின் தொழிலுடன் ஒரு சுய தொழிலிலும் ஈடுபடுபவர்கள் சுயதொழில் செய்வதை விட்டால். மேற்குறித்த வெண்வரிப்படம் மாறும் விதத்தை உரிய எண் சார்ந்த தகவல்களுடன் வரைந்து காட்டுக. ◆◆◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பவியலும் பகுதி-I தொடர்ச்சி...

29. தரவுத்தளமொன்றில் Students age எனும் புலத்திற்குரிய தரவு வகையானது எது?
1) YES/NO 2) Number 3) Hyperlink 4) OLE Object

30. எமக்குத் தேவையான நிபந்தனைகளின் கீழ் மாத்திரம் தரவுகளைப் பார்ப்பதற்கு பயன் படுத்துவது எது?
1) அட்டவணை (Table) 2) பதிவு (report)
3) வினவல் (Query) 4) எல்லாம்

31. முதலாவது கணனி செய்நிரலாளர் (Computer Programmer) யார்?
1) Charls 2) Ada 3) babbage 4) Billgates

32. எந்த மொழியினை கணனியினால், இலகுவாக விளங்கிக் கொள்ள முடியும்?
1) English 2) Machine language
3) Visual basic 4) High-level language


33. பின்வருவனவற்றுள் கணனி செய்நிரலாக்க மொழிகளை கணனி மொழிக்கு மாற்றுவதற்கு பயன்படுத்தப்படுவது எது?
A- processor B- Interpreter C- Compiler
1) A உம் B உம் 2) B உம் C உம்
3) C 4) A,B,C மட்டும்

34. ஒருங்கு சேர்ப்பி (Assembler) பாவனையில் காணப்பட்டது
1) 1ம் தலைமுறை 2) 2ம் தலைமுறை
3) 3ம் தலைமுறை 4) 4ம் தலைமுறை


35.................ஆனது பிரச்சினைகள் தீர்க்கும் படிமுறையை எழுத்து வடிவில் காட்டுவதற்கு பயன்படுத்தப்படுகிறது.
1) போலிக்குறிமுறை(Psuedocode) 2) Visual basic
3) பாய்ச்சற்கோட்டுப்படம்(Flowchart) 4) HTML


36. போலிக்குறிமுறையில் (Pseudocode) முறைவழிப்படுத்தலைக் ( Process) காட்டும் குறியீடு எது?

1) 2) 3) 4)



37. கீழுள்ள வரைபடத்தில் A,B என்பனவற்றை அடையாளங் காண்க.



1) A - B – No
2) A - B yes
3) A - B – yes
4) A - B - No

38. மேலே வினா இலக்கம் 37 இல் காட்டப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தின் கட்டமைப்பு யாது?
1) வரிசை முறை (Sequence)
2) தெரிவு செய்தல் முறை (Selection)
3) மீண்டும் மீண்டும் செய்தல் (Repitition)
4) வரிசை முறையும் தெரிவு செய்தல் முறையும்

39. கீழே தரப்பட்டுள்ள போலிக்குறிமுறையின் (Psuedocode) வெளியீடுகளைக் காண்க.

```
Begin
        Input number One
        Input numberTwo
        Result = number One/number Two
        Output Result
        Output numberTwo
        Output number One
End
```

பொருத்தமான வெளியீடுகளைத் தெரிவு செய்க.
1) 4 .12. 3 2) 5. 2. 10 3) 5. 10. 2 4) 4. 8. 2


40. கீழே தரப்பட்டுள்ள பாய்ச்சற் கோட்டுப்படத்தின் வெளியீடு யாது?

```
N=9
While n>5
        N=n-2
End while
Print n
```

1) 11 2) 5 3) 7 4) 9

## பகுதி-II

01) 1. தரவுக்கும் தகவலுக்குமிடையிலான வேறுபாட்டை தருக.
2. $10101001_2$ இனை பதினறும எண்ணுக்கு (Hexa Decimal) மாற்றுக.
3. கீழே தரப்பட்ட தர்க்கப்படலைக்கான உண்மை அட்டவணையை வரைக.





4. வழிகாட்டி ஊடகம், கதிர்த்த ஊடகம் என்பனவற்றிற்கு 2 உதாரணங்கள் வீதம் தருக.
5. கணனியின் வெளியீட்டு சாதனங்கள் 2 தருக.
6. பின்வரும் தலைமுறைகளில் கணனியில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைக் குறிப்பிடுக.
I. 1ம் தலைமுறை
ii. 2ம் தலைமுறை
iii. 3ம் தலைமுறை
iv. 4ம் தலைமுறை
v. 5ம் தலைமுறை
7. கணனி வலைப்பின்னலின் நன்மைகள் 2 தருக.
8. CRT திரையுடன் ஒப்பிடும்போது LCD திரையின் நன்மைகள் எவை?
9. கணனி வலைப்பின்னலின் (Computer Networks) வகைகள் எவை?
10. இடைவெளிகளை நிரப்புக.

```
Begin
Input Marks (M)
      A
.................. M >=50 Then
          Print "Pass"
Else
          Print "Fail"
      B
..................
End
```

02) 1. பின்வரும் தர்க்க கோவைக்கான தர்க்கப்படலையை (Logic gates) வரைக.
$$F = (A+\bar{B}).(A+B)$$
2. பின்வரும் தர்க்க கோவைக்கான உண்மை அட்டவணையை (Truth Table)தயாரிக்குக. $F = \bar{A} + A.B + \overline{A.C}$

3.




மேலுள்ள தர்க்கப்படலைக்கான தர்க்க கோவையை (Boolean expression) வரைக.

03) கீழுள்ள MS Excel ஆவணத்தை அவதானித்து விடை தருக.

| | A | B | C | D | E | F | G | H | I |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | Term Test Marks of Students | | | | | | |
| 2 | Index No | Name | Science | Maths | English | Total | Average | Grade | |
| 3 | 1111 | M.John | 65 | 70 | 65 | | | | |
| 4 | 1112 | T.Maya | 70 | 75 | 80 | | | | |
| 5 | 1113 | N.Ajith | 65 | 80 | 75 | | | | |
| 6 | 1114 | A.Amal | 80 | 78 | 75 | | | | |
| 7 | 1115 | S.Sasi | 78 | 85 | 75 | | | | |
| 8 | 1116 | B.Roy | 70 | 68 | 80 | | | | |
| 9 | 1117 | M.Khan | 82 | 85 | 78 | | | | |
| 10 | | | | | | | | | |
| 11 | | Max Marks | | | | | | | |
| 12 | | Min Marks | | | | | | | |
| 13 | | | | | | | | | |


1. மேலுள்ள பரம்பல் தாளில் செயற்பாட்டில் இருக்கும் கலம் (Active Cell) எது?
2. மேலே F3 கலத்தில் மொத்த புள்ளியை காண்பதற்கான சூத்திரத்தை தருக.
3. மேலே G3 கலத்தில் சராசரிப்புள்ளியை காண்பதற்கான சூத்திரத்தை தருக.
4. C11 விஞ்ஞான பாடத்தில் பெற்ற புள்ளிகளுள் அதிஉயர்ந்த புள்ளியைக் காண்பதற்கான சூத்திரத்தை தருக.
5. F3 கலத்தில் உள்ளீடு செய்யப்பட்ட சூத்திரத்தை F4 இலிருந்து F9 வரை பிரதி செய்வதற்கான படிமுறை கீழே தரப்படுகின்றது.
◆ சுட்டியை.......A.......கலத்தை நோக்கி நகர்த்துக.
◆ சுட்டியை தெரிவு செய்யப்பட்ட கலத்தின்.......B.......பக்க கீழ் மூலையில் வைக்கும் போது Cursor ஆனது + அடையாளமாக மாறும்.
◆ சுட்டியின் இடது button ஐ அழுத்தியபடி .......C...... கலம் வரை இழுத்துச் (Drag and drop) செல்க.
A,B,C ஆகியனவற்றை பெயரிடுக.)

04) பின்வரும் தரவுத்தள அட்டவணையை அவதானித்து விடை தருக.

| Child_ID | Name | DoB | Height | Weight | Pollio_vaccination | Measels_Vaccination |
|---|---|---|---|---|---|---|
| 0011 | Sayan | 25/02/2014 | 102 | 35 | Yes | yes |
| 0012 | Abi | 15/04/2014 | 110 | 34 | Yes | No |

1. A. Child_ID, Name, DoB, Height, Pollio_vaccination ஆகியனவற்றின் தரவு வகையினை தருக.
B. முதன்மைச் சாவிக்கான புலம் (Primary key Field) எது?
2. முதன்மைச்சாவி (Primary key) என்றால் என்ன?
3. பாடசாலைகளில் கணனி மயப்படுத்தப்பட்ட தரவுத்தளங்களை உபயோகிப்பதால் கிடைக்கும் நன்மைகள் 3 தருக.

05)
1. Debugging என்றால் என்ன?
2. கீழுள்ள பந்தியை வாசித்து பாய்ச்சற் கோட்டுப்படத்தை பூர்த்தி செய்க.
மோட்டார் கார் ஓட்டப் பந்தயம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பங்குபற்றும் போட்டியாளர்கள் காரினை செலுத்தும் போது அதன் வேகத்தை 100 KM/h க்கு அதிகமாகவே வைத்திருக்க வேண்டும். அவ்வாறு தவறும் பட்சத்தில் அவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள். அவர்கள் வெற்றி பெற 50 laps இனையும் பூர்த்தி செய்ய வேண்டும். அவ்வாறு இல்லையெனில் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள்.




3. கீழுள்ள போலிக்குறிமுறைக்கான (pseudo code) பாய்ச்சற் கோட்டுப் படத்தை (flowchart) வரைக.

```
Begin
        Input hours, rate
        If hours ≤ 40 then
                pay = hours * rate
        Else
                pay = 40 * rate + (hours - 40) * rate * 1.5
        Print pay
        EndIf
End
```

06.சிறுகுறிப்பு எழுதுக.
1. சுகாதாரத்துறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்(ICT) எவ்வாறு உபயோகிக்கப்படுகிறது?
2. இலங்கையின் கல்வித்துறையில் தகவல் தொடர்பாடலின் பங்களிப்பு பற்றி சுருக்கமாக தருக.
3. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மூலம் எதிர்நோக்கும் பிரச்சினைகள் எவை?
◆◆◆

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னைய ஆட்சியாளர்களின் அநீதிகள் தொடர்பாக குறைபட்டுக்கொண்டவர்களே அணிசேர்ந்துள்ளனர்

## ஜனாதிபதி மைத்திரி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**முன்னைய ஆட்சியிலும் கட்சியிலும் தமக்கு ஏற்பட்ட அநீதிகள் தொடர்பாக தம்மிடம் மனக்குறைகளை வெளிப்படுத்தியவர்களே இன்று அத்தகைய தொந்தரவுகளைக் கொடுத்தவர்களுடன் இணைந்து புதியதொரு சக்தியை உருவாக்க முயற்சித்துவருவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

கொழும்பு பண்டார நாயக்க சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் காலஞ்சென்ற ஜெயராஜ் பெர்ணாந்து புள்ளேயின் உருவச்சிலையைத் திறந்துவைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

ஜெயராஜ் பெர்ணாந்து புள்ளே நாட்டுக்கும் கட்சிக்கும் தேவையான ஒரு சந்தர்ப்பத்தில் எம்மை விட்டு பிரிந்துவிட்ட போதும் அவர் இந்நாட்டின் தேசிய அரசியலில் உயிர்வாழும் ஒரு ஆளுமையாவார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மிகப்பெரும் பலமாக இருந்த ஜெயராஜ் பெர்ணாந்துபுள்ளே தாமும்அன்று அரசாங்கத்திலும் கட்சியிலும் பல்வேறு உள்ளகப்பிரச்சினைகளுக்கும்மன உளைச்சல்களுக்கும் ஆளாகியதாகக் குறிப்பிட்ட ஜனாதிபதி. அவர் உயிரோடு இருந்திருப்பின் தமக்கு முன்னரே முன்பிருந்த அரசாங்கத்திலிருந்து விலகிச்சென்றிருப்பார் என்றும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் செய்ததாக சிலர் வாய்ச்சவடால் விட்டபோதும் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனவினது அரசாங்கத்துடன் போராடுவதற்கு சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையாருடன் மிகவும்



சொற்பமான சிரேஷ்ட உறுப்பினர்களே இருந்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இளம் அரசியல்வாதிகளாக அன்று ஜெயராஜ் பெர்ணாந்துபுள்ளே போன்று கட்சிக்காக தாம் பொறுப்புக்களை நிறைவேற்றியதை நினைவுகூர்ந்த ஜனாதிபதி. தேசிய அரசியலில் சகல பொறுப்புக்களையும் கடமைகளையும் மிகவும் நேர்மையாகவும் அமைதியாகவும் நிறைவேற்றிய ஜெயராஜிடம் இந்நாட்டின் எழுந்து வரும் ஒரு அரசியல் தலைவராக மிளிரக்கூடிய அறிகுறி காணப்பட்டதாகவும் தெரிவித்தார். (இ)

# இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவோம்

## பான் கீ மூன் உறுதியளிப்பு

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் இலங்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்தை ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் பாராட்டியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் சந்தித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க கொள்கையை வலுப்படுத்த அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் அனைத்து மாகாணங்களுக்கும் நியாயமான அபிவிருத்தியை பெற்றுக் கொடுக்கும் அரசாங்கத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பில் இதன்போது பேசப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இலங்கையின் மேலதிக அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபையினால் வழங்க முடியுமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்குவதாகவும் பான் கீ மூன் கூறியுள்ளார்.

இதன்போது. புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன. செயலாளர் நாயகத்திடம் விளக்கியுள்ளார்.

இம்மாதம் நடைபெற உள்ள ஐ.நா. பொது சபை கூட்டத் தொடரில் சர்வதேச சமூகத்துடன் உள்ள உறவுகளை மேலும் முன்னேற்றமடையச் செய்வதற்கு இலங்கை நடவடிக்கை எடுத்துள்ளது என்று நம்பிக்கையுடனான எதிர்பார்ப்பு தனக்கு தோன்றியுள்ளதாக பான் கீ மூன் தெரிவித்தார். (இ-10)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 824

Search for people, places and things — Nagendram Home

ராஜிவ்




அன்பு காட்டி
அரவணைக்க
தெரிந்தால்
எந்த
உயிரும்
நண்பனே

அகில்ராஜ்




அடிச்சிக்கிட்டேஇருக்கா நான்
அவளை டைவர்ஸ் பண்ணப்போறேன்!

ராஜீவ்

**தண்ணீர்**

தாத்தா ஆற்றில் பார்த்தார்
அப்பா கிணற்றில் பார்த்தார்
நாம் குழாயில் பார்க்கின்றோம்
மகன் போத்தலில் பார்க்கின்றான்
பேரன் எங்கு பார்ப்பானோ!
தண்ணீரை சேமியுங்கள்!

நந்து

மனைவி கத்த ஆரம்பிச்சதும்

கதவு ஜன்னலை மூடுறவன் மனுஷன்
டி.வி வொலிமை கூட்டுறவன்
பெரிய மனுஷன்
சட்டைய போட்டு வெளியே
போறவன் ஞானி
காதுல எதுவுமே விழாத மாதிரி
உட்கார்ந்திருப்பவன் வாழும் கடவுள்.

வினு

நீ கீழே
விழும்போதெல்லாம்
உன் தோல்வியின்
காரணத்தை

உன்னால்
கண்டுபிடிக்கத் தெரிந்தால்
நீயும் நியூட்டன் தான்

லவன்

வாயில்லா ஜீவன்களை அடித்து
விரட்டாதீர்கள்..
அவைகளுக்கும் குடும்பம் என்று
ஒன்று உண்டு







நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆபரண அதிகார சபையில் பதிவு செய்தல் வேண்டும்

தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் அதிகாரச்சட்டத்தின் 17ஆம் பிரிவின் பிரகாரம் ஆபரண விற்பனை வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் மேற்படி தேசிய இரத்தினக்கல் ஆபரண் அதிகார சபையில் பதிவு செய்தல் வேண்டும் என சட்டமாக்கப்பட்டுள்ளது. கடந்தகால யுத்த சூழ்நிலைகளால் இவ்வாறான பதிவுகள் யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது இவ்வாறான பதிவுகளை மேற்கொள்ள தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். யாழ்.வணிகர் கழகம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரூடாக கேட்டுக்கொண்டதற்கிணங்க தேசிய இரத்தினக்கல் கூட்டுத்தாபன அதிகாரிகள் எதிர்வரும் 7 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் பிற்பகல் 4.00 மணிவரையில் மானிப்பாய் வீதியில் 165 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள யாழ்.வணிகர் கழக பணிமனைக்கு வருகை தந்து அனைத்து நகை வர்த்தகர்களையும் பதிவு செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். எனவே இவ் வாய்ப்பைப் பயன்படுத்தி ஆபரண வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தங்கள் பதிவுகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறு பதிவு செய்ய விரும்பும் ஆபரண வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் அடையாள அட்டை மற்றும் அதன் பிரதி வியாபார பதிவுச் சான்றிதழ் அதன் பிரதி, வியாபார பதிவுச் சான்றிதழ் இல்லாதோர் தங்கள் வர்த்தகத்தை உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவதொரு ஆவணம் ஆகியவற்றை சமர்ப்பிக்க வேண்டும். பதிவுக் கட்டணம ரூபா 5000 உம் செலுத்த வேண்டும். மேலதிக விபரங்களை 021 222 8593 தொலைபேசி மூலம் தெரிந்து கொள்ள முடியும். அத்தோடு தேசிய இரத்திக்கல் ஆபரண அதிகார சபையின்வர்ண அடையாள அட்டை பெற விரும்புவோர் இரண்டு பாஸ்போட் அளவு புகைப் படம் மற்றும் 1030 ரூபா மேலதிக கட்டணத் துடன் சமூகமளிக்கவும்.

இவ்வாறான வாய்ப்பை அனைத்து நகைக்கடை வர்த்தகர்களும் பயன்படுத்துவதன் மூலம் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சட்ட நடவடிக்கைகளில் இருந்து தங்களை பாதுகாக்க முடியும். வட மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் உள்ள நகைக்கடை வர்த்தகர்களும் இவ் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள முடியும் என யாழ். வணிகர் கழக செயளாலர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ-10)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 30 | 60 | 50 | 50 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 70 | 100 | 80 | 100 | 100 |
| தக்காளி | 50 | 50 | 40 | 50 | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 80 | 100 | 90 | 60 | 80 |
| கோவா | 80 | 100 | 70 | 120 | 90 | 80 | 80 |
| கரட் | 100 | 100 | 80 | 120 | 120 | 120 | 100 |
| பூசணி | 30 | 20 | 20 | 40 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 30 | 20 | 40 | 40 | 60 | 40 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 60 | 80 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 70 | 100 | 70 | 80 | 80 | 100 | 60 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 85 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 100 | 60 | 200 | 60 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 30 | 100 | 50 | 80 | 40 |
| கருணைக் கிழங்கு | 120 | 150 | — | 120 | - | 120 | 100 |
| பயற்றங்காய் | 80 | 100 | 60 | 120 | 50 | 80 | 80 |
| லீக்ஸ் | 120 | 100 | 80 | 120. | 100 | 120 | 100 |
| பீற்றூட் | 40 | 40 | 30 | 40 | 40 | 60 | 70 |
| கறிமிளகாய் | 100 | 100 | 80 | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 100 | 200 | 100 | 140 | 80 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 130 | 200 | 160 | 200 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 20 | 25 | 40 | 50 | 50 | 40 |
| கீரை – 1பிடி | 20 | 10 | 20 | 30 | 20 | 20 | 30 |
| தேசிக்காய் | 250 | 300 | 200 | 320 | 200 | 200 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-30 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | .— | — | — | — | — | — | ·160 |
| வெங்காயப்பூ | 80 | — | 100 | 160 | 60 | 160 | 120 |
| முள்ளங்கி | 30 | 30 | 25 | 60 | 50 | 80 | 40 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 10 | 30 | 30 | 40 | 25 |
| வல்லாரை | 30 | 10 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 40 | 20 | 30 | 50 | 40 | 80 | 60 |

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் அமைந்துள்ள நாவாந்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்,நோய் தடுப்பூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பு ஊசியை ஏற்றிக் கொள்ளும் வண்ணம் கேட்டுக் கொள்கின்றோம். இவ்வளர்ப்பு நாய்களுக்கான உரிமக்கட்டணமாக ரூபா 30 செலுத்தப்பட வேண்டும்.

05.09.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணி வரை பழம் வீதி ஆறுகால்மடம், முற்பகல் 11 மணி தொடக்கம் 1 மணிவரை சனசமூக நிலையம், ஆறுகால் மடம்,பி.ப 2.30 தொடக்கம் 4 மணிவரை செழியன் வீதி, 06. 09. 2016 முற்பகல் 9 மணி தொடக்கம் 11 மணிவரை குடியிருப்பு சனசமூக நிலையம்,முற்பகல் 11 மணி தொடக்கம் ஒரு மணி வரை அராலி வீதி, மானிப்பாய், ஒட்டுமடம், பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை ஆர்.சி. பாடசாலையடி, நாவலர் வீதி, 07. 09.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை ஆசாத்வீதி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை 1,2,3ஆம் குறுக்குத் தெரு, நாவலர் வீதி, பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை சேமக்காலை வீதி, கெனடி வீதி, 08.09.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை தபாற்கந்தோர்வீதி, நாவலர் வீதி, நாவாந்துறை, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சனசமூக நிலையம்- வசந்தபுரம், பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை சனசமூக நிலையம்-நித்திய ஒளி, 09.09. 2016 முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை சனசமூக நிலையம்-சூரிய ஒளி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சனச மூக நிலையம்- சென்.நீக்கிலஸ், பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கோவில் ஒழுங்கை, நாவாந்துறை, 14.09.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை காதி அபூபக்கர் வீதி, நாவாந்துறை, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சனசமூக நிலையம்- கண்ணாபுரம், பிற்பகல 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை 1.2.3 ஆம்குறுக்கு கண்ணாபுரம், சோலைபுரம். 15.09.2016 முற்பகல் 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கற்குளம் நாவாந்துறை, வெள்ளாந்தெரு, நாவாந்துறை, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை சிவன் பண்ணை சீனிவாசகம் வீதி, சந்தி, பிற்பகல் 2.30 தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கோணந்தோட்டம் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ-10)

# தமிழ் சினிமா வரலாறு

## சாவித்திரியை மணந்தார் ஜெமினி 244

ஜெமினிகணேசன் சிரித்துக்கொண்டே மேக்கப்பை கலைத்தார்.கூனன் வேடத்தில் நான் நன்றாக நடிப்பேனா என்று சந்தேகப் பட்டார்கள் அல்லவா? இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார்.

உன் நடிப்பு பிரமாதம். படத்தில் நீதான் ஹீரோ! என்று பாராட்டினார் நாராயண அய்யங்கார்.

மாறுபட்ட வேடத்திலும் ஜெமினிகணேசன் நன்கு நடிப்பரர் என்பதை கணவனே கண்கண்ட தெய்வம் நிரூபித்தது. இப்படத்தில் அஞ்சலிதேவி, லலிதா, நாகையா, நம்பியார் ஆகியோரும் சிறப்பாக நடித்தனர்.

நாகதேவதையாக லலிதா நடித்தார். அவர் பாடுவது போல் அமைந்த "உன்னைக் கண் தேடுதே" ,"எந்தன் உள்ளம் துள்ளி விளையாடுவதும் ஏனோ" ஆகிய பாடல்களுக்கு பிரபல இந்தி இசை அமைப்பாளர் ஹேமந்த் குமார் இசைத்தார்.

### மூவேந்தர்கள்

இந்தக்காலகட்டத்தில் எம்.ஜி.ஆரும் சிவாஜிகணேசனும் சுப்பர் ஸ்டார்களாகத் திகழ்ந்து கொண்டிருந்தார்கள். மிஸ்ஸியம்மா கணவனே கண்கண்ட தெய்வம் ஆகிய வெற்றிப்படங்களில் சிறப்பாக நடித்ததன் மூலம் அவர்களுக்கு இணையாக புகழ் பெற்றார் ஜெமினி கணேசன்.

எம்.ஜி.ஆர். ,சிவாஜி ,ஜெமினி ஆகிய மூவரும் தமிழ்த்திரை உலகின் மூவேந்தர்கள் என்று அழைக்கப்பட்டனர்.

காதல் கட்டங்களில் மிகச் சிறப்பாக நடித்ததால் ஜெமினி கணேசன் "காதல் மன்னன்" என்ற பட்டத்தையும் பெற்றார்.

1955இல் மாமன் மகள், நீதிபதி, வள்ளியின் செல்வன், மகேஸ்வரி, குணசுந்தரி ஆகிய படங்களில் ஜெமினி கணேசன் நடித்தார்.

இதில் மாமன்மகள், குணசுந்தரி,மகேஸ்வரி ஆகிய படங்களில் ஜெமினிக்கு ஜோடி சாவித்திரி.

நீதிபதி படத்தை என்.எஸ். திரவியம் தயாரித்தார். இப்படத்தில் நடிப்பிசைப்புலவர் கே.ஆர். ராமசாமியும் ஜெமினிகணேசனும் இணைந்து நடித்தனர்.

எம்.ஜி.ஆர்., சிவாஜிகணேசன் ஆகியோருடன் மூன்றாவது சூப்பர் ஸ்டாராக ஜெமினிகணேசன் புகழ்பெற்ற அதே நேரத்தில் நடிகையர் திலகம் சாவித்திரியை மணந்து கொண்டார்.

ஆந்திராவைச் சேர்ந்தவரான சாவித்திரி சில தெலுங்குப் படங்களில் நடித்து விட்டு தமிழ் சினிமாவுக்கு வந்தவர்.

ஜெமினியும் சாவித்திரியும் ஜோடியாக நடித்த முதல் படமான மனம்போல் மாங்கல்யம் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பல படங்களில் ஜோடியாக நடித்தனர். தமிழ் நாட்டின் சிறந்த நட்சத்திர ஜோடி என்று ஜெமினிகணேசனும் சாவித்திரியும் ரசிகர்களிடம் புகழ்பெற்றனர்.



சாவித்தரி

### வாழ்க்கையில் புயல்

சாவித்திரியின் மாமன் சவுத்ரி என்பவர் சாவித்திரிக்கு கார்டியனாக இருந்தார். அவருடைய அனுமதியின்றி சாவித்திரி யாருடனும் பேசக் கூட முடியாது. சாவித்திரியின் வரவு-செலவுக் கணக்கையும் சவுத்ரி தன் கையில் வைத்திருந்தார்.

சாவித்திரிக்கு மேலும் மேலும் பட வாய்ப்புகள் குவிய ஆரம்பித்தன. சவுத்ரியின் கெடுபிடியும் அதிகமாகியது. சினிமா உலகில் நுழைவதற்கு உதவியவர் என்றாலும் தன்னை சவுத்ரி அடிமைபோல் நடத்தியது சாவித்திரிக்கு வெறுப்பை அளித்தது. இருவருக்கும் இடையே தகராறு மூண்டது.

குடும்பத்தில் யாருடைய துணையும் இன்றி தவித்த சாவித்திரி இந்த இக்கட்டான சூழ்நிலையில் தன்னை ஆதரித்து வழிகாட்டக்கூடியவர் ஜெமினி கணேசன் ஒருவரே என்று எண்ணினார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மஹோற்சவம் ஆரம்பம்



தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (இ-60)

# இலங்கையின் சமாதான முன்னெடுப்பிற்கு இளைஞர்களின் பங்களிப்பு முக்கியம்

## காலியில் பான் கீ மூன் வலியுறுத்து

இளைஞர்கள்தான் இந்நாட்டின் சமாதானத்தையும் மாற்றத்தையும் ஏற்படுத்தும் மிக முக்கிய பங்குதாரர்கள் என ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித்துள்ளார்.



உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள செயலாளர் நாயகம், நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சக வாழ்வை ஏற்படுத்தும் செயற்பாட்டில் இந்நாட்டின் இளைஞர்களுக்கு பாரிய பங்களிப்பு செய்ய சந்தர்ப்பம் உள்ளதாகவும் கூறினார்.

காலியில் நடைபெற்ற 'நல்லிணக்கமும் ஒருங்கிணைந்து வாழ்தலில் இளைஞர்களின் வகிபாகமும்' என்ற தொனிப்பொருளில் அமைந்த இந்த நிகழ்வினை, தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், தேசிய கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சு, தேசிய ஒருமைப்பாட்டு மற்றும் நல்லிணக்க காரியாலயம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை காரியாலயம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## செய்தித்துளிகள்

### மஹாகும்பாபிஷேகம்

சிறுப்பிட்டி தனகலட்டி செல்லப்பிள்ளையார் கோவில் புனராவர்த்தன நவ குண்டபக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நாளை 4ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.15 மணி முதல் இடம் பெறும். இன்று சனிக்கிழமை காலை 7 மணி முதல் மாலை 4 மணி வரை எண்ணெய்க்காப்பு சாற்றுதல் இடம் பெறும். (இ-3)

### தெய்வீக இசையரங்கு

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் முருகன் உற்சவ காலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை பாட்டு - நாகேந்திரன் ஞானசெல்வம், வயலின் - கி. பத்மநாதன் ,மிருதங்கம் ச. பிரணவன் ஆகியோர் பங்குபற்றுவதுடன் சிறுப்பிட்டியூர் சத்தியதாஸ் குழுவினர் வழங்கும் தீர்க்க சுமங்கலி எனும் வில்லிசை நிகழ்வும் இடம்பெறும். (இ-3)

### விசேட விரிவுரைகள்

சிங்கப்பூர் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி விமோக் சானந்தாஜி மஹராஜின் இலங்கை விஜயத்தை முன்னிட்டு விசேட விரிவுரைகள் நிகழ்த்தப்படவுள்ளன். இந் நிகழ்வு நாளை மறுதினம் 5 ஆம் திகதி திங்கட்கிழமை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் ஆச்சிரம மண்டபத்தில் இரவு 7 மணிக்கு விநாயக விளக்கம் எனும் தலைப்பில் இடம்பெறும். (இ-3)

### மக்கள் களரி நாடக விழா

மக்கள் களரி நாடகக் குழுவின் நாடக விழா எதிர்வரும் 7 ஆம் திகதி புதன் கிழமை முதல் 21ம் திகதி புதன்கிழமை வரை மாலை 6.30 மணிக்கும் பாடசாலை மாணவர்களுக்கு சிறப்புக் காட்சிகளும் நல்லூர் , செம்மணி வீதியிலுள்ள சாதனா பாடசாலை மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் களரி நகரும் அரங்கில் இலவச நாடகக் காட்சிகள் இடம் பெறவுள்ளன. (இ-3)

### சேவை நலன் பாராட்டு விழா

கிளிநொச்சி கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் பணியாற்றி ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கான சேவை நலன் பாராட்டுவிழா இன்று சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். (2-254)

### கொழும்பிற்குள் குப்பைகளை வீசினால் சட்ட நடவடிக்கை

கொழும்பு நகருக்குள் குப்பைகளை ஒழுங்குமுறையின்றி வீசி எறிபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வுள்ளதாக அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி இதனை தெரிவித்துள்ளார்.

குறிப்பாக வாகனங்களில் செல்லும்போது வீதிகளில் குப்பைகளை வீசுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென அவர் தெரிவித்தார்.

குப்பைகளை ஒழுங்குமுறையின்றி வீசுவதால் தொற்று நோய்கள் பரவக்கூடிய சாத்தியம் காணப்படுவதால் இந்த நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

# மகிந்த தலைமறைவு என்கிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாடு குருநாகலில் நடைபெறவுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ மலேசியாவிற்கு சென்று தலைமறைவாகியுள்ளார் என ஐ.தே.க. அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது மிகவும் வெட்கத்துக்குரிய நடவடிக்கையாகும். மகிந்த ராஜபக்ஷ இராஜதந்திர விஜயத்தை மேற்கொள்ளவில்லை. கட்சி மாநாட்டை புறந்தள்ளிவிட்டு ஏன் மலேசியா செல்ல வேண்டும்.

எனவே சுதந்திரக் கட்சியினர் மகிந்த ராஜபக்ஷவின் குணங்களை புரிந்து கொள்ள வேண்டும். அத்துடன் மைத்திரிபால சிறிசேன என்பவர் நாட்டின் ஜனாதிபதியாவார். அவரினால் மாநாட்டிற்கு கூட்டம் சேர்க்க முடியாதா? எதிர்க்கட்சியில் இருக்கும் போதுதானே கவலைப்பட வேண்டும். ஜனாதிபதி ஒருவரால் இலட்சக்கணக்கில் கூட்டம் சேர்க்க முடியும்.

சுதந்திரக் கட்சி பெரும் பலவீனமாக இருப்பதாக நாம் நினைக்கக்கூடாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு பெரும் மக்கள்கூட்டம்உள்ளதுஎன்பதனை மாநாட்டில் பார்க்கலாம்.

சுதந்திரக் கட்சியை நாம் பாதுகாக்க வேண்டும். அது பழைமையான கட்சியாகும். இதனை அழிந்து போக விடக்கூடாது.

கேள்வி:-உங்களுடைய கட்சி என்ன ?

பதில்:- எனது கட்சி ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

கேள்வி : அப்படியாயின் சுதந்திரக் கட்சியின் மீது ஏன் இவ்வளவு அக்கறை?

பதில் : அப்படியல்ல, சுதந்திரக் கட்சி என்பது நாட்டின் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கட்சியாகும். அதனை பாதுகாக்க வேண்டும்.

கேள்வி : சுதந்திரக் கட்சி மாநாட்டிற்கு நீங்களும் பேருந்துகளில் மக்களை ஏற்றி செல்ல போவதாக கூறுகின்றனரே?

பதில்: அது பொய்யாகும். நான் எதற்காக சுதந்திரக் கட்சியின் மாநாட்டிற்காக கஷ்டப்பட வேண்டும். ஜனாதிபதிக்குள்ள மதிப்பினை மாநாட்டில் கண்டு கொள்ள முடியும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தேசிய அமைப்பாளரும் டிஜிட்டல்தகவல்தொழில்நுட்ப துறை அமைச்சருமான ஹரீன் பெர்னாண்டோ கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-10)

# 50 இலட்சம் ரூபாவுக்கான சிற்றுண்டி ஓடர் இரத்தானதால் இன்றைய நிகழ்வும் இரத்து

(கொழும்பு)

இலங்கை பொலிஸ்சேவையின் 150 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று 3 ஆம் திகதி பொலிஸ் படை தலைமையகத்தில் நடைபெறவிருந்த நிகழ்வுக்கு, கொழும்பிலுள்ள 5 நட்சத்திர தரத்திலான ஹோட்டல் ஒன்றிலிருந்து செய்யப்பட்டிருந்த 50 இலட்சம் ரூபா பெறுமதியான சிற்றுண்டி ஓடர், அரசாங்க உயர் தரப்பிலிருந்து வந்த அறிவித்தலொன்றின் பேரில் இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஹோட்டலில் இருந்து 4 ஆயிரம் சிற்றுண்டிப் பெட்டிகளும், பிரபுக்களுக்கான 250 விசேட சிற்றுண்டி பெட்டிகளுக்குமே இவ்வாறு 50 இலட்சம் ரூபாவுக்கு ஓடர் செய்யப்பட்டிருந்ததாகவும் பொலிஸ் உள்ளக வட்டாரங்கள் மூலம் அறியவந்துள்ளன.

இவ்வாறு உணவு ஓடர் இரத்து செய்யப்பட்டதனால், பொலிஸ் தலைமையகத்தில் ஏற்பாடாகியிருந்த நிகழ்வும் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (இ-10)

# இந்து சமயப் பிரசாரகர் பயிற்சி ஆரம்பமாகிறது

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் ஆன்மீகப் பிரசாரகர்களுக்கான குறுங்காலப் பயிற்சி நெறி இன்று 3 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். ஆனைப்பந்தியில் உள்ள குருகுலத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைத் தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் மற்றும் நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆசியுரையை யாழ். சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைதன்யாவும் வரவேற்புரையை இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் இ.கர்ஜினும் நன்றியுரையை இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.செந்தூரனும் வழங்கவுள்ளனர்.

நிகழ்வில் ஆன்மீகப் பிரசாரகர் பயிற்சி தொடர்பான அறிமுகவுரைகளை இப் பயிற்சிநெறியில் வளவாளர்களாகப் பங்கேற்கவுள்ள இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள முன்னாள் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம், இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய இளைப்பாறிய அதிபர் சைவப் புலவர் சு.செல்லத்துரை, கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசன் ஆகியோர் வழங்கவுள்ளனர். (இ-10)

## சிரமதானப்பணி

மு/ முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சிரமதானப் பணி நடைபெறவுள்ளதாக பழைய மாணவர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இதில் பெற்றோர், மாணவர்கள், பழைய மாணவர்கள் , நலன்விரும்பிகள் ஆகியோரை பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

சிரமதானப் பணியில் கலந்து கொள்பவர்கள் பணிக்குரிய உபகரணங்களுடன் வருகை தருமாறு அவர்கள் அறிவித்துள்ளனர். (2-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விமான விபத்தில் உயிரிழப்பு

## ஜப்பான் அரசு ஆவணத்தில் தகவல்



நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் விமான விபத்தில் தான் இறந்தார் என்று ஜப்பான் அரசு ஆவணத்தில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சியின் போது நாட்டின் விடுதலைக்காக இந்திய தேசிய இராணுவம் என்ற படையை உருவாக்கி ஆயுதப்போராட்டம் நடத்தினார். அப்போது ஜப்பான் சென்ற சுபாஷ் அதன் பிறகு நாடு திரும்பவில்லை. நாடு விடுதலை அடைந்த பின்பும் கூட அவர் இந்தியாவில் இல்லை.

இதனால் நேதாஜி பற்றிய பல யூகங்கள் வெளியானது. அவர் விமான விபத்தில் இறந்தார் என்றும் அவரது உடல் ரஷ்யாவில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளது என்றும் பல தகவல்கள் வெளியாகின.

நேதாஜி 1945ஆம் ஆண்டு தாய்வானில் நடந்த விமான விபத்தில் மரணம் அடைந்ததாக தகவல் வெளியானது. லண்டனிலும் நேதாஜி மரணம் தொடர்பாக பல்வேறு தகவல்கள் வெளியாகின என்றாலும் அதற்கான உறுதியான ஆதாரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த நிலையில் நேதாஜி மரணம் தொடர்பாக ஜப்பான் அரசின் விசாரணை ஆவணத்தை இங்கிலாந்தைச் சேர்ந்த இணையத்தளம் ஒன்று வெளியிட்டுள்ளது. இந்த ஆவணத்தை ஜப்பான் அரசும் இந்தியாவும் இரகசியமாக வைத்து இருந்ததாக குறிப்பிட்டு இருக்கிறது.

இது தான் முதலாவதாக வெளியான விசாரணை அடிப்படையிலான ஆவணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் கூறப்பட்டு இருப்பதாவது.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் 1945ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 18ஆம் திகதி தாய்வான் நாட்டின் தாய்பேய் நகரில் நடந்த விமான விபத்தில் பலியானார். அன்றைய தினம் அவர் பயணம் செய்த விமானம் ஓடுபாதையில் இருந்து உயரே கிளம்பிய போது விபத்துக்குள்ளானது. இதில் நேதாஜி விமானத்தில் இருந்து கீழே விழுந்து படுகாயம் அடைந்தார். உடனே அவர் தாய்பேய் நன்மான்கிளை இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அன்றைய தினமே நேதாஜி மரணம் அடைந்தார்.

அன்று பிற்பகல் 3 மணிக்கு நேதாஜி வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார். அன்றைய தினம் இரவு 7 மணிக்கு மரணம் அடைந்தார்.

அவரது உடல் ஓகஸ்ட் 22 ஆம் திகதி தாய்பேய் நகரமைப்பு மயானத்தில் தகனம் செய்யப் பட்டது.

இவ்வாறு ஜப்பான் நாட்டு விசாரணை அறிக்கையில் கூறப் பட்டுள்ளது. மேலும் விமான விபத்து எப்படி நடந்தது என்பது பற்றிய விசாரணை அறிக்கையும் வெளியிடப்பட்டுள்ளது.

அதில் விமானம் உயரே பறக்க தொடங்கிய போது 20 மீற்றர் உயரத்தில் விமானத்தின் 3 பிரபல்லர்களில் (முன்னோக்கிகள்) ஒன்று சேதம் அடைந்து முறிந்து விட்டது.

இதனால் இடது பக்கமாக விமானத்தின் இறக்கை முறிந்து இயந்திரத்துடன் கீழே விழுந்தது. விமான நிலையத்தின் அருகில் உள்ள குவியலில் விழுந்தது. அடுத்த சில நிமிடங்களில் விமானத்தில் தீப்பிடித்து எரிய தொடங்கியது என்றும் குறிப்பிடப் பட்டது.

இந்த ஆவணம் 1956 ஆம் ஆண்டே டோக்கியோவில் உள்ள இந்திய தூதரகத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆவணம் 7 பக்கங்களில் ஜப்பான் மொழியிலும் 10 பக்கங்களில் ஆங்கிலத்திலும் இருந்தது. (இ-10)

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய பொதுநலவாய மாநாடு இலங்கையில் நடந்தது 266

மாநாட்டைப் புறக்கணித்த கனடா பிரதமர் ஸ்டீபன் கார்பர் சார்பில் அவருடைய பாராளுமன்ற செயலாளர் தீபக் ஒபராய், மொரீஷியஸ் பிரதமர் நவீன் சந்திரராம் கூலம் சார்பில், அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் அருண் புல்லல் ஆகியோர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

**மகிந்த ராஜபக்ஷ பேச்சு**

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்றுப் பேசிய முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மனித உரிமைகள் மீறல் பிரச்சினைகளை எழுப்பிய கனடா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு மறைமுகமாகக் கண்டனம் தெரிவித்தார். மாநாட்டில் விவாதிக்க திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக பொதுநலவாய நாடுகள் அமைப்பைத் தண்டனை வழங்கும் ஒரு அமைப்பாகவோ அல்லது தீர்ப்பு வழங்கக்கூடிய நீதிமன்ற அமைப்பாகவோ மாற்ற முயற்சிக்க வேண்டாம் என்று முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கேட்டுக் கொண்டார்.

**30 ஆண்டு போருக்குப்பின்**

இலங்கையில் 30 ஆண்டுகளாக நடைபெற்று வந்த போரில் பெற்ற வெற்றிக்குப் பின் தற்போது அமைதி திரும்பி இருப்பதாகக் குறிப்பிட்ட மகிந்த ராஜபக்ஷ பொருளாதார வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு போன்ற ஆக்கபூர்வமான செயற் திட்டங்களில் மாநாடு கவனம் செலுத்த வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்தார்.

போருக்குப்பின் கடந்த 4 ஆண்டுகளாக இலங்கையின் எந்த ஒரு பகுதியிலும் ஒரு இடத்தில் கூட இதுவரை வன்முறை வெடிக்கவில்லை என்று மகிந்த ராஜபக்ஷ கூறிய போது மாநாட்டில் பங்கேற்றவர்கள் கரவொலி எழுப்பினார்கள். இலங்கை மீதான குற்றச்சாட்டுக்குப் பதில் அளிக்கும் வகையில் மனித உரிமைகள் மீது இலங்கை அரசு மிகுந்த மதிப்பு வைத்திருப்பதாகவும் அவர் குறப்பிட்டார்.

**கூட்டறிக்கை**

மாநாடு 17ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) முடிவடைந்தது.

மாநாட்டின் இறுதியில் 24 பக்க கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இலங்கை இறுதிக்கட்டப்போரில் நடந்த மனித உரிமைகள் மீறல் குறித்து நேரடியாகக் குறிப்பிடாமல் மனித உரிமைகள் அமுலாக்கத்தை வலுப்படுத்த துரிதமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் என்று உறுப்பு நாடுகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்ற இங்கிலாந்து பிரதமர் டேவிட் கமரூன் இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் குறித்து மார்ச் இறுதிக்குள் சுதந்திரமான விசாரணைக்கு உத்தரவிட வேண்டும் என்று கெடு விதித்தார். அதன் மூலம் அவர் பொதுநலவாய மாநாட்டின் ஹீரோவாகக் கருதப்பட்டார்.

**புறக்கணிப்பு**

இலங்கைப் போரின் போது ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கும் மனித உரிமைகள் மீறப்பட்டதற்கும் கண்டனம் தெரிவித்து கனடா மற்றும் மொரீஷியஸ் நாட்டுப் பிரதமர்கள் இலங்கையில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டைப் புறக்கணித்தனர்.

ஆனால் இங்கிலாந்து பிரதமர் கமரூன் மாநாட்டில் பங்கேற்க முடிவு செய்தாலும் போரின் போது நடந்த மனித உரிமைகள் மீறல் குறித்து மாநாட்டில் எழுப்பப் போவதாக அறிவித்தார். இதன்படி கொழும்பில் மாநாடு தொடங்கப் போவதாக டேவிட் கமரூன் தனி விமானத்தில் யாழ்ப்பாணம் புறப்பட்டுச் சென்றார்.

**விக்னேஸ்வரனுடன் சந்திப்பு**

யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பொது நூலகம் போர்த் தாக்குதலில் கடுமையான சேதமடைந்து தற்போது புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. அந்த நூலகத்தைப் பார்வையிட்ட கமரூன் யாழ்ப்பாண புதிய முதலமைச்சாராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டணியின் விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழர் தலைவர்களைச் சந்தித்துப் பேசினார்.

**வரலாற்று சிறப்புமிக்க பயணம்**

இங்கிலாந்து பிரதமரின் இந்த யாழ்ப்பாண சுற்றுப் பயணம் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பயணம் ஆகும். ஏனென்றால் இங்கிலாந்து ஆதிக்கத்தில் இருந்து இலங்கை 1948ஆம் ஆண்டு விடுதலை பெற்ற பிறகு யாழ்ப்பாணத்திற்கு சர்வதேச தலைவர் ஒருவர் சுற்றுப் பயணம் செய்வது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் நூலகத்தில் இருந்து இங்கிலாந்து பிரதமரின் வாகன அணி வகுப்பு வரிசை புறப்பட்ட போது இலங்கை அரசின் கொடுமை குறித்து முறையிடுவதற்காக வீதியின் இருபுறமும் திரளான தமிழர்கள் ஆர்வத்துடன் நின்று கொண்டி ருந்தனர். அவர்களில் சிலர் வாயில் கறுப்புத்துணியைக் கட்டி இருந்தனர்.


போரின் போது கொல்லப் பட்ட மற்றும் காணாமற் போன தங்கள் சொந்தங்களின் புகைப்படங்களைத் தாங்கிய பதாகைகளை அவர்கள் கைகளில் ஏந்தி இருந்தனர். இலங்கை அரசுக்கு எதிராகவும் இங்கிலாந்து பிரதமரை வாழ்த்தியும் அவர்கள் கோஷமிட்டனர். இங்கிலாந்து பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகளிடம் பல்வேறு மனுக்களையும் புகைப் படங்களையும் கொடுத்ததாகவும் அவர்களது கோரிக்கைகளைக் கமரூன் முழுமையாக உணர்ந்து இருப்பதாகவும் இந்தச் சுற்றுப் பயணத்தில் பங்கேற்ற செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

**முகாமில் உள்ள தமிழர்கள்**

போரின் போது இடம் பெயர்ந்த அகதிகளில் மறுகுடியமர்த்தப்படாத சிலர் இன்னும் முகாம்களில் தங்கி உள்ளனர். அந்த முகாமுக்குச் சென்ற டேவிட் கமரூன் அவர்களிடம் நீங்கள் ஏன் இன்னும் உங்கள் சொந்த இடங்களுக்குச் செல்லவில்லை என்று கேட்டார்.

அதற்குத் தங்கள் இடங்களை இராணுவம் ஆக்கிரமித்துக்கொண்டு முகாம் அமைத்து இருப்பதாகக் குறிப்பிட்ட அவர்களிடம் உங்கள் கோரிக்கையை இலங்கை அரசிடம் தெரிவித்து உரிய தீர்வு கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் என்று இங்கிலாந்து பிரதமர் தெரிவித்தார்.

(தொடரும்)



இலங்கை தலைநகர் கொழும்பில் பொதுநலவாய நாடுகளின் 3 நாள் மாநாடு நடைபெற்றது. மாநாட்டை தொடங்கி வைத்த இங்கிலாந்து இளவரசர் சார்ல்சுடன், இலங்கை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் மாநாட்டில் பங்கேற்ற பல்வேறு நாட்டு பிரதிநிதிகளை படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதைச் செய்யாமல் இருப்பது கோழைத்தனமாகும்.
– கோன்பு தஸன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தமிழ் மக்களின் மனநிலையை புரிந்து கொள்ளுங்கள்

ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

தமிழ் அரசியல் தலைவர்களையும் வடக்கு மாகாண ஆளுநரையும் பான் கீ மூன் சந்தித்தார்.

ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் யாழ்ப்பாணம் வருவதையொட்டி அவரைச் சந்தித்து தங்களின் ஆற்றாமையை எடுத்துக் கூறுவதற்காக காணாமல்போனவர்களின் உறவுகளும் இராணுவத்தின் பிடிக்குள் உள்ள இடங்களைச் சேர்ந்த மக்களும் காத்திருந்தனர்.

எனினும் அவர்களைச் சந்திக்காமல் அல்லது அவர்களைச் சந்திக்கவிடாமல் பான் கீ மூன் பின் வழியால் சென்றார்.

இதேபோன்றுதான் பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோதும் மக்கள் அவரை சந்திக்க முடியாமல் போயிற்று.

பொதுவில் வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பிரதிநிதிகள் தமிழ் மக்களின் நிலைமைகளை அறிவதற்காக வருவதாகக் கூறிக்கொண்டாலும் அவர்கள் ஒருபோதும் பாதிப்புக்குள்ளான மக்களை சந்திக்கவில்லை என்பதே உண்மை.

தமிழ் அரசில் தலைவர்களைச் சந்திப்பது என்பது சரியானதாயினும் பாதிக்கப்பட்ட மக்களை – அவர்களின் மனநிலையை அறிந்து கொண்டு அவர்கள் என்னதான் சொல்கிறார்கள் என்பதை தெரிந்துகொள்வது வெளிநாட்டுப் பிரதிநிதிகளின் தலையாய கடமை.

பெற்ற பிள்ளைகள் காணாமல் போய்விட்டனர். வருடக்கணக்கில் என் பிள்ளை சிறையில் வாடுகின்றான். யுத்தம் முடிந்தும் எங்கள் மண்ணுக்கு நாங்கள் போக முடியவில்லை என்ற வலியை – வேதனையை சதா அனுபவிக்கின்ற மக்கள் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் எடுத்துக் கூறும்போது அதன் தாக்கம் வித்தியாசமானதாக இருக்கும்.

உண்மையில் பாதிக்கப்பட்டவர்கள் – அனுபவித்தவர்கள் தங்களின் வேதனையை எடுத்துக் கூறும் போது அதன் வலிமை காத்திரத்தன்மை கொண்டதாக இருக்கும்.

எனினும் இந்த உண்மையை வெளிநாட்டுப் பிரதிநிதிகளும் உணரவில்லை. தமிழ் அரசியல் தலைமைகளும் உணரவில்லை என்பதுதான் மிகப்பெரிய துரதிர்ஷ்டம்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வேதனைகளை சொல்வதற்கு சந்தர்ப்பம் கொடுக்காதவரை – அவர்களை ஆற்றுப்படுத்துவதில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் தலையிடாதவரை தமிழ் மக்களின் மனக் குமுறல் அடங்கப்போவதில்லை என்பதே உண்மை.

அந்த வகையில் இலங்கைக்கான விஜயத்தினை மேற்கொண்டு யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஐ.நா பொதுச் செயலாளர் பான் கீ மூன் கட்டாயமாக போரில் பாதிக்கப்பட்டு இன்றுவரை கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்ற தமிழ் மக்களைச் சந்தித்திருக்க வேண்டும்.

அந்தச் சந்திப்பு ஐ.நா செயலாளரின் தீர்மானங்களில் முக்கியமான மாற்றங்களைத் தந்திருக்கும். இருந்தும் அந்தச் சந்திப்புக்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படாமை ஐ.நா செயலாளரின் யாழ்ப்பாண விஜயத்தை வெற்றிகரமானதாக ஆக்காதென்றே சொல்லவேண்டும்.

ஐ.நா செயலாளர் பான் கீ மூனை தமிழ் அரசியல் தலைவர்கள் சந்தித்தனர். எனவே அவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்துக் கூறியிருப்பர் என்று கூறலாம்.

இங்குதான் தமிழ் அரசியல் தலைவர்கள் மீதான நம்பிக்கையீனங்கள் மேலெழுகின்றன. அதாவது பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைவர்களையும் நம்பத் தயாரில்லை என்பதுதான் உண்மை.

# சகவாழ்வு பாதயாத்திரையுடன் எந்தத் தொடர்பும் இல்லை

## இலங்கை மனிதவுரிமை ஆணைக்குழு அறிவிப்பு

இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழுவினால் பாத யாத்திரை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக பொதுமக்கள் மத்தியில் பிழையானதொரு கருத்து பரவியுள்ளதனை ஆணைக்குழுவிற்கு அறியக் கிடைத்துள்ளது. மனிதவுரிமை என்ற பெயரை உபயோகித்துக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ள சகவாழ்வு பாத யாத்திரை தொடர்பான ஆணைக்குழுவிற்கு எந்த விதமான பொறுப்போ தொடர்போ இல்லை என்று மக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

மனிதவுரிமை அமைப்புக்கள் பொதுமக்களிடமிருந்தும் வேறு நிறுவனங்களிடமிருந்தும் பணம் திரட்டும் நடவடிக்கைகளுடன் மனித வுரிமைகள் ஆணைக்குழுவிற்கு எந்தவிதமான தொடர்புமில்லை.

இலங்கை அரச இலட்சினையை உபயோகித்து மனித வுரிமைகளை பாதுகாப்பது மற்றும் மேம்படுத்துவதை மேற்கொள்கின்ற ஒரே நிறுவனம் இலங்கை மனிதவுரிமைகள் ஆணைக்குழு என்பதையும் பொதுமக்கள் அறிந்திருக்க வேண்டும் என்று ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளது. (இ

# அபாய வெளியேற்ற பாதை திறப்பு

வடமராட்சி கிழக்கு, ஆழியவளை, உடுத்துறை, வத்திராயன் ஆகிய கிராமங்களிலிருந்து கடல் அனர்த்தத்தின் போது மக்கள் வெளியேறும் முகமாக கொடுக்குளாய் மக்களால் அமைக்கப்பட்ட கொடுக்குளாய் இயக்கச்சி இணைந்த பாலத்தினூடான ஒருகிலோ மீற்றர் நீளமான அபாய வெளியேற்றப்பாதை இன்று 3 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

கொடுக்கிளாய் சக்தி வேல் விளையாட்டுக்கழக அபிவிருத்தி அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந் நிகழ்வு கிராம அலுவலர் வ.தவராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாவட்ட, கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ சேவைகள் நிலைய அதிகாரிகள்எனப்பலர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3-64)

# கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம் தொழில் நுட்பவியல்கல்லூரியில்முதன் முறையாக ஆபரண வடிவமைத்தல் NVQ தர (Jewellery Manufacturing NVQ) கற்கைநெறி மாணிக்க கல் மற்றும் ஆபரண ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் இந்த மாத நடுப்பகுதியில் ஆரம்பிக்கப் படவுள்ளது. இந்தக் கற்கை நெறி பயிற்றப்பட்ட போதனாசிரியர்களின் செய்முறை பயிற்சியுடன் நடத்தப்படும். மேற்படி கற்கைநெறி முற்றிலும் இலவசம்.

தகைமை: 17 வயதைப் பூர்த்தி செய்த இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். மட்டுப்படுத்தப்பட்ட அனுமதிகள் மட்டுமேவழங்கப்படுவதால்விண்ணப்பிக்கவிரும்புவோர்தொழில் நுட்பக் கல்லூரியில் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்கலாம். மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். 021 221 2403, 077 340 0910 என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். இருபாலை கிழக்கு கேணிக்குளம்பதி அருள் மிகு லிங்க விநாயகர் ஆலய வருடாந்தமகோற்சவம்நாளை 4 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

சப்பறத் திருவிழா 11ஆம் திகதியும் தேர்த்திருவிழா 12 ஆம் திகதியும் தீர்த்தோற்சவம் 13 ஆம் திகதியும் இடம் பெறும். (இ

## கூட்டு எதிர்க்கட்சி புறக்கணிப்பு

சுதந்திர கட்சியின் 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை புறக்கணிப்பதற்கு கூட்டு எதிர்க்கட்சி ஏகமனதாக தீர்மானித்துள்ளது.

கட்சியின் நிறைவு விழா நாளை குருநாகலில் நடைபெறவுள்ள நிலையில் சுதந்திர கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின அடிமையாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உள்ளமை உள்ளிட்ட மூன்று பிரதான காரணங்களை அடிப்படையாக கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக அவர சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியிலுள்ள சில அரசியல்வாதிகள் பொய்யான குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளமையும் கட்சியின் ஆண்டு நிறைவு விழாவை புறக்கணிப்பதற்கு ஒரு காரணம் என டலஸ் அழகப்பெரும குறிப்பிட்டார்.

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 5.30 மணி வரை யாழ். பிரதேசத்தில வில்லூன்றி, பண் ணைப் பிரதேசம், சீரணி, சண்டிலிப்பாய், ஆலங்குளாய், கந்தரோடை, அளவெட்டி, மாகியப்பிட்டி, உடுவில், மருதனார் மடம், றொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரிய மதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, இணுவில் ஒரு பகுதி, உடுவில், சங்குவேலி, பிபிலி, கட்டுடை, உப்பு மடம், தாவடி சந்தி, பத்தானை, மாப்பியன், சுதுமலை, மருதனார்மடம் - யாழ்.நுண் கலைப்பீடம், மானிப்பாய் கார்கில்ஸ் பூட் சிற்றி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் தெனியங்குளம், உயிலங்குளம், வேட்டையடைப்பு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில மதவுவைத்தகுளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-ဓ)

## சுகாதார அமைச்சருக்கு சங்கம் கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

மருந்துகளுக்கான கட்டுப்பாட்டு விலைகளுக்காக முன் வைக்கப்பட்டுள்ள தேசியமருந்துகள் சட்ட மூலமானது அமுலாக்குவது தொடர்ந்து தாமதமானால் சுகாதார அமைச்சருக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள் ளது.

குறித்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டு ஒரு வருடம் கடந்தும் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் தலைவர்வைத்தியர் ஜயந்த பண்டார தெரிவித்துள்ளார்.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு காலதாமதம் ஏற்படுவதால் மருந்துகளின் விலைஅதிகரிக்கப்பட்டு சில மருந்து நிறுவனங்களால் விற்கப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவேமருந்துகள்விலை கட்டுப்பாடுகள் இன்றி விற்கப்படுவதை உடனே தடுப்பதற்கான நடவடிக்கைகளை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன மேற்கொள்ளாவிடின் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.(இ-10)

## விநாயகர் சதுர்த்தி

(யாழ்ப்பாணம்)

விநாயகர் சதுர்த்தி விரத்தை முன்னிட்டு யாழ்.வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் நாளை மறுதினம் திங்கட் கிழமை பி.ப 2.30 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி மூலமூர்த்தி பூஜை, வசந்த மண்டப பூஜையுடன் விநாயகப் பெருமான் திருவீதிவலம் வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ஆன்மீக வாழ்க்கையில் நான் இன்பமடையவில்லை என்றால் புலனின்ப வாழ்க்கையில் திருப்தியை நாடவேண்டுமா? எனக்கு அமுதம் கிடைக்கவில்லை என்பதற்காக சாக்கடை நீரைக்குடிக்க வேண்டுமா?

❖ இன்பம் மனிதன் முன் தோன்றும்போது, தனது தலைமீது துன்ப முடியைச்சூடி வருகின்றது. இன்பத்தை வரவேற்பவன் துன்பத்தையும் வரவேற்றே ஆகவேண்டும்.

❖ அரசியல் வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒருவன் சுதந்திரம் பெறலாம். ஆனால் ஆசைகளுக்கும் சினத்திற்கும் அவன் அடிமையாக இருந்தால் உண்மையான சுதந்திரத்தின் தூய இன்பத்தை உணரமுடியாது.

❖ தன் விருப்பத்திற்கு உகந்த வேலையாக இருந்தால் எந்த முட்டாளும் அதனைச் செய்து முடிப்பான். ஆனால் எவ்வேலையையும் தன் விருப்பத்திற்கு ஏற்றதாக மாற்றுபவன் எவனோ அவனே அறிவாளி. ஒரு வேலையும் அற்பமானதல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தின் 54 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு அண்மையில் இல்ல மெய்வன்மை போட்டி நடைபெற்றபோது.

# நுணாவில் பாரதியை வீழ்த்தி சாவகச்சேரி சிவன் சம்பியன்




சாவகச்சேரி றிபேக்தாரகை நடத்திய துடுப்பாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி அண்மையில் மட்டுவில் மோகனதாஸ் விளை யாட்டுக்கழக மைதானத்தில் நடை பெற்றது.

இப்போட்டியில் சாவகச்சேரி சிவன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நுணாவில் பாரதி விளை யாட்டுக்கழகம் மோதியது.

நாணயச் சுழற்சியின் மூலம் முதலில் களத்தடுப்பை தெரிவு செய்த பாரதி விளையாட்டுக்கழகம் சிவன் அணியின் பந்து வீச்சினை எதிர்கொள்ள முடியாது 28 ஓட்டங் களில் இலக்கை இழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சிவன் விளையாட்டுக்கழகம் 4 இலக்குகளை இழந்து 6 விக்கெட் டுகளில் சம்பியன் கிண்ணத்தினை தனதாக்கிக் கொண்டது. தீபன் ஆட்டநாயகனாகவும் ஜெனிதொடர் ஆட்ட நாயகனா கவும் சிறந்த பந்து வீச்சாளராக சுசியும் தெரிவு செய்யப் பட்டனர். பிரதம விருந்தினராகக் கல ந்து கொண்ட பேராசிரியர் க.கந்த சாமி வீரர்களை கௌரவித்தார். (க)

# மாகாணமட்ட குத்துச்சண்டை யாழ்.மாவட்டம் சம்பியன்

மாகாணமட்ட குத்துச் சண்டைப் போட்டியில் ஆறு பதக்கங்களை பெற்று யாழ்.மாவட்ட அணி சம் பியனாகியுள்ளது.



மாகாண மட்ட குத்துச் சண்டை போட்டிகள் அண்மையில் முல்லை த்தீவில் நடைபெற்றது.



இப்போட்டியில் யாழ்.மாவட்டம் 3 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண் கலம் என 6 பதக்கங்களைப் பெற்று முதலிடத்தை பெற்றுக் கொண் டது.

இதில் யாழ்.மாவட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்த கே.குண சோதி 56 கிலோ எடைப் பிரிவில் பங்குபற்றி தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டார். (க)

# கொடுக்குளாய் சக்திவேல் வி.கழக வடமாகாண ரீதியிலான உதைபந்து

## சென்.செபஸ்ரியன் சம்பியன்



சக்திவேல் விளையாட்டுக்க முகம் நடத்திய வடமாகாண ரீதி யிலான உதைபந்தாட்ட போட்டியில் சென்.செபஸ்ரியன் விளையாட் டுக்கழகம் சம்பியனாகியது.

கொடுக்குளாய் சக்திவேல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்ட போட்டி யின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இறுதிப் போட்டியில் சென். செபஸ்ரியன் விளையாட்டுக்கழ கத்தை எதிர்த்து கட்டைக்காடு சென்.மேரிஸ் விளையாட்டுக்கழ கம் மோதியது.

மிகவும் எதிர்பார்ப்புடன் நடை பெற்ற முதல் பாதியாட்டம் கோல் எதுவும் இன்றி முடிவடைந்தது.

இரு அணி வீரர்களும் கோல் அடிக்க முயற்சி செய்தும் ஆட்ட நேரம் முடியும் வரை இரு அணி வீரர்களால் கோல் எதனையும் பெற முடியவில்லை.

இறுதியாக வெற்றியை தீர்மா னிப்பதற்கான சமநிலை தவிர்ப்பு உதை வழங்கப்பட்டது.

இதில் 3:0 என்ற கோல் கணக் கில் சென்.செபஸ்ரியன் விளையா ட்டுக்கழகம் வெற்றி பெற்று சம்பி யன் ஆகியது. (க)

# வெற்றியுடன் விடைபெற்றார் ஸ்வாஞ்டைகர்



ஜேர்மனி தேசிய காற்பந்தாட்ட அணியின் உணர்ச்சிபூர்வமான தலைவரான பஸ்டியான் ஸ்வாஞ் டைகர் வெற்றியுடன் சர்வதேசக் காற்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து விடைபெற்றார்.

ஜேர்மனி. பின்லாந்து அணிக ளுக்கிடையிலான சிநேகபூர்வ போட்டியே 32 வயதான ஸ்வாஞ் டைகரின் இறுதி சர்வதேசப் போட் டியாக அமைந்திருந்த நிலையில் இப்போட்டியின் பரிசளிப்பு நிகழ்வின் போது ஸ்வாஞ்டைகர் அழுதிரு ந்தார்.

இங்கிலாந்து பிறீமியர் லீக்கின் மத்திய கள வீரராகவிருக்கும் ஸ்வா ஞ்டைகர் 2004 ஆம் ஆண்டு அறிமுகத்தை மேற்கொண்டிருந் தார். அது முதல் 121 போட்டிகளில் ஜேர்மனிக்காக பங்குகொண்டு 24 கோல்களை ஸ்வாஞ்டைகர் பெற்றார்.

போட்டியின் 66 ஆவது நிமி டத்தில் மாற்று வீரரால் மாற்றப்பட்ட ஸ்வாஞ்டைகருக்கு அரங்கமே எழுந்து நின்று மரியாதை அளித்தி ருந்தது. இப்போட்டியில் 2:0 என்ற கோல்கணக்கில் ஜேர்மனி வெற்றி பெற்றிருந்தது.

2014 ஆம் ஆண்டு உலகக் கிண்ணம் வென்ற ஜேர்மனி அணி யில் இடம் பெற்றிருந்த ஸ்வாஞ் டைகர் ஜேர்மனி சார்பாக அதிக போட்டிகளில் விளையாடிய நான்கா வது வீரராக ஓய்வு பெறுகிறாரே தவிர ஐரோப்பிய சம்பியன் ஷிப் போட்டிகள் 18 இல் பங்குகொண்டு அத்தொடரில் அதிக போட்டிகளில் பங்குபற்றிய ஜேர்மனிய வீரராக விளங்குகிறார். (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# வதிரி டயமன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப் போட்டியில் யங்ஹென்றீஸ்

புத்தூர் விக்னேஸ்வரா விளையா ட்டுக்கழகம் நடத்திய உதைபந் தாட்டப் போட்டியில் நேற்று முன்தி னம் முதலாம்திகதி அன்று இடம்பெற்ற முதலாவது மின்னொளியிலான அரையிறுதி ஆட்டத்தில் வதிரி டய மன்ஸ் அணியை எதிர் இளவாலை யங்ஹென்றீஸ் அணி மோதியது.



முதலாவது பாதியாட்டத்தின் 6 ஆவது யங்ஹென்றீஸ் வீரர் ரூபன் கோல் போட்டார். 15 ஆவது நிமிட த்தில் மீண்டும் டயமன்ஸ் அணி கோல் காப்பாளரின் தவறால் யங் ஹென்றீஸ் அணிக்கு நேர் உதை வழங்கப்பட்டது.

அதனை கோலாக மாற்றினார் மதுசன். முதல் பாதியாட்டம் 02:00 என்ற அடிப்படையில் ஹென்றீஸ் ஆதிக்கம் செலுத்தியது. இரண்டா வது பாதியாட்டமும் ஹென்றீஸ் வசம் ஆட்டம் இருந்தது. ஆட்டத் தின் 63 ஆவது நிமிடத்தில் ஹென் றீஸ் கோல்காப்பாளர் எல்லைப் பர ப்பை மீறி பந்தை தடுத்தார். நடு வரால் சிவப்பு அட்டை காட்டப்பட் டது. கோல் காப்பாளர் போட்டியில் இருந்து வெளியேற்றப்பட தமக்கு கிடைத்த நேர் உதைப்பை டயம ன்ஸ் வீரர் அரவிந்தன் கோல் போட்டு அணியின் முதல் கோலை பதிவு செய்தார். டயமன்ஸ் அணி க்கு மூலை உதைப்பிலான இலகு வான கோல் வாய்ப்பு தவறவிடப் பட்டது. இறுதியில் 02:01 என்ற ரீதி யில் டயமன்ஸ் அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு தெரிவானது யங்கென்றீஸ் அணி. (க)

# உள்ளக விளையாட்டு பயிலகம்

யாழ்.மாவட்ட மேசைப்பந்து, பட்மின்ரன்,கரம்,சதுரங்கம் ஆகிய விளையாட்டுநர்களின் பயிற்று நர்கள் இணைந்து உள்ளக விளை யாட்டு பயிற்சியகம் ஒன்றினை திரு நெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் 03.09.2016 சனிக்கி ழமை இன்று மாலை 4 மணிக்கு ஆரம்பித்து வைக்கிறார்கள். இந்த பயிலகத்தில் விளையாட்டுக்களை பயில விரும்புவர்கள் இணைந்து பயிற்சிகளை பெற்றுக்கொள்ள முடி யும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பான் கீ மூனின் கவ...

இந்த இரு போராட்டங்களிலும் நூற்றுக் கண்க்கான மக்கள் கலந்து கொண்டு ஐ.நா செயலாளரிடம் தமது கோரிக்கைகளை கோஷங்கள் மூலமாக முன்வைத்து இருந்தனர்.

நேற்று முற்பகல் 11.45 மணியளவில் உலங்கு வானூர்தி மூலம் பலாலியை வந்தடைந்த ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் பிற்பகல் 01.30 மணியளவில் யாழ்ப்பாணம் வந்தடைந்தார்.

01.45 மணியளவில் வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரேயை அவரது அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

இந்த கலந்துரையாடல் ஆளுநர் அலுவலகத்துக்குள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது சட்டத்திற்கும் மனிதவுரிமைகளுக்குமான பாதுகாவலர் நிறுவனத்தின் ஏற்பாட்டில் வெளியே கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று நடைபெற்றது. இந்தப் போராட்டத்தில் நூற்றுக்கணக்கான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டிருந்த போதிலும் அதனை ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பார்வையிட ஆர்வம் காட்டவில்லை. மாறாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுபவர்களை சந்திப்பதை தவிர்க்கும் வகையில் பின்பாதை வழியாக போகும் போது முன் பாதையூடாக சென்று போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு கையை அசைத்துக் காட்டியபடி சென்றார்.

இதன்பின்னர் யாழ் பொது நூலகத்துக்கு பிற்பகல் 2.15 மணியளவில் மூன் வருகை தந்தபோது அங்கு மிகப்பெரிய போராட்டம் ஒன்று நடைபெற்றது.

நூலகத்தின் முன்வாயில் பக்கமாக நடைபெற்ற இப்போராட்டத்தினை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, வடக்கு மாகாண சபை உறுப்பினர்களான திருமதி அனந்தி சசிதரன், எம்.கே.சிவாஜிலிங்கம், மயிலிட்டி கடற்தொழிலாளர் கூட்டுறவுச்சங்கம், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கங்கள் என்பன இணைந்து ஏற்பாடு செய்திருந்தன.

இப்போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது காரில் உள்ளே சென்ற ஐ.நா செயலாளர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்திக்காமல் பின்வாயில் ஊடாக வெளியேறிவிட்டார்.

இதனால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் கடும் ஏமாற்றம் அடைந்து கண்ணீர் விட்டு அழத்தொடங்கினர்.

இப்போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூற ஐ.நா அழுத்தம் கொடுக்க வேண்டும் எனவும், இலங்கை மீது சர்வதேச விசாரணை ஒன்று அவசியம் எனவும் ஐக்கிய நாடுகள் சபையின் எழுத்து மூல அறிக்கையில் இருப்பவற்றை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும் மயிலிட்டி உட்பட இராணுவத்தின் வசமுள்ள தமிழர்களின் நிலங்கள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும் எனவும் வடக்கு கிழக்கில் தொடரும் சிங்கள பௌத்த மயமாக்கல் உடன் நிறுத்தப்படவேண்டும், அரசியல் கைதிகள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இந்தப் போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கண்ணீர்விட்டு கதறியழுதது அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியது.

குறித்த ஆர்ப்பாட்டம் அமைதியான முறையில் நடைபெற்றபோதிலும் விசேட அதிரடிப் படையினர் களமிறக்கப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பொலிஸாரும், புலனாய்வாளர்களும் பெருமளவில் அங்கு நின்றதோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்களையும் புகைப்படம் பிடித்துக்கொண்டிருந்தமையையும் காணமுடிந்தது.

போராட்டக்காரர்களை மூன் சந்திக்காத போதிலும் ஐ.நா பிரதிநிதி ஒருவர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்தித்து அவர்களது கோரிக்கைகளை கேட்டறிந்தார்.

இதன்போது தமிழ்த்தேசிய மக்கள் முன்னனியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச் செயலாளர் ஆகியோரினால் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

பொதுநூலகத்தில் நடைபெற்ற சந்திப்பு முடிவுற்றதும் கூட்டமைப்பினர் வெளியே வந்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை சந்திக்க முயற்சி செய்த போது போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களால் கூட்டமைப்பு துரோகம் இழைத்து விட்டது என கோஷம் எழுப்பப்பட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கு எதிராகவும் கூக்குரல் இட்டனர்.

இதனால் மக்களை சந்திப்பதை நிறுத்தி விட்டு கூட்டமைப்பினர் அங்கிருந்து சென்று விட்டனர்.

ஐ.நா செயலர் நூலகத்தின் பின்வாயில் வழியாக செல்லும் போது அங்கு ஒலி பெருக்கியுடன் தனித்து நின்று ஐ.நா செயலர் முன்பாகவே சர்வதேச விசாரணையை கோரினர் (4)

## வடக்கு மாகாண...

பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் வடக்கு முதலமைச்சரால் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ் பொது நூலகத்தில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற சந்திப்பின்போதே மேற்படி விபரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

இச்சந்திப்புத் தொடர்பில் முதலமைச்சர் கருத்துத் தெரிவிக்கையில்,

கடத்தப்பட்டு காணாமல்போனோர் தொடர்பான விபரங்கள் அனைத்தும் புத்தக வடிவில் அச்சிட்டு வழங்கப்பட்டுள்ளது.

வடக்கில் முப்படையும் அபகரித்து வைத்துள்ள சகல காணி தொடர்பான விடயங்களும் வழங்கப்பட்டுள்ளன.

நல்லிணக்கத்துக்காக பாரியளவு பணம் செலவளிக்கப்போவதாக கூறியுள்ளனர். ஆனால் போர்க்குற்ற விசாரணையை சரியாக நடத்தாமல் எப்படி நாங்கள் நல்லிணக்கத்தை எற்படுத்த முடியும்? இது தவிர அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர், யுத்தத்தில் பாதிக்கப்பட்டோர் தொடர்பிலும் முடிவுகள் எட்டப்படவில்லை என்பதை சுட்டிக்காட்டினேன் என்றார். (4)

## ஐ.நா சபையின்...

பட்டிருக்குமாயின் பல மனித உயிர்களைக் காப்பாற்றியிருக்கலாம்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது ஐ.நா பாரிய தவறுகளை இழைத்திருப்பதாக வும், அது சிரத்தையுடன் செயற்பட்டிருக்குமா யின் பல மனித உயிர்களைக் காப்பாற்றியி ருக்கலாம் என்று ஐ.நா செயலாளர் நாயகம் நேற்று கொழும்பில் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

கொடும்போர் இடம்பெற்ற இறுதி ஏழு மாத காலப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டதாகத் தெரிவித்த பான் கீ மூன், யுத்த வெற்றி இலங்கைகக்கு அளப்பரிய நன்மைகளை வழங்கியிருக்கின்ற போதிலும், அதற்காக அதியுச்சக் கட்ட விலை கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

பான் கீ மூன் நேற்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்ற விசேட நிகழ்வொன்றிலேயே இந்தத் தகவல்களைத் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நா செயலாளர் பான் கீ மூன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவது குறித்த உலகின் செயற்பாடு என்பது மிகவும் கடுமையான ஒரு சோதனையாக இருக்கிறது. யுத்தத்தின் இறுதிப் பகுதியில் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். இலங்கையில் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவந்தமை இந்த நாட்டிற்கு அளப்பரிய நன்மைகளைக் கொடுத்திருக்கிறது. ஆனால் அதற்காக அதியுச்ச விலைகொடுக்கப்பட்டிருக்கிறது.

இலங்கையர்கள் தற்போது கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து மீளாய்வு செய்வதிலும், நல்லிணக்க நடவடிக்கைகளிலும் ஈடுபட்டு வருகிறார்கள். ஐ.நா தான இழைத்த தவறுகள் குறித்தும் விசாரணை செய்தது. இதற்காக நான் ஒரு நிபுணர்கள் குழுவொன்றினை அமைத்து விசாரணை செய்தேன். இதனூடாக ஐ.நா அமைப்பும், அதன் உறுப்பு நாடுகளும் கட்டமைப்பு ரீதியான தவறுகளை இழைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

ஐ.நா இலங்கையின் இறுதி ஏழுமாதகாலப் பகுதியில் பாரிய தவறுகளை இழைத்திருக்கிறது. இந்தக் காலப்பகுதியில் ஐ.நாவும், அதன கொழும்பு அலுவலகமும், உறுப்பு நாடுகளும் சிரத்தையுடன் [illegible] உயிர்களைக் கா[illegible] தெரிவித்தார்.

## யாழ்ப்பாணத் தமிழ் சங்கத்தின் பாரதி விழா

யாழ்ப்பாணத் தமிழ் சங்கம் நடத்தும் பாரதி விழா யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் இன்னியம் எனும் இசைச் சங்கமமும் மற்றும் இந்திய அறிஞர் ரவி கல்யாணசுந்தரம் வழங்கும் பாரதி உலக மகாகவி எனும் சிறப்புரையும் இடம்பெறவுள்ளது.

# மரண அறிவித்தல்கள்



## திருமதி சபிதா மெய்யழகன்

அல்வாய் வடக்கு அல்வாயினை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சபிதா மெய்யழகன் நேற்று (02.09.2016) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் மா.மெய்யழகன் (அன்பழகன், அதிபர் மாதனை மெ.மி.த.க. பாடசாலை ) அவர்களின் பாசமிகு மனைவியும், இங்கிதை (கணிதப்பிரிவு மாணவி - யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை) அவர்களின் பாசமிகு தாயாரும், பாலகிருஷ்ணன் - திலகவதி (அமரர்) அவர்களின் ஏக புத்திரியும், மாணிக்கம் - செல்லம்மா (அமரர்கள்) அவர்களின் அன்பு மருமகளும், மா.சின்னத்துரை (அமரர்), பாலசிங்கம் இரத்தினம் (அமரர்), மா.கந்தசாமி, மா.நடராசா (அமரர்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"கிருஷ்ணபதி"
அல்வாய் வடக்கு, அல்வாய். (சி-5634)

தகவல் :
குடும்பத்தினர்

## சண்முகம் சிவராசா



காரைநகர் எஸ்.எம் கேணியடி, மல்லிகையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சிவராசா நேற்று (02.09.2016) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - நாகம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், அமராவதி அவர்களின் அன்புக் கணவரும், இராசமலர், தாட்சாயினி, சசிகரன், உமாகாந்தன், பகீரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும். மகேஸ்வரன், மகேந்திரன், நித்தியா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அன்புக் குமரன், செந்தூரன், அபிராமி, வர்சினி, தனுசன் ஆகியோரின் பேரனும், காலஞ்சென்றவர்களான பாலச்சந்திரன், பாலகிருஷ்ணன், அருணகிரிநாதன் ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

எஸ்.எம்.கேணியடி,
காரைநகர். (சி-5633)

தகவல் : குடும்பத்தினர்
தொ.பே : 021 221 1783

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW SCIENCE WORLD
VICTORY MUST
NEW SCIENCE WORLD
Navalar Road-Brown Road Junction, Jaffna
Web : www.physicsocean.com E-mail : info@physicsocean.com
To Inquire : 077 336 4055
G.C.E (A/L) 2017
Day Classes
திங்கள் - வெள்ளி
பௌதிகவியல் — திரு. R. குகன், திரு. R. குமரன்
இரசாயனவியல் — திரு. டயஸ், திரு. K.T. சிவகுமார்
உயிரியல் — திரு. S. பொன்திவாகரன், திரு. V. உமாசங்கர்
இணை.கணிதம் — திரு. S.S. செந்தில்நாஜ்
ஆரம்பம் :- 05.09.2016 திங்கள் காலை 7.00 மணி
(C-5630)

# அரசியல் தீர்வு...

நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்காவிடில் நாட்டில் நிரந்தரமான அமைதி ஏற்படாது என தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஐ.நா. செயலாளர் நாயகத்திடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தமிழ் மக்களின் பிரச்சனைகளை விரைவில் முடிவுக்குகொண்டு வரக்கூடியதாக இருக்கும் என ஐ.நா செயலாளர் தெரிவித்துள்ளபதில் திருப்தி கரமானதாக அமைந்துள்ளதெனவும் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

நேற்றைய தினம் யாழிற்கு வருகை தந்திருந்த ஐ.நா செயலாளர் நாயகம் பான கீ மூன் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உறுப்பினர்களை யாழ் பொது நூலகத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

குறித்த சந்திப்பு தொடர்பாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்மந்தனை தொடர்பு கொண்டு கேட்டபோது இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது மக்களின் அனைத்து பிரச்சினைகள்தொடர்பாகவும்மிக விளக்கமாக கலந்துரையாடி யுள்ளோம். விரைவில் எமது பிரச்சினைகளுக்கு முடிவு வரும் என்ற வகையில் ஐ.நா. செயலாளருடைய பதில் திருப்திகர மானதாக இருந்தது.

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்சியாக எமக்கு தேவை என்பதை தெரிவித்திருந்தோம்.

வட.கிழக்கில் காணாமல் போனோர். பொது மக்களின் காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பாக அடிக்கடி அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்ற போதிலும் அவர்கள் நல்ல பதிலை தருவதாக கூறி இதுவரை தீர்வினை தந்ததாக இல்லை.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்படவில்லை, மக்களின் காணிகள் விடுவிக்கப்படவில்லை. இவை தொடர்பாக அரசுக்கு அழுத்தத்தை தெரிவிக்க வேண்டும் என கோரியிருந்தோம்.

வரவிருக்கும்புதிய அரசியல்யாப்பு தொடர்பாக மிக தெளிவாக தெரிவித்திருந்தோம்.

நாட்டை பிரிப்பது எமது நோக்கமல்ல என்பதையும் எமது மக்களின் இறைமை அடிப்படையில் உச்சப்படியான சுய ஆட்சி முறை அமைய வேணடும் என்பதை வலியுறுத்தி இருந்தோம். அதாவது உள்ளக சுயாட்சி முறை வேண்டும் என தெரிவித்தோம்.

நிரந்த அரசியல் தீர்வு கிடைக்காவிடில நாட்டில் நிரந்தரமான அமைதி ஏற்பட மாட்டாது என தெளிவாக சுட்டிக்காட்டியிருந்தோம் எமது கோரிக்கைகளுக்கும் கருத்துக்களுக்கும் அவருடைய பதில் திருப்பதிகரமானதாக அமைந்திருந்தது.

ஜனாதிபதியிலும் பிரதமரிலும் நம்பக்கை உள்ளது எனவும் அவர்களிடம் எமது பிரச்சனைகள் குறித்து கூடிய அழுத்தத்தை தெரிவித்துள்ளதாக கூறியிருந்தார்.

மேலும் அவர் வருகை தரும் வீதிகளில் மக்கள் கவனயீர்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமையையும் தான் அவதானித்ததாகவும் மிகவும் மன வருத்தம் அடைவதாகவும் தெரிவித்தார்.

அவர்களுடைய பிரச்சனைகளுக்கு மிக விரைவில் தீர்வு இந்த அரசின் மூலம கிடைக்கும் என தான நம்புவதாக தெரிவித்துள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார். (9)

# கண்டுகொள்ளாத பான் கீ மூன்...

ருந்தார்.

யாழ்.குடாநாடு முழுவதிலும், பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர், பொலிஸ் புலனாய்வாளர்கள், இராணுவ புலனாய்வாளர்களின் பலத்த பாதுகாப்பின் மத்தியில் வருகை தந்தவர், ஆளுநரின் வாசஸ்தலத்திற்கான பின் வாயிலினால் சென்றார்.

இதனால் காலையிலிருந்து மாவட்ட செயலகத்தின் முன்பாக வெயிலில் ஐ.நா செயலாளரின் வருகையை எதிர்பார்த்திருந்த மக்களை கண்டுகொள்ளாமல் சென்றதுடன், வீதியில் இறங்கியவுடன் மக்களுடன் கதைக்காமல் சென்றுள்ளார்.

இதனால் மக்கள் அனைவரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

இருந்த போதும், தமது கோரிக்கைகள் பொறிக்கப்பட்ட பதாதைகளை கைகளில் ஏந்தியவாறு, சர்வதேச விசாரணை வேண்டுமென்று வலியுறுத்தியதுடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான விசாரணை மற்றும் அரசியல் கைதிகளின் விடுதலை, வலி. வடக்கு மீள்குடியேறம் உட்பட இராணுவத்தில் சரணடைந்தவர்களை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி உரத்த குரலில் கோஷங்களை எழுப்பியவாறு மக்கள் அணிதிரண்டு பாதை முழுவதும் நின்றார்கள்.

ஆனால், மக்கள் வீதியோரத்தில் நின்றதைக்கூட கண்டுகொள்ளாமல் ஐ.நா செயலாளர் வட மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இருந்து யாழ். பொது நூலகத்திற்குச் சென்றார்.

அங்கும் பொது நூலகம் முன்பாக சுமார் இரண்டு மணி நேரம் வெயிலில் காத்துக்கொண்டிருந்த மக்களை சந்திக்காமல் பின் வழியாகச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)




காணி விற்பனை
1. சபாபதி லேன் கொக்குவிலில் 1 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
2. பலாலி வீதி. திருநெல்வேலியில் 6 1/2 பரப்புக் காணி துண்டுகளாகவும் மொத்தமாகவும் விற்பனைக்கு உண்டு.
3. கே.கே.எஸ் வீதி. கொக்குவிலில் 8 பரப்பு. 13 குழி விற்பனைக்கு உண்டு.
077 1671 174
077 7286 061
(5804)

V2 TRAVELS
11/09/2016 ஞாயிற்றுக்கிழமை
பருத்தித்துறையில் எமது 5வது கிளை திறப்புவிழாவில் பணப்பரிசு
நீங்கள்
ரூபா 1000/= பணப்பரிசு
வெளிநாட்டுக்கு பார்சல் அனுப்பப்போறீங்களா?
விமானப்பயணச்சீட்டு எடுக்கப்போறீங்களா?
UK - 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS
முற்பதிவு ஆரம்பமாகி விட்டது
முற்பதிவுகளுக்கு - 0768226240

Architectural CAD Center
Personal and Group Classes
Jaffna - Vavuniya - Colombo
Auto CAD
2D-drawing & 3D Modeling
Lecturer By: Mr.K.N.Mugunthan (D/A)
Cert. in Auto CAD [Software (2D &3D)]
University of Peratheniya
Cert. in Auto CAD [Advance 3D - Modeling]
University of Moratuwa
Cert. in Auto CAD [2D-Drawing & 3D-Modeling]
Open University of Sri Lanka
Cert. in Auto CAD(1st Class)[2D&3D]
University of Colombo
Link:0775116320-0718617972
(C-5631)

NEW SCIENCE HALL
KANNATHIDDY, JAFFNA
2017 A/L
DAY CLASSES
(2016 A/L பரீட்சைக்கு தோற்றியவர்கட்குரியது.)
திங்கள் தொடக்கம் வெள்ளி
PHYSICS — திரு.S. சோதிலிங்கம், திரு.G. பிரபா
CHEMISTRY — திரு.K. சிவத்திரன் + திரு.S.T. உமாசங்கர்
BIOLOGY — எமது வழமையான ஆசிரியருடன், திரு.T. கெங்காதரன்
COM.MATHS — திரு.P. செந்தில்நாதன், திரு.S. சிவகரன்
ஆரம்பம் :- 05.09.2016 திங்கள் காலை 9.30 Am
தொடர்புகளுக்கு :- 0777 917611
(C-5611)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.